WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்



# AKARAM
# அகரம்

14. ஐப்பசி - 13.கார்த்திகை 2011

சுவடி: 06 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | கர வருடம்

# தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி!

## Justice delayed is justice denied




FREE Magazine

FREE CIRCULATION:

Germany, Switzerland, France, England, Denmark, Norway, Holland, Sweden, Italy, Canada

# Lycamobile
## ஐக்கிய ராஜ்ஜியம்

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 1/2p /min | 16p /min |
| இலங்கை | 7p /min | 10p /min |
| இந்தியா | 1/2p /min | 1/2p /min |
| மலேசியா | 1/2p /min | 5p /min |

## 40க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான அழைப்புக்கள்

# 1/2p /min



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| நெதர்லாந்து | 5p /min | 19p /min |
| அமெரிக்கா | 4p /min | 4p /min |
| கனடா | 4p /min | 4p /min |
| சுவிட்சர்லாந்து | 5p /min | 20p /min |

தற்பொழுது உங்கள் Lycamobile லை மீள்நிரப்பும்பொழுது லைக்காமொபைலில் இருந்து Lycamobile லுக்கு இலவசமான குறுந்தகவல் சேவையும் இலவச அழைப்புக்களும் வழங்கப்படுகிறது.

£5 ⇨ இலவச அழைப்பு 100 நிமிடம் அல்லது 100 குறுந்தகவல் (SMS)

£10 ⇨ இலவச அழைப்பு 250 நிமிடம் அல்லது 250 குறுந்தகவல் (SMS)

£20 ⇨ இலவச அழைப்பு 500 நிமிடம் அல்லது 500 குறுந்தகவல் (SMS)

£30 ⇨ இலவச அழைப்பு 2000 நிமிடம் அல்லது 2000 குறுந்தகவல் (SMS)

## லைக்காவின் தரம் நம்மையெல்லாம் லைக்க வைக்கும் தரம்.

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.co.uk 0207 132 0322**

அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் விசேட விலைக்கழிவு நேரங்களிலும் மற்றும் மாதத்தில் இரண்டு மீள்நிரப்புதலுக்கும் மட்டுமே பொருந்தும் மீள்நிரப்பிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால்லைக்காமொபைல் ப்ளஸின் வழமையான கட்டணமான ஒவ்வொரு அழைப்புக்கும் 7p கும் குறுந்தகவலுக்கு 9p கும் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

top-up Sainsbury's TESCO POST OFFICE PayPoint payzone epay Wilkinson Currys phones 4u MORRISONS Aleef Budgens Costcutter

# SHELVA ZUG GmbH

BIRKENMATT-23, 6343 ROTKREUZ

**WEB: www.shelvazuggmbh.com E-MAIL: shelvazuggmbh@bluewin.ch**

**TEL 041 790 64 63, FAX 041 790 64 68, NAT 079 514 64 28**

## வங்கிக்கடன் 5.9% இலிருந்து

## வீட்டுக்கடன் 1.5% இலிருந்து

- ★ 30% தொடக்கம் வாகனக்காப்புறுதி
- ★ வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கான மருத்துவக்காப்புறுதி
- ★ ஆயுட் காப்புறுதி
- ★ மருத்துவக் காப்புறுதி
- ★ நிறுவனங்களிற்கான காப்புறுதி மற்றும் அனைத்துக் காப்புறுதிகளும்...




★ புதியவீடு கட்ட
★ பழைய வீடுகள் திருத்திக்கொள்ள
★ கட்டிய வீட்டை வாங்க
★ கடைகள், RESTAURENTகள்
★ வாடகைக்கு வாங்க



புதியவீடு கட்ட எம்மை நாடலாம்

## tMedia Network

நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

ஐப்பசி - கார்த்திகை 2011 சுவடி 06 | October-November 2011 Issue 06

தலைமை ஆசிரியர்:
திரு. தூயவன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

உள்ளடக்கப் பொறுப்பாளர்:
திரு. த. இரவீந்திரன்

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. ஆதவன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. வி. சபேசன் (ஜேர்மனி)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)
செல்வி. தணிகா சுப்பிரமணியம் (ஜேர்மனி)
திரு. அனலை நிதிஸ் ச. குமாரன் (கனடா)

தொடர்புகளுக்கு:
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: editor@akaram.eu

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

அன்பான வாசகர்களே உங்களதும் வணிகர் பெருமக்களதும் ஆதரவால் அகரத்தின் ஆறாவது படைப்பு உங்களிடம் வந்துள்ளது. புலத்தில் தமிழர் பற்றிய அரசியல் அறிவும் தனி மனித சமூகப் பண்பாட்டு உயர் ஒழுக்கங்களும் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே அகரம் வருகிறது. இந்த இலட்சியப் பயணத்தில் எவரது விட்டுக் கொடுப்புகளுக்கும் ஆதரவு வழங்க அகரம் தயாராக இல்லை. இந்த வகையில் அகரத்தை புரிந்து கொள்ள நாம் பணிவோடு கேட்டுக் கொள்கிறோம்.

யேர்மனி வூபெற்றாலில் நடந்து முடிந்த உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில் கலந்து கொண்ட பல அறிஞரும் புலத்தில் தமிழர் மொழியும் பண்பாடும் பேணப்பட வேண்டிய அவசியத்தை ஆணித்தரமாக உரைத்துச் சென்றனர். ஈழத்தில், சிங்களம் திட்டமிட்ட இன அழிப்பின் மூலம் தமிழரின் அனைத்து தனித்துவ அடையாளங்களையும் வேரோடு அழித்து சிங்களத்தின் ஒரே நாடு ஒரே மக்கள் என்ற பொன் மானைக் காட்டி உலகில் அரசியல் வியாபரம் நடத்துகிறது.

*1920* முதல் சிங்களத்துடன் பேசி ஏமாந்து அடிவாங்கிய தமிழினம் *1980*ல் ஆயுதம் தூக்கிய போது உலக நாடுகள் அனைத்தின் உதவிகளுடன் சிங்களம் தமிழின அழிப்பை நடத்தியது. போர்க் குற்ற விசாரணைக்கு உள்ளாகாது தப்பிக்க இன்று சிங்களம் கடுமையாகப் போராடுகிறது. இதற்கு மாற்றீடாகச் சிங்களம் மீள் கட்டுமானம் அகதிகள் மற்றும் போராளிகள் புனரமைப்பு எனக் காலம் கடத்தி எதுவுமே செய்யாது ஏமாற்றி வருகிறது.

கொடாக் கண்டன் மன நிலை கொண்ட சிங்களம் தமிழரின் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதாகப் பாவனை செய்து தன் மேல் உள்ள வெளி நாடுகளின் அழுத்தத்தை எதிர் கொள்கிறது. பேச்சில் வெளி உலகின் தலையீடு இருந்தால் சர்வ தேச ஏற்புடைய தீர்வுக்கு இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதைச் சிங்களம் அறியும். எனவேதான் தீர்வு உள்நாட்டில் உருவாக வேண்டும் என்ற கோட்பாட்டில் தமிழர் தரப்புடன் நேரடியாகத் தீர்வு காணப் போவதாகக் கூறுகிறது. ஆண்டான் அடிமைக்கு இடையில் எப்படி அடிமையின் உரிமை உயிர் வாழ முடியும்?

சகல அடக்கு முறைக்கும் மரண அச்சுறுத்தலுக்கும் உள்ளான தமிழர் தரப்பு தமிழர் உரிமை பற்றிப் பேசித் தீர்வு காண்பது எப்படி? பொறிக்குள் சிக்கிய எலியாக தமிழர் தேசியக் கூட்டமைப்பில் உள்ள உண்மையை பா.உ.சிறீதரன் மிக விளக்கமாக யேர்மனியில் சொல்லி விட்டார்.

ஏறக்குறைய இதே பொறிக்குள் சிக்கித் தவித்த பலஸ்தீனத்

தலைவர் இப்போ ஐ.நா.வை நாடி உள்ளார். ஆனால் புலிகளால் சுதந்திரமாக வெளியில் பேசியதை இப்போ பூட்டிய சிறைக்குள் எப்படிப் பேசிப் பெற முடியும் எனத் தமிழர் தேசியக் கூட்டமைப்பு சிந்திக்க மறுக்கிறதே? நெருக்கடி மூலம் தீர்வைத் திணித்து விட்டுத் தமிழரும் சிங்களவரும் ஏற்கும் படியான தீர்வு என்ற பிச்சையைப் பெறவா இத்தனை போராட்டம் இத்தனை அழிவு?

பேசுங்கள் பேசுங்கள் என எல்லோரும் புத்திமதி சொல்கிறார்கள். 2012 மார்ச் வரை இதே பல்லவி கே.பி.முதல் இந்து ராம், எரிக் சொல்கைம் வரை பாடக் கேட்கலாம். இதுவரை 10ச் சுற்றுச் சுற்றி விட்டார்கள். அவலத்தில் சிக்கி உள்ள உறவுகளுக்கு வாய்க்கு அரிசியைக் கூடப் பெற்றுக் கொடுக்க முடியாத பேச்சும் அதன் பயனும் சிங்களத்துக்கு மட்டுமாகவே உள்ளது.

இன்றுவரை தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட புலிகள் நடத்திய பேச்சுக்களே பெற்றுக் கொடுக்க வில்லை என்பதாவது உங்கள் நினைவில் இருக்கிறதா? தமிழராய் தன்மானத்தோடு வாழ்ந்து காட்டுங்கள். உங்களுக்கு அழுத்தம் தரும் உரிமை கொண்ட வெளி உலகச் சக்திகளுக்கு திருப்பி அழுத்தம் கொடுக்கும் உரிமையும் உங்களுக்கு இருக்கவேண்டும். அந்த உரிமை உங்களிடம் இல்லை என்றால் தமிழ்மக்களின் அரசியல் உரிமை பற்றிப் பேசும் தார்மீகம் உங்களிடம் இருக்கிறதா என உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

இப்போது பேசப்போவது இறுதியான உறுதிப் படுத்தப் பட்ட தீர்வுக்கு தமிழ் இனத்தைக் கட்டிப் போட்டு விடும். இது எதிர் காலத் தமிழர் பரம்பரை சிங்களத்தின் அடிமைகளாக இனிமேல் என்றைக்குமே அரசியல் அபிலாசை உரிமை பற்றிப் பேச முடியாது என்பதைத் தமிழர் மனதில் ஆழப் பதிய வைக்க வேண்டிய விடயம். இப்படியான அடிமைத் தனத்தைப் புலம் வாழ் ஈழத் தமிழரும் உலகத் தமிழரும் எப்படி அனுமதிக்க முடியும்? எனவேதான் தமிழர் தரப்பில் பேசும் எவராக இருந்தாலும் த.தே.கூ. உட்பட வெளிநாடுகளின் அல்லது ஐ.நா.வின் கண்காணிப்பிலும் வெளிப் படைத் தன்மையுடனும் பேச உடன் படுங்கள் என்கிறோம். பேசுங்கள் ! வெளிநாடுகளின் கண் காணிப்பிலும் கட்டுப் பாட்டிலும் மட்டுமே பேசுங்கள் !

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
அகரம் குழுமம்!...

# உள்ளே...


ஐ.நா.! ஈழம்!! பாலஸ்தீனம்!!
எங்கே என்ன நடக்கிறது?.............................. 06

தமிழக முதலமைச்சரின்
புதிய அவதாரம்!........................................ 12

தாமதிக்கப்பட்ட நீதி
மறுக்கப்பட்ட நீதி!..................................... 14

வருவாய் தரும் முல்லைத்தீவு! ........................ 18

அன்னா ஹசாரே...!
அடங்குமா இந்திய ஊழல்?!........................... 27


சிங்களத்தின்
கணக்கும் வழக்கும்!.................................... 34

சிங்கள புரட்சிக் கட்சிக்குள்
வெடிப்பு பின்னணியிலுள்ள
தமிழர் பிரேமகுமார...................................... 40

தமிழ்நாட்டில் நிலவும் ஈழத் தமிழர்
ஆதரவு அலை காத்திரமான
ஒரு தீர்வை நோக்கி இட்டுச் செல்லுமா?............. 45

உடைந்து சரிவடையும்
உலகப் பொருளாதாரம்!................................ 52

கிணறு வெட்டப்போய்
பூதம் வந்த கதை......................................... 58




இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா.மனித உரிமை அமர்வில் போர்க் குற்ற விசாரணை கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்ற எதிர் பார்ப்பில் மிதந்த அனைத்து தமிழ் உணர்வாளர்களும் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். ஐ.நா. எப்படிப் பட்டவர்களின் ஆதிக்கத்தில் உள்ளது என்ற உண்மையை ஈராக்கின் மீது போர் தொடுக்கப்பட்ட நாளில் இருந்தே ஐ.நா.வின் செயற்பாடுகளை அவதானித்த அனைவரும் அறிவர்.

ஈழப் போரின் போதும், பின்னரும் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், அவரது முதன்மை அதிகாரி விஜய் நம்பியார் ஆகியோர் மிக மோசமாக நடந்த சந்தர்ப்பங்கள் ஒன்று இரண்டல்ல, அவை இன்னமும் தொடர்கின்றன. ஒரு சிறு முன்னேற்றம் பான் கீ மூனுக்கு மறு நியமனம் கிடைத்து விட்டது. எனவே கொஞ்சம் மகிந்தவின் கட்டை மீற முயலுவார். ஆனால் சீனாவும் இந்தியாவும் இருக்கும் வரை மகிந்தர் வரப்பிலும் பம்பரம் ஓட்டி வித்தை காட்டுவார்.

அமைதிப் பேச்சில் இருந்து இந்தப் போருக்கு திசை திருப்பி அதை நடத்திய நாடுகளில் இந்தியாவின் பங்கு இலங்கை அரசினது பங்கினை விடவும் மிக அதிகம் என்பதை இன்னும் பலர் உணராமல் இருப்பதே அவர்களின் இத்தகைய எதிர்பார்ப்புகள் உருவாகவும் உடைந்து போகவும் காரணமாகும். இதன் மூலம் மிகுந்த பிரயத்தனத்தின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லப் பட்ட பேச்சை மீண்டும் சிங்களத்தின் குசினிக்குள் குசு குசு பேச்சு நிலைக்கு இந்தியா தள்ளிவிட்டதை தமிழர் யாரும் நினைப்பதே கிடையாது. நாம் படித்த புத்திசாலித் தமிழர்? பலத்த கண்டனங்கள் பிரயத்தனங்கள், சனல் 4ல் வெளியான காணொளிகளின் காரணமாக ஐ.நா. செயலர் தம்மைத் தப்பிக்கும் வகையில் உருவாக்கியதே அவரது மூவர் அடங்கிய நிபுணர் குழு. ஆனால் அந்தக் குழுவின் அறிக்கை மிகக் கடுமையான கண்டனம் விமர்சனம் மற்றும் இலங்கை அரசின் கற்றுக் கொண்ட பாடங்களும் நல் இணக்கம் பற்றிய ஆணைக் குழுவே பலவீனமும் குறைபாடுகளும் கொண்டது எனவும், ஒரு சர்வதேச விசாரணை அவசியம் எனவும் கூறி மூனின் முகத்துக்கே கரி பூசி விட்டதே உண்மை.

இந்த விதந்துரைகள் கண்டனங்களை ஏற்காத இலங்கை இந்திய அரசுகளின் விருப்பத்துக்கு இசைவாக பான் கீ மூன் அறிக்கையை வெளியிடவோ அது பற்றி ஐ.நா.வில் சமர்ப்பிக்கவோ தயக்கம் காட்டிக் கால தாமதம் செய்து பார்த்தார். இதற்கிடையே சனல் 4 தொலைக்காட்சியில் ஸ்ரீலங்காவின் கொலைக் களங்கள் என்ற ஆவணப் படம் உலக அளவில் பெரும் உணர்வு அலை எழுப்பி சர்வதேச அளவில் முள்ளி வாய்க்கால் படுகொலைகளைப் பேச வைத்தது.

இதனால் எழுந்த அலையால் இந்தியப் பாராளுமன்றத்தில் ஐ.நா. நிபுணர் அறிக்கை பற்றிய இந்திய அரசின் நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பப் பட்டது. அதற்குப் பதில் அளித்த இந்திய வெளி உறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்படும் பொழுது அரசு தனது கருத்தை வெளிப்படுத்தும் என்றார். இந்தப் பதிலில் தொக்கி இருந்த "சமர்ப்பிக்கும் பொழுது" என்ற கொக்கியை கருத்தில் எடுக்காதவர்களே ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேறும் என நம்பி ஏமாந்தவர்கள்.

வெளியில் அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷியா என்ற பல நாடுகளும் பல்வேறு நிற சாயத்தைப் பூசிக் காண்பித்தாலும் எல்லா நாடுகளும் கிடைத்ததைச் சுருட்டும் மனப்பான்மை கொண்டே இருக்கின்றன. இந்த நாடுகள் எல்லாம் எமது விடுதலைப் போரைப் பயங்கரவாதம் எனக் கோடு போட்டு சிங்களத்தின் தமிழ் இன அழிப்புப் போருக்கு ரோடு போட்டுக் கொடுத்து கூடவிருந்தே கொலையும் செய்தவர்கள் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

இந்த இடத்தில் நமது ஆய்வாளர் அனைவரும் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தகர்ப்பையும் புலிகள் தடையையும் சம்பந்தப் படுத்திப் பேசியும் எழுதியும் தவறு செய்து வருகின்றனர். புலிகளுக்கு எதிரான தடையை அமெரிக்கா 1997ல் செய்ததும் அது காட்டிக் கொடுத்த கதிர்காமரின் கை வண்ணம் என்பதையும் 2001ல் இரட்டைக் கோபுரத் தகர்ப்பு நடந்த காலவேறு பாட்டையும் மறந்து விடுகின்றனர்.

இன்று ஈழத்தின் நிலை ஒப்பீட்டளவில் பாலஸ்தீனத்தின் நிலையை விடவும் படு மோசமாக உள்ளது என்பதே உண்மை. பாலஸ்தீனத்தில் என்ன நடந்தாலும் அவை உடனுக்கு உடன் வெளியில்

ஆதாரப் படுத்தக் கூடிய செய்திகளாக வந்து விடுகின்றன. அங்குள்ள சில பகுதிகளாவது எப்போதும் ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற உலக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் தொடர்பில் உள்ளன. பாலஸ்தீனத்தில் நடக்கும் மனிதத்துக்கு எதிரான எல்லா வி-தமான குற்றங்களும் இஸ்ரவேலின் ஆக்கிரமிப்புகள் உட்பட சர்வதேச விமர்சனங்களுக்கும் ஐ.நா. வின் கண்டனப் பிரேரணைகளாகக் கூட மாறி விடுகின்றன.

மாறாக, ஈழத்தின் நிலையை எடுத்தால் தமிழரின் பெரும் பகுதி நிலப்பரப்பு கடல் வளம் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு பிற நாட்டு நிறுவனங்களுக்கும் சிங்கள மக்களுக்கும் சொந்தமாகித் தமிழ் மக்களுக்கோ அவர்களின் பிரதி நிதிகளுக்கோ தெரியாது கைமாறிப் போகிறது. தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்த காணிகளும் வளங்களும் புலிப் பயங்கரவாதிகளின் சொத்துகள் எனக் கூறி அரசு எவரையும் அங்கே போக விடாது வைத்திருக்கிறது.

போரினால் படு கொலை செய்யப்பட்ட, மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் காணிகளை மீள் குடியேறவிடாது வளம் அற்ற பற்றைக் காடுகளில் எதுவித வசதிகளும் வழங்காது தமிழ் மக்களை அரசு வைத்திருக்கிறது. வளம் மிக்க பகுதிகள் இராணுவ முகாம்கள் குடியேற்றங்களாக புத்த விகாரைகளாக மாற்றம் பெறுகின்றன. இவை அனைத்தும் போதாது என கிறீஸ் பூதம் என்ற புதுவகை இராணுவ நடவடிக்கை மூலம் மக்களைத் தமது காணிகளில் நுழையவோ வீடுகளில் வாழவோ விடாது பயம் ஊட்டும் கொடுமை நடக்கிறது. பெண்களின் மானமும் கருக்கொள்ளும் திறனும் பல வழிகளிலும் சிதைத்து இனப்படு கொலையை மிக மூர்க்கத்தனமாக நிறைவேற்றி வருகிறது.



இவை அனைத்தும் அரசின் இரும்புத் திரை மறைப்புகளாலும் நிபுணத்துவம் நிறைந்த பொய்ப் பிரச்சார உத்திகளாலும் வெளி உலகின் கவனத்தில் இருந்து மறைக்கப் படுகின்றன. போதாக் குறைக்கு இலங்கையில் தமி-ழரின் அரசியல் உரிமைக் குரலை நசுக்குவதில் இந்திய மத்திய அரசும் தமிழ் மக்களின் அரசி-யல் தலைமையான தமிழர் தேசியக் கூட்டமைப்பைக் கிடுக்கிப் பிடியில் வைத்து சிங்களத்தின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்தி வருகிறது.

## ஐ.நா.! ஈழம்!! பாலஸ்தீனம்!!
## எங்கே என்ன நடக்கிறது?

த.எதிர்மன்னசிங்கம்

இந்தியாவின் இத்திட்டத்துக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் மறைமுக ஆதரவை வழங்கித் தமது பூகோள அரசியல் நலங்களைப் பெற்றுவிடத் துடிக்கின்றன. இவர்களின் இத்தகைய ஆசைகளே புலிகளுக்கு எதிரான தடைகளை ஏற்படுத்தி அமைதிப் பேச்சுகளின் முறிவுக்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைகளுக்கும் உதவின. சனல் 4 வெளிப்படுத்தியதால் இந்த நாடுகள் அனைத்தும் திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் தவிக்கின்றன.

மனித உரிமை மற்றும் தொண்டு நிறுவனங்களின் கண்டனங்களால் ஏதோ செய்கிறோம் என முயன்றாலும் அமெரிக்காவின் வெளி உறவுக் கொள்கைகளால் வெறுப்படைந்துள்ள நாடுகளும் சீனா, இந்தியா, ரஷியாவின் செல்வாக்குக் கொண்டுள்ள நாடுகளும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை அமெரிக்கச் சார்பான ஒன்று என்ற பொதுமையில் பலத்த எதிர்பு அணியாக ஐ.நா.வில் திரண்டு விட்ட நிலையில் பொதுச் சபையிலோ பாதுகாப்புச் சபையிலோ இலங்கைக்கான ஆதரவு கொடி கட்டிப் பறக்கிறது.

இந்திய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் இன்றைய அணுகுமுறை 'ஊரான் நெய்யோ பெண்டாட்டி கையோ' என்ற மாதிரி ஈழத் தமிழர் எப்படி ஆனாலும் சிங்களத்தின் பார்வை ஒன்றே போதுமே என்னும் நிலையில் உள்ளன. சிங்களமோ நாட்டைக் கூறு போட்டு வெளி நாட்டானுக்கு விற்றாலும் தமிழரின் தாயக நிலம் என எதுவுமே இருக்கக் கூடாது என்பதிலும் தமிழ் இன அழிப்பிலும் முழுமையாகச் செயற்படுகிறது.

செம்மணி, கொக்கட்டிச் சோலை படுகொலைகளுக்கு நடந்தவை போன்றே வன்னிப் போர்க் குற்றத் தடையங்கள் எல்லாம் அழிக்கப் படுகின்றன அல்லது அவை புலிகளின் படுகொலைகளாக ஆதாரப் படுத்தப் படுகின்றன. இதற்காக முன்னாள் போராளிகளின் வாக்கு மூலங்களை ஏற்கனவே அரசு பயன்படுத்தத் தொடங்கிவிட்டது.

பாலஸ்தீனப் பிரச்சினையை எப்படி இஸ்ரவேல் மூலம் அமெரிக்கா தனது மத்திய கிழக்குக் கொள்கை அமுலாக்கத்துக்குப் பயன் படுத்துகிறதோ, இந்தியாவும் அதே வழிமுறையைச் சிங்கள அரசு மூலம் செயற்படுத்துகிறது. அமெரிக்கா ஹமாஸ் அமைப்பையும் பாலஸ்தீன மக்களின் அரசியல் விருப்பையும் அங்கீகரிக்காது இஸ்ரவேலின் ஆக்கிரமிப்பை ஊக்குவிப்பது போன்றே இந்தியாவின் தேவைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிப்பையும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மறுப்பையும் கண்டும் காணாது இருக்கவே விரும்புகிறது.

அமெரிக்கா தனது மக்களே பசியால் வாடும் நிலையிலும் ஆண்டு தோறும் இஸ்ரவேலுக்கு 3 பில்லியன் டொலர் உதவியாகக் கொடுத்து மத்திய கிழக்கில் ஒரு பேட்டை ரவுடியாகப் பயன் படுத்துகிறது. இவற்றைக் கண்டு பொறுக்காத அப்பாஸ் அமெரிக்காவின் பிடியில் இருந்து அமைதிப் பேச்சை வெளியே எடுத்தால் அல்லாது பாலஸ்தீன விடுதலை சாத்தியப்படாது என்ற பட்டறிவுக்கு வந்த படியால் ஒபாமாவின் கடுமையான எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது ஐ.நா. பொதுச்சபையில் அங்கத்துவத்துக்கான விண்ணப்பத்தைக் கொடுத்துள்ளார். அமெரிக்கா தனது வெட்டு வாக்கு மூலம் தடுத்தால் அது அரேபிய நாடுகளின் கோபத்துக்கு மேலும் உள்ளாகும் ஆபத்தை ஏற்படுத்தும் எனச் சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டத் தொடங்கி விட்டார்கள். எப்படியாயினும் ஒபாமா பேசிய கையுடன் பிரெஞ்சு அதிபர் சாக்கோசி மாற்றுத் தீர்வாக ஒரு பார்வையாளர் ஆகவேனும் அங்கத்துவம் கொடுப்பதை உலக நாடுகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார். இதுவும் பாலஸ்தீனத்துக்கான ஆதரவுக்கு நல்ல அடித்தளமாக மாறி முழுமையான அங்கத்துவம் பெற உதவும் என நினைக்கலாம்.

அங்கே முத்தரப்புக் கட்டுக்குள் இருக்கும் பேச்சு வார்த்தை பயனளிக்காது என்ற நிலையில் பரந்த வெளிக்கு அப்பாஸ் நகர்த்தும் போது பரந்த அளவில் பேசப் பட்ட எமது விடுதலைப் புலிகளின் அழிப்பினால் தமிழின அழிவுக்குத் தள்ளும் வகையில் முத்தரப்பு என்று கூட இல்லாது இருதரப்பு என்ற நிலைக்கும் சிங்களத்திடம் தமிழினம் உரிமைப் பிச்சை கேட்கும் நிலைக்கு இந்தியாவும்

த.தே.கூ. கூறும் சர்வதேச(?) சமூகமும் தள்ளும் நிலை உள்ளது. இந்தத் தற்கொலை முடிவைத் தலைமேல் வைத்து செயற்படும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு எப்படித் தமிழரின் ஏகத் தலைமையாக விளங்க முடியும்?

எங்கள் தமிழீழக் கோரிக்கைக்கான தாயகம் சிங்களக் குடியேற்றத்தால் அந்நிய முதலீட்டாளர்களால் ஒவ்வொரு வினாடியும் அபகரிக்கப்படுகிறது. தமிழ் மக்களின் வளங்கள் வாழ்வாதாரங்கள் உயிர் உடமை உரிமைக்கான பாதுகாப்பு உத்தரவாதம் எள் அளவும் இல்லாத நிலையில் பேசும் வரை பேசுவோம் என்ற தத்துவத்தில் வெட்டிப் பேச்சில் காலம் கழிய கடைசியில் வீடும் ஊரும் பேரும் நாடும் இழந்த பின் த.தே.கூ. என்ன பெற்றுத் தரப் போகிறது?

எச்சரிக்கையாக முன்னாள் இந்திய வெளியுறவுச் சேவையில் பணி ஆற்றிய எம்.ஏ.பத்ரகுமார் ஏசியா ரைம்ஸ் சஞ்சிகையில் ஜூன் 2011ல் எழுதியதை நினைவு படுத்துவது அவசியம் ஆகிறது. "சீனா,ரஷியா, இந்தியா பாகிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய நாடுகள் அடங்கலான "ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு" (SCO) உருவாகுமே எனில் மக்கள் தொகையின் அரைவாசியைக் கொண்டிருக்கக் கூடிய இவ்வமைப்புக்கு முன்னால் உலகக் காப்பாளனாக விரும்பும் நேட்டோ (NATO) அமைப்பு வெறும் நிலப்பரப்பாக பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டி வரும்" எனக் கூறி உள்ளார்.

மேலும் அவர், இந்தப் புதிய அமைப்பில் இலங்கை ஒரு உரையாடல் உறுப்பினர் நிலையில் சேர்க்கப்பட்டு விட்டதால் இந்து சமுத்திரம் வரை இந்த அமைப்பு பரவிவிட்டது. இனி ஈழக் குரல் இலங்கையால் மட்டும் அல்ல புதிய ஷங்காய் கூட்டுறவு அமைப்பாலும் நசுக்கப்பட்டு விடும். இன்னுமா தமிழா சிங்களத்துடன் பேசவேண்டும்?



# விண்ணில் ஒரு குட்டிக் கோள் வெஸ்ரா!



விண் வெளியில் பல கோடி விண் கற்கள், கிரகங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றை ஆய்வு செய்து பிரபஞ்சம் தோன்றிய வரலாற்றைக் கண்டு கொள்ள விஞ்ஞானிகள் ஆலாய்ப் பறக்கின்றனர். அதற்காகப் பல விண்கலங்களை ஏவுகணைகள் மூலம் செலுத்தி வருகின்றனர். அப்படிச் செலுத்தப் பட்ட டோன் என்ற பெயர் கொண்ட இயந்திரன் (றோபோ) செவ்வாய்க் கிரகத்துக்கும் வியாழக் கிரகத்துக்கும் இடைப்பட்ட வெளியில் 2.8 பில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் வெஸ்ரா எனப் பெயர் சூட்டப் பட்டுள்ள குட்டிக் கிரகத்தை ஒரு வருட காலத்துக்குச் சுற்றிவந்து துப்புத் துலக்கி பூமிக்கு தரவுகளை அனுப்பத் தொடங்கி உள்ளது. 2007ல் தனது விண்வெளிப் பயணத்தைப் பூமியில் இருந்து தொடங்கிய இந்த இயந்திரன் ஒரு வருட காலம் வெஸ்ராவைச் சுற்றிப் பார்த்து விட்டு பின்னர் சேராஸ் என்று பெயர் சூட்டப் பட்டுள்ள வேறு ஒரு துணைக் கிரகத்தை வேவு பார்க்கத் தனது பயணத்தைத் தொடங்கும்.

இருநூறு ஆண்டுகளாக வானியல் ஆய்வாளர்களின் கண்களுக்கு அரை குறையாக ஒளிக் கற்றையாகக் காட்சி அளித்த இந்த விண்வெளி அதிசயத்தை இப்போது இயந்திரன் என்ற பூமியின் தூதுவர் மூலம் முழுமையாகக் கண்டு கொள்ள முடியும் என மார்க் றேமண்ட் என்ற இத்திட்டத்தின் முதன்மைப் பொறியியலாளர் பரவசப்படுகிறார். இதன் நோக்கம் இக்கோளின் தோற்றம், அமைப்பு, திண்மம், மற்றும் உள்ளீடு பற்றிய தரவுகளை அறிவதும் என்கிறார்.

இத்திட்டத்தின் இன்னொரு தலைமை ஆய்வாளர் இக்கோளின் அமைப்பு ஒரே தன்மை கொண்டது அல்ல எனவும் அதன் வெளிப்புறத்தின் பல்வேறு இடங்களில் பல்வேறு வகையான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன எனவும் அவை அதன் உட்புறம் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளதைக் குறிகிறது எனவும் கூறுகிறார். எனவே வெஸ்ரா பற்றி அறியும் பொழுது எமக்கு பரிணாம வளர்ச்சி பற்றிய உண்மைகள் நிறைய அறியும் வாய்ப்பு கிடைக்கும் என்கிறார். எல்லாம் சரி பூமியில் குறிப்பாக ஸ்ரீலங்காவில் மனிதன் வளர்ச்சி பற்றி யாரும் ஆய்வு செய்ய மாட்டார்களா?

# சட்டம் படிக்காத சட்டத்தரணிகள்!




வெளிநாடுகளில் அகதி அந்தஸ்த்து வாங்கிக்கொடுப்பதற்கென்றே சட்டம் படிக்காத சட்டதரணிகள் பலர் இருக்கின்றார்கள்!.இவர்களில் சிலர் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்றதுடன் அகதி அந்தஸ்த்து எப்படிப் பெறுவது என்ற சட்ட விதிகளையும் அறிந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். வேறு சிலர் ஊரில் தாம் கற்றுவந்த ஓரளவான ஆங்கில அறிவுடனேயே தங்களை ஒரு மேதாவிபோல இங்கு பலரையும் நம்பவைத்துப் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

பாரிஸில் தயா மாஸ்ரரும் அப்படி சட்டம் படிக்காத ஒரு சட்டத்தரணிதான். இவருடைய முழுப்பெயர் தயாபரன். இங்கு அகதி விண்ணப்பங்கள் எழுதுவதைத் தொழிலாகக் கொண்ட இவர் விசாரணையில் என்னமாதிரியான கேள்விகளைக் கேட்பார்கள்! அதற்கு எப்படியான பதில்களைச் சொல்லவேண்டுமென ஒரு ஆசிரியரைப்போல சொல்லிக் கொடுப்பதால் இவரை 'மாஸ்ரர் மாஸ்ரர்' எனச்சொல்லி இப்பொழுது தயா 'மாஸ்ரர்' ஆகிவிட்டார். இவர் பிரெஞ்சுமொழி சரளமாகப் பேசுவார், எழுதுவார் அதனால் மொழிபெயர்ப்பு வேலைகளும் செய்வதுண்டு.

அகதி விண்ணப்பம் எழுதிக்கொடுக்க ஒரு தொகை! தான் எழுதிய விண்ணப்பம் உண்மையானதுதான் என்பதை உறுதிப்படுத்த சில ஆதாரங்கள், அதாவது அத்தாட்சிக் கடிதங்கள் வேண்டும் அப்படி அத்தாட்சிக்கடிதம் இல்லாதவர்களுக்கு இவரே போலியாகத் தயார் செய்தும் கொடுப்பார் அதற்கு ஒரு தொகை! பின்பு அவர்களுடைய விண்ணப்பம் விசாரணைக்கு வரும்போது மொழிபெயர்ப்புக்காகச் செல்வதற்கு ஒரு தொகை! முதலாவது விசாரணையில் இவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மேல்முறையீட்டுக்கு இன்னும் கூடுதலான காரணங்களைக் காட்டி வேறொரு விண்ணப்பம் எழுதவேண்டும் அதற்கொரு தொகை! மேல்முறையீட்டில் வாதாடுவதற்கு உண்மையாகச் சட்டம் படித்த சட்டதரணி வேண்டும் அந்தச் சட்டத்தரணியை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தச் சட்டத்தரணி இவருக்கொரு தொகையை 'கமிசனாகக்' கொடுப்பார். இப்படிப் பணம் கொட்டும் தொழில் என்பதால் அகதிகளாக வருபவர்களிடம் பணம் பறிப்பதற்காகவே பாரிஸில் சட்டம் படிக்காத சட்டத்தரணிகள் பலர் இருக்கின்றார்கள்.

பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்ததுபோல இப்பொழுது சுலபமாக வெளிநாடுகளுக்குள் நுழைந்துவிட முடியாது. அப்படி உள்ளே வந்துவிட்டாலும் அகதி அந்தஸ்த்தும் சுலபமாகக் கிடைத்துவிடுவதில்லை. இப்படியான காரணங்களால் தயா மாஸ்ரருக்கும் இப்பொழுது முன்புபோல வருமானம் இல்லை. அப்படி வரும் ஒன்று இரண்டுபேரையும் தனது பேச்சுச் சாமர்த்தியத்தால் தன்னைவிட்டு விலகாதபடி பார்த்துக்கொள்தில் இவர் கெட்டிக்காரர்.

அன்று காலை தனது அலுவலகத்தில் இருந்தபடி அன்றைய பிரெஞ்சுப்பத்திரிகை ஒன்றை படித்துக்கொண்டிருந்தார் தயா மாஸ்ரர். பத்திரிகையில் பிரெஞ்சுச் செய்திகளையோ, அல்லது உலகச் செய்திகளையோ அவர் ஆர்வமாகப் படிப்பதில்லை. இலங்கையைப்பற்றிய அரசியல் செய்திகள் ஏதாவது வந்திருக்கின்றதா? அதை வைத்து அரசியல் அந்தஸ்த்து கோருபவர்களுக்குப் புதிதாக ஏதாவது கதை எழுதலாமா? என்றுதான் சிந்திப்பார்.

அன்றைய பத்திரிகையில் அவர் விரும்பிய அப்படியானதொரு செய்தியும் இருக்கவில்லை. அப்பொழுது இரண்டு இளைஞர்கள் ஒருவித பதற்றத்துடன் அங்கு வந்தார்கள்.

வந்தவர்களின் முகத்தைப் பார்த்தவுடனேயே நல்ல சுளையான வேட்டை ஒன்று கிடைத்திருப்பதை தயா மாஸ்ரரின் மனம் உறுதிப்படுத்திக்கொண்டது. அவர்களுடைய பயமும், பதற்றமும்தானே தயா போன்றவர்களின் வருமானத்திற்கான மூலதனம்.

அவரின் விருப்பம் வீண்போகவில்லை! நேற்று மாலை மலேசியாவில் இருந்து பாரிஸிற்கு வந்த மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தில் ஆசிய நாட்டைச் சேர்ந்த நான்குபேர் அகதி அந்தஸ்த்து கேட்கும் நோக்கத்துடன் கடவுச்சீட்டு முதல் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் வந்திருக்கின்றார்களாம்! அவர்களில் ஒருவர் வந்திருக்கும் இருவர்மாரின் தம்பியாம். இப்பொழுது அவர்கள் விமானநிலையத்தில் வைத்து விசாரிக்கப்படுகின்றார்களாம். சிலசமயங்களில் அவர்கள் திரும்பவும் மலேசியாவிற்கே திருப்பி அனுப்பப்படுவதற்கும் வாய்ப்பிருக்கின்றதாம். அப்படி எதுவும் நடக்காமல் தங்களது தம்பியை வெளியில் எடுப்பதற்காகத்தான் இவரின் உதவி-யை நாடி வந்திருக்கின்றார்கள் அந்த இருவரும்.

தயா மாஸ்ரர் கடுமையாகச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார். அவர் கடுமையாகச் சிந்திக்கின்றார் என்றால் ஒரு பெரிய தொகைக்கு அத்திவாரம் போடுகின்றார் என்றுதான் அர்த்தம்! "என்ன மாஸ்ரர் கடுமையாக யோசிக்கிறியள் எங்கடை தம்பியை வெளியாலை எடுக்கிறது கஸ்ரமோ? உங்களுக்குக் கஸ்ரமெண்டால் நாங்கள் வேறை ஆரையும் பாக்கவோ?" அவர்கள் முடிப்பதற்கு முன்பாகவே மாஸ்ரர் சொன்னார் "நோ, நோ முடியாதெண்டில்லை ஆனால் கொஞ்சம் கஸ்ரமான விசயம்தான். இப்ப உங்கடை தம்பியின்ரை சிற்றிவேசன் எப்படி எண்டு அறியவேணும். எனக்கு எயாபோட்டுக்குள்ளை தெரிஞ்ச பெரிய அதி-காரிகள் இருக்கினம் முதலிலை அவைமூலம் உங்கடை தம்பியின்ரை நிலமை என்னமாதிரி எண்டு அறிவம் அதுக்குப்பிறகு என்ன செய்யிறது எண்டு முடிவெடுப்பம்" முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டே சொன்னார் தயா மாஸ்ரர்.

"அப்பிடியெண்டால் நாங்கள் காரிலைதான் வந்தனாங்கள் இப்ப உடனையே எயாபோட்டுக்கு போவம்." என அவசரப்படுத்தினார்கள் அந்த இருவரும். மாஸ்ரருக்குத் தெரியாத வித்தையா? அவர் நிதானமாகச் சொன்னார் "தம்பிமாரே அவசரப்படாதேயுங்கோ. நீங்கள் எல்லாம் அங்கை வரக்கூடாது! முதல்லை நீங்கள் விபரத்தைத் தாங்கோ" எனக்கேட்டு வாங்கி யாருக்கோ போன் பண்ணி பிரெஞ்சிலை கதைத்தார். அவர் கதைத்தது இவர்களுக்குப் புரியவில்லை ஆனால் தங்கடை விசயமாய்த்தான் கதைக்கிறார் என்று நம்பிக் கொண்டார்கள்.

கதைத்து முடித்து ரெலிபோனை வைத்தவர் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டே சொன்னார் "தம்பி விசயம் கொஞ்சம் கஸ்ரம்தானாம்! எதுக்கும் ஒரு லோயரை வைக்கிறதுதான் நல்லது" என்றுமுதல் குண்டைப் போட்டார். அவர்கள் இருவரும் பேயறைந்ததுபோல நிற்க சரி எல்லாத்தையும் நான் பார்க்கிறன் நீங்கள் நம்பிக்கையோடை போயிட்டு ஒரு இரண்டு மணித்தியாலத்திற்குப்பிறகு எனக்குப் போன் பண்ணுங்கோ." என்று சொல்ல, அவர்களும் மாஸ்ரருக்கும், லோயருக்குமாக ஒரு தொகையை முற்பணமாகக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் இருவரும் சென்ற பின்னர் விமானநிலையத்தில் அகதிகள் விசாரணைப்-பிரிவில் தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக இவர்களின் தம்பி பற்றிய விபரத்தை விசாரித்தார் மாஸ்ரர். வந்த நால்வரிடமும் பாஸ்போட் முதல் எந்த ஆவணங்களும் இல்லாததால் அவர்களை திருப்பி அனுப்ப முடியாதாம்! அதனால் நாளைக் காலையில் பிரான்ஸில் அகதி அந்தஸ்த்துக் கோருவதற்காக வெளியில் விட்டுவிடுவார்கள் என்ற தகவலே கிடைத்தது.

இரண்டு மணித்தியாலத்திற்கு முன்பாகவே அந்த இருவர் வீட்டுக்கும் போன் பண்ணினார் மாஸ்ரர். "தம்பி நான் லோயரோடை எயாபோட்டிலை இருந்துதான் கதைக்கிறன். லோயர் எல்லாம் கதைச்சிட்டார்! அனேகமாய் நாளைக்கு காலமை விட்டிடுவாங்கள். நான் லோயரோடை நாளைக்குக் காலமையும் இங்கை வரவேணும். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காமல் உடனடியா-ய் மிச்சக்காசோடை ஒ.்.ப்பீசுக்கு வாங்கோ". ஏனப் பணத்திற்கான இரண்டாவது குண்டையும் வீசிவிட்டுத் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார் தயா மாஸ்ரர்.

அவர்கள் இருவரும் தயா மாஸ்ரரின் தி-றமையை மெச்சியபடியே அவருக்குக் கொடுக்கவேண்டிய மிகுதிப்பணத்தைப் புரட்டுவதற்காகத் தெரிந்தவர்களிடம் கடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள்!.

வெளிநாடுகளில் நாங்கள் இப்படித்தான்!

தமிழக முதலமைச்சர் பற்றி அகரம் அதிகம் அலட்டிக் கொள்வதாகப் பலர் கண்டனங்களை வீச-லாம். ஆனால் ஈழத் தமிழினம் எழுச்சி கொள்ள உதவியது அ.தி.மு.க. நிறுவனர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்பது வரலாற்று உண்மை. 2009ல் தமிழ் மக்களின் இலட்சிய இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இலட்சக் கணக்கான தமிழ் மக்களும், கோடிக் கணக்கான தமிழர் சொத்துக்களின் அழிவுக்கும் ராஜபாட்டை போட்டுச் சிங்களத்துக்கு உதவியதும் தி.மு.க. தலைமை-யிலான அப்போதைய தமிழக அரசும் தமிழக முதல்வருமான கலைஞர் என்பதும் மறுக்க முடியாத மறைக்க முடியாத வரலாற்று உண்மைகளாகும்.



# தமிழக முதலமைச்சரின் புதிய அவதாரம்!

இவை நமக்கு ஒரு பேருண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. அது என்னவென்றால் தமிழகமும் தமிழகத் தமிழரும் இல்லாது ஈழத்தில் தமிழினம் வாழ முடியாது அழிக்கப்படும் நிலைக்கு எடுத்துச் செல்லும் என்பதே. ஈழத் தமிழினம் அழிந்துவிட்டால் உலகத் தமிழினத்தின் ஆணி வேரே அழிந்துவிடும் என்பதை மானிடவியலும் தமிழினத்தின் பூர்வீகமும் தெரிந்த அறிஞரே ஏற்பர்.

எனவே நாம் இன்று தமிழர்பால் புதிய அணுகு முறையும் ஆற்றல் நிறைந்தும் அகில இந்திய அளவி-ல் பேசப்படும் அரசியல்வாதியாக விளங்கும் செல்வி ஜெயலலிதா தமிழக முதல் அமைச்சராகவும் இருப்பதை உலகத் தமிழினத்தின் இருப்புக்கான ஒரு காப்பரண் எனக் கருதி அவரை வாழ்த்தவும் வரவேற்கவும் அவருக்கான ஆதரவைக் கொடுப்பதைக் காலத்தின் கட்டாயம் எனவும் அகரம் கரு-துகிறது.

இன்று அவரின் அரசியல் செல்நெறியில் அவர் கூட்டணிக் கட்சிகளை நம்புவதை விடவும் தமது மக்களுக்கான சேவையிலும் மக்களின் ஆதரவிலும் அதிகம் கவனம் செலுத்துவதைக் காண-முடிகிறது. அதே நேரத்தில் நாம் முன்னர் கூறியது போன்று அவருக்கு எதிரான 13 சொத்துக் குவிப்பு வழக்குகளில் இன்னும் ஒன்று அவரைப் பாடாய்ப் படுத்தி வருகிறது. அவர் குற்றவாளியா இல்லையா என்பது அல்ல எமது ஆய்வு. இந்திய அரசியலில் கைவிரல் எண்ணிக்கை அளவிற் கூட அப்பழுக்கற்ற அரசியல்வாதிகளைக் காணமுடியாத நிலையிலும் இன்று தினமும் வெளியாகி வரும் ஊழல்த் தொகைகளோடு ஒப்பிடுகையில் அவரை மக்கள் மன்னிக்கவும் மறக்கவும் முனையலாம்.

ஆனால் அரசியலில் எதிரிகளை வளைக்கவும் வீழ்த்தவும் இப்படியான குற்றச் சாட்டுகளும் வழக்குகளும் அவசியமாகிறது. இவரை இந்த வழக்கை வைத்தே மத்திய அரசு வேட்டையாட நினைக்கிறது. மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சியும் அதில் அமைச்சராக உள்ள உட்துறை அமைச்சரும் நீதிமன்றங்கள் மூலமான அதீத கெடுபிடிகளைக் கொடுத்து வருவதைக் காண

முடிகிறது. மிகச் சிக்கலான பொறிக்குள் உள்ள ஒரே ஒரு சலுகையாக எப்போ நீதி மன்றத்தில் சமூகம் தர முடியும் எனத் தீர்மானிப்பது ஒன்றே அவருக்கு உள்ளது. இதன்மூலம் இவருக்கு மறைமுகமான ஒரு கால அவகாசத்தைச் சட்டமே கொடுத்துள்ளது.

இவருக்கு வாய்ப்பாக உட்துறை அமைச்சர் சிதம்பரம் 2ம் தலைமுறை அலைக் கற்றை வழக்கில் சிக்கிப் பதவியை இழக்கும் நிலையில் தவிக்கிறார். அவருக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் வாழ்வா சாவா என்ற திரிசங்குசொர்க்க நிலை அகில இந்திய அளவில் காணப்படுகிறது. எனவே ஜெயலலிதா உள்ளாட்சித் தேர்தலில் முழுமையாக ஈடுபடவும் அதனைக் காரணம் காட்டி நீதி மன்ற ஆணையைத் தாமதப் படுத்தவும் முடிகிறது.

சிதம்பரத்தின் தேர்தல் வெற்றியும் அவர் பதவியும் சட்ட விரோதமானது எனவே அவர் விலக்கப்பட வேண்டும் எனத் தில்லியில் பகிரங்க அறிக்கை விட்டவருக்கு இப்போ சிதம்பரம் விலகவேண்டும் என எதிர்க் கட்சிகளே கேட்பதால் வழக்கில் உள்ள பெரிய தடை உடையும் நிலை தெரிகிறது.

தமிழகத்தில் ஏற்கனவே அவரின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் பொது நல வாதிகளின் பாராட்டுக்கு உள்ள நிலையில் இந்த முறை ஏழை மக்களின் வாழ்வை வளப் படுத்தும் இலவச ஆடு மாடுகள் வழங்கிக் கால்நடை வளர்ப்பை ஊக்குவித்தல் மூலம் மக்களின் ஆதரவைப் பெற நினைக்கிறார். அவரது முக்கிய எதிரியாக விளங்கிய தி.மு.க. மக்களையும் நீதி மன்றங்களையும் அமைதிப் படுத்தவே முடியாத நிலைக்குத் தள்ளி விட்டார்.

அடுத்த நடவடிக்கையாக அ.தி.மு.கவின் உதவியால் தமது கட்சிகளை வளர்த்து விட நினைத்த கட்சிகளுக்குக் கொடுத்தது போதும் இதற்கு மேலும் வேண்டாம் என்ற முடிவுக்கும் வந்து விட்டார். அவருக்கு இப்போ ஈழத் தமிழர் ஆதரவுத் தளங்களும், ராஜீவ் காந்தி கொலையில் தூக்குத் தண்டனை, கூடங்குளம் அணுமின் நிலையம், ஈழத் தமிழர் விவகாரம் என்ற மக்களின் செல்வாக்கை வைத்தே வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என்ற இலக்கை அடைந்துவிட வேண்டும் என நினைத்து விட்டார் போல் தெரிகிறது. தமிழகம் அவரது கைக்குள் வந்து விட்டால் அவருக்கு மத்திய பதவி கைக்கெட்டும் தூரத்தில் என்பதை இந்திய அரசியல் களம் உருவாகி வருவதைக் காண முடிகிறது.

காங்கிரஸ் கட்சியின் அடுத்த பிரதமர் கண்டிப்பாக மன்மோகன் சிங் இல்லை என்பதும் ராகுல் காந்தியும் மறுத்து விட்ட நிலையில் சோனியா காந்தி தமது விருப்பாக சிதம்பரத்தை உருவாக்கும் திட்டங்களில் இறங்கினார். ஆனால் அதற்கு எதிராக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமது ஆதரவுத் தளங்களை உசுப்பேத்தி ஒரு மோதல் நிலைக்குத் தயாரானார். ஆனால் அதிக சிரமம் இல்லாமலே சிதம்பரம் பிரதமர் போட்டியில் இருந்து விலகும் நிலை தெரிகிறது. அத்தோடு அவரின் உட்துறை அமைச்சும் வெறுமையாவதால் ஜெயலலிதாவுக்கு மீதமாக உள்ள ஒரே ஒரு வழக்கும் தள்ளு படியாகும் வாய்ப்புக் கிடைக்கலாம்.

இந்தியப் பிரதமர் போட்டியில் இதுவரை அதிகம் பேசப்பட்டு வந்த நரேந்திர மோடி இஸ்லாமிய மக்களின் ஆதரவைப் பெறமுடியாத நிலைக்கும் அப்பால் அவரது உண்ணா விரதத்தின் பின்னர் வெளிவரும் செய்திகளின் படி அவரது நேர்மை பற்றிய சாயம் கரைந்து அவரைப் பலவீனமாக்கி வருகிறது.

தேர்தலுக்கு மத்தியில் ஜெயலலிதா கூட்டு வைக்கப் போவது ப.ஜ.கவுடனா அல்லது ஒரு புதிய கூட்டு உருவாக்கப்படுமா என்பதில் தங்கி உள்ளது காங்கிரஸ் கட்சி மீதான மக்கள் வெறுப்பு, தினமும் அதிகரிக்க வைக்கும் செய்திகளே அகில இந்தியாவையும் தினமும் உலுக்கி வருகின்றன. ராகுல் காந்தி பின் வாங்கிய காரணமும் இதுவே எனலாம்.

எனவே ஈழத் தமிழினத்தின விதியை நிர்ணயித்ததும் நிர்ணயிக்கப் போவதும் இந்திய மத்திய அரசின் கொள்கைதான். அங்கே செல்வி ஜெயலலிதா பிரதமராகும் பட்சத்தில் இதுவரை கேரளாவும் மலையாளிகளும் தமிழினத்தின் தலைவிதியை முடிவு செய்த நிலை மாறி தமிழருக்கு ஆதரவான நிலையை இந்திய மத்திய அரசு எடுக்க முடியும். அன்றுதான் உலக சமூகம் தமது சிங்களச் சார்பு நிலையில் இருந்து ஒரு நடு நிலைக்கு வரும். அதற்காகவே தமிழினம் உழைக்க வேண்டும். இப்போதைக்கு இலங்கைக்கு எதிரான குரலை மாநில அரசு உரத்து எழுப்புவது அவசியமாகும். இலங்கையைப் பொதுநலவாய மாநாட்டில் இருந்து ஒதுக்க வேண்டும் என்ற கனடா போன்ற நாடுகளின் குரலுக்கு ஜெயலலிதாவும் ஆதரவாகக் குரல் எழுப்ப வேண்டும் சில ஊடகங்கள் முன்வைத்து வரும் கோரிக்கையைப் பாராட்டி அகரமும் அதே கோரிக்கையை வைக்கிறது.



# தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி!

பூமிபுத்திரன்

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 18 ஆவது கூட்டத் தொடர் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சரியான முடிவு எதனையும் எட்டாமலேயே நிறைவிற்கு வந்துள்ளது. கூட்டத் தொடரின் இறுதியில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் 'சிறி லங்கா' என்ற பதம் கூட இடம்பெற்றிருக்கவில்லை. என்றாலும் கூட, எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்று நிறைவேற்றப்படலாம் என ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவ்வாறு நடைபெறலாம் என்பதற்கு எதுவித ஆதாரங்களும் இல்லாத போதிலும் அதனை நம்புவதற்கு ஈழத் தமிழர்கள், குறிப்பாக புலம்பெயர் தமிழர்களில் அநேகர், தயாராகி விட்டனர். அவ்வாறு நடைபெறும் என்பதனை நம்ப வைப்பதற்கு பலரும் முயன்று கொண்டிருக்கின்றனர். ஒருசில ஊடகங்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமையைக் காணமுடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 18 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் கொண்டுவரப் படுவதற்கான வாய்ப்புகள் இல்லையென முன்கூட்டியே எதிர்வு கூறப்பட்ட போதிலும் அவற்றை நம்புவதற்குப் பலரும் தயாராக இருக்கவில்லை. அது மட்டுமன்றி, அவ்வாறு கருத்துத் தெரிவித்தோரை 'யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாத ஞானசூனியங்கள்' என்றே வர்ணித்தனர்.






ஆனால், அத்தகைய எதிர்வு கூறல்கள் இன்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டன. உலகம் எப்போதும் நலன்களின் அடிப்படையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்களால் துல்லியமான எதிர்வு கூறல்களை மேற்கொள்வது முடியாத காரியம். ஐ.நா. மனித உரிமைக் குழு விடயத்திலும் அதுவே நடந்திருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களுக்கு போரின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பான விபரமான செய்திகள் தற்போது பல்வேறு வழிகளிலும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. போர்க்குற்றம் புரிந்தோர் தொடர்பில் மட்டுமன்றி அத்தகைய குற்றங்கள் இழைக்கப்பட அனுசரணை வழங்கியோர், அவற்றைத் தடுத்துவிட வழியிருந்தும் முனையாதோர் போன்றோர் தொடர்பிலான தகவல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், இழைக்கப்பட்ட அநீதிக்கான தார்மீகப் பொறுப்பை சிங்களதேசம் மாத்திரமன்றி பல்வேறு நாடுகளும், உலக மன்றங்களும் கூட ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இதனால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தர அத்தகைய சக்திகள் முயற்சிக்கும் என நம்பி செயற்பாடின்றி இருந்துவிட முடியாது.

துரதிர்ஸ்டவசமாக, ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பம் முதலே அந்நிய சக்திகளின் செல்வாக்குக்கு உட்பட்டதாக இருந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் இந்தியாவின் செல்வாக்கும் பின்னாளில் மேற்குலகின் செல்வாக்கும் அவதானிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் எல்லைகளுக்குள் ஆயுதரீதியிலான செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இது முழுக்க முழுக்க 'சொந்தக் காலில்' நடைபெற்ற போராட்டம் என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் உலகின் பல நாடுகளுக்கும் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான சந்திப்புகளை நடாத்தியமை ஞாபகமிருக்கக் கூடும். இந்தச் சந்திப்பின் போது உலகநாடுகளுள் மேற்கு ஐரோப்பிய மற்றும் ஸ்கன்டினேவிய நாடுகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

தவிர, போரின் இறுதிக் கட்டத்தில் மேற்குலகம் தம்மைக் காப்பாற்றும் என இருந்த எதிர்பார்ப்பு என பல சான்றுகளைக் காட்ட முடியும்.

போரின் இறுதிக் கட்டத்தில் மேற்குலகம் 'பரிதாபகரமாகக் கைவிட்டிருந்த' பின்னரும் இன்றும் கூட மேற்குலகம் தலையிட்டுத் தமக்கொரு தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையிலேயே தமிழரின் அரசியல் முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது துரதிர்ஸ்டவசமானது.

செப்டம்பர் 19 இல் ஜெனீவாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் உரையாற்றிய ஜேர்மானியப் பேராசிரியர் நீல்சன், அது தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். 'மேற்குலகை நம்புவதைக் கைவிட்டு தமிழர்கள் தமது சொந்தக் காலில் போராடுவதற்கு' முயல வேண்டும் என அவர் கேட்டிருந்தார்.

ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை ஆரம்பம் முதலே நேச சக்திகள், பகைச் சக்திகள் தொடர்பிலான தெளிவான நிலைப்பாடு இருந்ததில்லை. நேச முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக ஆக்கிக் கொள்ளப்பட்டன. ஒரு காலத்தில் நேச சக்திகளாக இருந்தோர் பின்னாளில் பகைச் சக்திகளாகவும், முன்னர் பகைச் சக்திகளாக விளங்கியோர் பின்னாளில் நேச சக்திகளாகவும் மாறியதை அவதானிக்க முடிந்துள்ளது. இத்தகைய போக்கு தாயகச் சூழலில் மாத்திரமன்றி சர்வதேச அரங்கிலும் பிரதிபலித்தது.

முற்போக்குச் சக்திகளின் காவலன் எனக் கருதப்படும் கியூபா ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதைத் தடுப்பதில் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றது.

ஒடுக்கப்படும் மக்களின் சார்பில் குரல்தர வேண்டிய இந்நாடு ஒடுக்குமுறையாளரைக் காக்கும் அளவிற்குப் பகைமை கொண்ட நாடாக மாறக் காரணம் என்ன?

உலக அரங்கில் ஒன்றுக்கொன்று எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட நாடுகள் யாவும் விடுதலைப் புலிகளை அழிப்பதில் கரங்கோர்த்துச் செயற்பட்டதன் பின்னணியில் உள்ள அரசியல் என்ன?

உலகெங்கும் நடைபெறும் உரிமைப் போராட்டங்களை ஆதரித்து நிற்கும் முற்போக்குச்

சக்திகள், ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப் பின்னிற்பதன் காரணம் என்ன?

ஈழத் தமிழருக்கான அரசியற் பணியை முன்னெடுத்துச் செல்வோர் சிந்தனையிற் கொள்ள வேண்டிய விடயங்கள் இவை.

'தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களில் ஈடுபட்டோரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது' என்ற அடிப்படையில் மேற்குலகினால் தற்போது தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்கள், யதார்த்தத்தில் மகிந்த குழுமத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதை இலக்காகக் கொண்டவையாகத் தெரியவில்லை. மாறாக, மகிந்த அரசுக்கு அழுத்தத்தை வழங்குவதனூடாக தமிழர் விவகாரத்துக்கு ஒரு அரசியற் தீர்வை வழங்குவதை இலக்காகக் கொண்டவையாகவே தெரிகின்றன. இந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது இறுதியாக வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் 2012 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 19 ஆவது கூட்டத் தொடர் வரையானதாகும்.

இக்காலப் பகுதிக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஏதாவதொரு பொதியை வழங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் மகிந்தவுக்கு உள்ளது. அவ்வாறு வழங்குவதற்குத் தவறினால் போர்க் குற்றம் தொடர்பில் மகிந்த குழுமத்திற்கு எதிரான தீர்மானம் எதிர்வரும் மனித உரிமைக் குழுக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படக் கூடும்.

கடந்த மனித உரிமைக் கூட்டத் தொடரின்போது இலங்கை பாரிய அழுத்தங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. 'தமது நாட்டுக்கெதிரான சதிகள் யாவற்றையும் தாம் முறியடித்து விட்டதாக' இலங்கை அரசாங்கம் மார் தட்டுகின்ற போதிலும் திரைமறைவில் பல சங்கதிகள் நடைபெற்றுள்ளமையை மறைத்துவிட முடியாது.

இங்கே, தமிழர் தரப்பு ஒருசில விடயங்களைக் கவனிக்க வேண்டும். சர்வதேச அழுத்தத்தின் விளைவாக அரைகுறை மனதுடன் மகிந்த அரசு முன்வைக்கப்போகும் அரைவேக்காட்டுத் தீர்வை நிராகரிக்க ஏற்படுவதன் ஊடாக பழியைத் தமிழர் தரப்பின்மீது போட்டுவிட்டு இலங்கை அரசாங்கம் தப்பித்துவிடக் கூடிய வாய்ப்பை வழங்கிவிடக் கூடாது. ஆகையால், இன்று அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலம்பெயர் தமிழ் மக்களையும் இணைத்துக் கொண்டு சுயநிர்ணய அடிப்படையுடன் கூடிய சர்வதேச நியமங்களுக்கு அமைவான தீர்வுத் திட்ட வரைவொன்றைத் தயாரித்து அதனைப் பகிரங்கப் படுத்த வேண்டும். இத்தகைய தீர்வுத் திட்டத்திற்கு தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் இருந்தும் ஆதரவைத் திரட்டிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் நிலவும் இனமுரண்பாட்டிற்கான பிரதான அடிப்படை, அந்த நாட்டின் அரசியலமைப்பே. இது தீவில் வாழும் சகல இனங்களினதும் கௌரவத்தை மதித்துச் செயற்படும் வகையிலானதாக மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமானது. தமிழ் மக்களின் கருத்துக்கள் அறியப்படாமலேயே காலங் காலமாக அரசியலமைப்பு உருவாக்கப்படும் நடைமுறை தொடர இடமளிக்கக் கூடாது.

மறுபுறம், அரசியல் தீர்வு வழங்கப்பட்ட கையோடு தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைப் புரிந்தோர் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு இடமளிக்கப் படாது பார்த்துக் கொள்ளப்படவும் வேண்டும். இது பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஈழத் தமிழ் மக்கள் 1948 முதல் சிங்கள ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான பாதிப்புக்கு இலக்காகி வந்துள்ளார்கள். போர்க் காலங்களில் குறிப்பாக போரின் இறுதிக் காலகட்டத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு அளவிற் பெரியது. வலியை அனுபவித்தோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டே ஆகவேண்டும். அநீதியைச் சந்தித்தவர்களுக்கு நீதி கிட்டியே ஆகவேண்டும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நீதி கிட்டுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தும் தாமதமாக்கப்பட்டே வருகின்றன. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகவே கொள்ளப்பட வேண்டும்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels

For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.

www.mediaworldasia.dk

# K.B intercom presents

KBIC

காட்சிகள் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும்: ரூபன் 079 947 83 89




## LAUSANNE CITY

இடம்: **CITY PULLY CINEMA**

காலம்:
**04.11.2011 வெள்ளி**
நேரம்:
**இரவு 23.00 மணி**

காலம்:
**05.11.2011 சனி**
நேரம்:
**மதியம் 14.00 மணி**
**இரவு 23.00 மணி**

காலம்:
**06.11.2011 ஞாயிறு**
நேரம்:
**மதியம் 14.00 மணி**

## GENEVE CITY

இடம்: **Cinéma Nord-Sud**
**Rue de la Servette 78**
**1202 Genève**

காலம்:
**05.11.2011 சனி**
நேரம்:
**காலை 10.45 மணி**

காலம்:
**06.11.2011 ஞாயிறு**
நேரம்:
**காலை 10.45 மணி**


இளைய தளபதி விஜய்
ஜெனிலியா, ஹன்சிகாமோத்வானி
சந்தானம்
இணைந்து ஆடிய

# வேலாயுதம்

முன்பதிவு செய்யுங்கள்

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்

**K.B INTERCOM,** AV. DES ALPES 40,1820 MONTREUX, 021 961 27 16
**A.G.R. ASIAN SHOP,** AVENUE DE MORGES 88, 1004 LAUSANNE, 021 624 38 10
**A.G.R. SEFAN SHOP,** RUE TRONCHIN 30, 1202 GENEVE, 022 733 09 83



வன்னி யுத்தத்தின் பின்னரான முல்லைத்தீவின் கதை பரிதாபகரமாக இருக்கின்றது, அங்கு ஆளாளுக்கொன்றெனத் தெரிந்தும், தெரியாததுமாகப் பல நிர்வாகங்கள் நடக்கின்றன. அவற்றில் சில முகம் தெரிந்தவை. பல முகங்கள் தெரியாதவை, தேர்தல் காலங்களில் வந்து போன மக்கள் பிரதிநிதிகள் எவருமே பின்னர் எட்டிப்பார்த்திராத கதையும் தொடர்கிறது, ஆனால் இடையிடையே தெற்கிலிருந்து வருவோர் மட்டும் அம்மக்களுக்குத் தாமே குரல் கொடுக்கவந்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் கதையும் தொடர்கிறது.

2009 மேயின் பின்னர் விடுதலைப்புலிகள் வசமிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பகுதி முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் முழுமையாக அரசபடைகள் வசம் சென்றிருந்தது. இன்றுவரை அது தொடர்கிறது. வடக்கின் ஏனைய மாவட்டங்களைப் போலவே முல்லைத்தீவும் தொடர்ந்தும் இராணுவ நிர்வாகத்தின் கீழேயே இருந்து வருகிறது. ஒப்புக்கு அரச நிர்வாகம் செயற்படுவதாகக் கூறப்படுகிறபோதும் படை அதிகாரிகளது ஆளுகைக்குட்பட்டே அரச அதிபர் முதல் சாதாரண படைச்சிப்பாய் வரை செயற்பட்டு வருகின்றனர்.

புதிதாக வெலிஓயா எனும் உதவி அரசாங்க அதிபர் பிரிவைத்தோற்றுவித்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கைகள் மற்றும் தமிழ் மக்களது பூர்வீகக்கிராமங்களான கொக்கிளாய், உள்ளிட்ட பகுதிகளில் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் என்பவை முல்லைத்தீவின் மீதான பார்வையை மீண்டும் திரும்ப வைத்துள்ளது. வழமைபோலவே எமது தமிழ் அரசியல்வாதிகள் இப்போது அவலக்குரல் எழுப்பத்தொடங்கியுள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அந்தப்பக்கம் எட்டிப்பார்த்திருக்கக் கூடவில்லை. குறிப்பாகக் கொக்கிளாய் கருநாட்டுக்கேணி போன்றவை எங்கிருக்கும் என்பது கூட அவர்களுக்குத் தெரிந்திருக்குமா என்பது கேள்விக்குறியே.

வன்னி இறுதி யுத்தத்தால் பெரும்பாலான குடும்பங்கள் தமது வீடுகளை முற்றாக இழந்துபோயுள்ளன. தமக்கான ஓலைக்குடிசையொன்றினையாவது அமைத்துக்கொள்ள அவர்கள் எல்லோரும் இப்போது போராடுகிறார்கள். ஆனால் அம்முயற்சியில் கூட பெரும்பாலானோர் வெற்றிபெற்றிருக்கவில்லை. காட்டுத்தடிக்கும், கிரவல் மண்ணுக்கும் கூட சொந்த மண்ணில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களிடம் அனுமதி பெறவேண்டிய அவலம் தொடர்கின்றது.



# வருவாய் தரும் முல்லைத்தீவு

**-ஆர்.தயாபரன்.**

முல்லைத்தீவு இப்போது அவரவர் வருமானம் கருதிய தனித்தனிப் பிரிவுகளாகிவிட்டது. மணல் வியாபாரத்திற்கு முன்னாள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரே இப்போதைக்கு பொறுப்பாக உள்ளாராம், அவருக்கு விசேட பாதுகாப்புவேறு, நாளொன்றுக்கு மில்லியன்களில் வருமானமாம். சாதாரண பொதுமக்களுக்குத் தடைவிதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதிகளில் கூட கட்டிட மணல் அகழ்ந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

குடிசைகளுக்கு தரையில் கொட்டத்தேவையான கிறவல் மண்ணினை தெற்கைச்சேர்ந்த வர்த்தகர்களிடம் பணம் கொடுத்து வாங்கச்செல்கிறார் அரச அதிபர். சொந்தமண்ணிற்கே காசு கொடுக்கும் பரிதாபம் வேறெங்கும் இல்லாதது. தென்னிலங்கைச் சிங்களவர்கள் சிலரே அரசிடம் மண்வெட்ட அனுமதி வாங்கியுள்ளார்களாம். கனரக வாகனங்கள் மூலம் நாள்தோறும் ஆயிரக்கணக்கான தொன் மண் வெட்டி ஏற்றி செல்லப்பட்ட வண்ணமேயுள்ளது. ஆனால் அங்கு மண் வெட்டப்படும் காணிகள் தமிழ் மக்களுக்குச் சொந்தமானது என்பது வேறு கதை.

முல்லைத்தீவின் பிரதான வீதியோரங்கள் எங்கும் நிற்கும் நெடிது உயர்ந்த மரங்கள் பெரும்பாலும் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. இரவிரவாக அம்மரங்களை ஏற்றிச் செல்ல வாகனங்கள் திரிகின்றன. தேக்குமரம் தவிர்ந்த வேறு மரங்கள் வெட்டத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார் முல்லைத்தீவு அரச அதிபர் ஏ.பத்திநாதன். இதற்கிடையே வனத்திணைக்களப் பொறுப்பதிகாரியாகச் சிங்களவரான எக்கநாயக்க இப்போது முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளார்.

மரங்கள் வெட்ட விதிக்கப்பட்டுள்ள தடை சாதரண தமிழ் மக்களுக்கு மட்டுமே பொருத்தமானதாகும், தெற்கில் இருந்து வரும் பெரும்பான்மை மக்களுக்கோ, படை அதிகாரிகளுக்கோ இச்சட்டத்தில் விதிவிலக்குண்டு. நாள்தோறும் தொன் கணக்கில் மரங்கள் விறகுக்காகவோ, பிறதேவைகளுக்காகவோ ஏற்றிச்செல்லப்பட்ட வண்ணமேயுள்ளது. மரங்களை ஏற்றவரும் வாகனங்கள் இரவுவேளைகளில் மட்டும் ஓடித்திரிகின்றன. பகல் பொழுதுகளில் படைமுகாம்களிலோ, அதை அண்டிய சூழலிலேயோ அவை பதுங்கி நிற்கின்றன. ஆனால் பூர்வீகத் தமிழ்க்குடிகள் வேலிக்குத் தேவையான குச்சித்தடிகளுக்கும், கொட்டில்களுக்குத் தேவையான கம்பங்களுக்கும் அனுமதிகேட்டு மாதக்கணக்கில் அரச அலுவலகங்களில் காத்திருக்கின்றனர். சிலவேளைகளில் மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தடிகளை பணம் செலுத்தி வாங்கவேண்டியவர்களாகவும் அப்பகுதி மக்கள் இருக்கிறார்கள்.

வன்னியில் பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்களது முக்கிய தொழிலாக இப்போது பழைய இரும்பு வியாபாரம் இப்போது மாறியிருக்கின்றது. அவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலும் பார்க்க இவ்வர்த்தகத்திலேயே கூடிய ஆர்வம் காட்டுகின்றனர். வர்த்தகம் என கூறிக்கொள்ளுகின்ற போதும் யுத்த எச்சங்களாக சிதறிக்கிடக்கும் எறிகணைகளையும் எஞ்சிய இரும்புத் துண்டங்களையும் பொறுக்கி விற்பதே தொழிலாகிப் போயுள்ளது. நாள்தோறும் நூற்றுக்கும் குறையாத தென்னிலங்கை வாகனங்கள் பழைய இரும்புகளை ஏற்றிச் செல்ல அங்கு வருகின்றன. ஆனாலும் அவ்வாறு வரும் வாகனங்களில் கணிசமானவை படை அதிகாரிகளது பினாமிகளாகவேயிருக்கின்றது.

உண்மையில் வன்னியில் இரும்பு வியாபாரம் என்கிற பெயரில் பெறுமதிமிக்க பொருட்கள் கடத்தப்படுவது தான் சாதரணமாக நடக்கிறது. வன்னி யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் வரை அலைந்து திரிந்த ஆயிரக்கணக்கான வாகனங்கள் இறுதிக் கணங்களில் அநாதரவாகக்

கைவிடப்பட்டிருந்தன. வாகனத்தின் இயந்திரங்கள் முதல் பெறுமதிவாய்ந்த அனைத்துமே தெற்கிற்குக் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பரந்தன் தொடக்கம் முல்லைத்தீவு வரையான வீதியூடாகப் பயணிக்கும் எவருமே இவ்வாறு சூறையாடப்பட்டு வெறும் எலும்புக்கூடாக எஞ்சியிருக்கும் வாகனங்களைக் காணமுடியும்.

விடுதலைப் புலிகளதும், பொதுமக்களினதும் என கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான வாகனங்கள் இன்று வரை சூறையாடப்பட்ட வண்ணமேயுள்ளது. ஒப்புக்கு அவ்வாறனவற்றை உரிமையாளர்களிடம் கையளித்ததாக அரசு கூறிவந்திருந்தது. ஆனால் அடையாளப்படுத்தும் ஆவணங்கள் எதுவும் இல்லையெனக் கூறி அவை எவையும் மக்களிடம் கையளிக்கப்படவேயில்லை. அவ்வப்பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் படையதிகாரிகளது ஆசீர்வாதத்துடன் வியாபாரம் சூடு பிடித்திருக்கின்றது. பெரும்பாலும் கோடீஸ்வரர்களாகிவிட்ட படை அதிகாரிகள் இறுதியில் எலும்புக்கூடாகியிருக்கும் வாகனங்களையும் பழைய இரும்புக்கு விற்றுவிடலாம்.

முள்ளிவாய்க்காலில் இருந்து வெளியேறிய பெரும்பாலான மக்கள் உயிரைத்தவிர வேறு எதையும் எடுத்துச் சென்றிருக்கவில்லை. நான்கு இலட்சத்திற்கும் அதிகமான அம்மக்களின் ஒட்டுமொத்த சொத்துக்களும் முள்ளிவாய்க்கால்வரை வீதியோரங்களில் அநாதரவாகக் கைவிடப்பட்டிருந்தன. எறிகணைகளில் இருந்து உயிர்களைக் காத்துக் கொள்ளவே அவர்கள் இறுதிக்கணங்களில் போராடியிருந்தார்கள். ஆனால் அவர்களது கைவிடப்பட்ட சொத்துக்கள் ஏதும் அவர்களுக்குச் சொந்த இடம்திரும்பியபோதும் எஞ்சியிருக்கவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் தங்க நகைப்புதையல்கள் பற்றியோ கன்ரர்களில் அடையுண்டிருந்த பணம் பற்றியோ பல கதைகள் சுற்றித்திரிந்த வண்ணமேயுள்ளன.

பாராளுமன்றில் எதிர்க்கட்சிகள் கத்தித் தீர்த்தும் ஜனாதிபதி குடும்பத்திடமிருந்து உண்மைகள் எவையுமே வெளித்திருக்கவில்லை. தற்போதும் முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், புதுமாத்தளன், புதுக்குடியிருப்பின் சில பகுதிகள் என பெரும்பகுதி மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படாமலேயுள்ளது. இப்பகுதிகளில் இருப்பதாக நம்பப்படும் புதையல்களைத்தேடியே வேட்டை தொடர்வதாகக் கூறப்படுகின்றது. வேட்டையில் புதையல்கள் அகப்படும் வரை மீள்குடியமர்வென்பதும் சாத்தியமற்றேபோகலாம்.

ஒட்டு மொத்தத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்வீகக்குடிகளான தமிழ்க்குடிகள் எதையுமே பெற்றிராது அநாதைகளாவே வாழ்ந்துவருகின்றனர். ஆனால் அவர்களுக்காகக் குரல் கொடுக்க வந்திருக்கும் அனைவருமே பிழைத்துச் செல்கின்றனர். ஜனாதிபதியின் புதல்வர் ஒருபக்கம் அவரோடு கூடிக்குலாவி வந்து நிற்கும் முன்னாள் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருபக்கமென தம்பாட்டிற்கு சவாரி செய்கின்றார்கள். மறுபுறத்தே இப்போதைய பிரதியமைச்சரும் முன்னாள் அம்மானினதும் பிரதிநிதிகளென மற்றொரு கும்பல் திரிகிறது. இவர்களுக்கிடையே முன்னாள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரது வர்த்தகமும் சூடு பிடித்திருக்கிறது.

இவர்களுக்கப்பால் படை அதிகாரிகளதும், வெளியிடங்களில் இருந்து வந்திருக்கும் அரச அதிகாரிகளதும் சொர்க்கமாகவே முல்லைத்தீவு இருக்கிறது. ஆனால் முல்லைத்தீவை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் கொட்டில்களிலும் வாழ்வைத் தொடர்கின்றனர். ஒருவேளை உணவுக்காக அவர்களது வாழ்க்கைப்போராட்டம் தொடர்கிறது .ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் எல்லாவற்றையும் அம்மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்போவதாகக் கூறுகிறார்கள். பட்டு வேட்டிக்குக் கனவு கண்டு கொண்டிருந்த வேளை கட்டியிருந்த கோவணமும் உருவப்பட்ட கதையைத் தவிர வேறொன்றுமல்ல.



# K.B intercom presents

காட்சிகள் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும்: ரூபன் 079 947 83 89




## LAUSANNE CITY

இடம்: **CITY PULLY CINEMA**

காலம்:
**28.10.2011 வெள்ளி**
நேரம்:
**இரவு 23.00 மணி**

காலம்:
**29.10.2011 சனி**
நேரம்:
**மதியம் 14.00 மணி**
**இரவு 23.00 மணி**

காலம்:
**30.10.2011 ஞாயிறு**
நேரம்:
**மதியம் 14.00 மணி**

## GENEVE CITY

இடம்: **Cinéma Nord-Sud**
**Rue de la Servette 78**
**1202 Genève**

காலம்:
**29.10.2011 சனி**
நேரம்:
**காலை 10.45 மணி**

காலம்:
**30.10.2011 ஞாயிறு**
நேரம்:
**காலை 10.45 மணி**

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்

**K.B INTERCOM,** AV. DES ALPES 40,1820 MONTREUX, 021 961 27 16
**A.G.R. ASIAN SHOP,** AVENUE DE MORGES 88, 1004 LAUSANNE, 021 624 38 10
**A.G.R. SEFAN SHOP,** RUE TRONCHIN 30, 1202 GENEVE, 022 733 09 83

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!



# உலகத்தை உலுக்கும் உயிராயுதம்.

பாகம் – 02

## ஒரு உயிரைப் பறிக்க பலிகொடுத்த உயிர்கள்.

— பண்டிதர் —

அரசியலில் ஒரு முக்கிய கருவியாகத் தற்கொலைத் தாக்குதல்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பாகவும், ரஷ்யாவின் பேரரசராக இருந்த இரண்டாவது அலெக்ஸான்டரைப் படுகொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் தான் அந்த வகையில் முதலாவது தாக்குதல் என்பதையிட்டும் கடந்த மாதத்தில் பார்த்தோம்.

ரஷ்யாவில் சர்வாதிகார ஆட்சியை நடத்திய இரண்டாவது அலெக்ஸான்டரைப் படுகொலை செய்வதற்காகப் பல்வேறு முயற்சிகள் புரட்சிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன.

1866 இல் அலெக்ஸான்டரைப் படுகொலை செய்வதற்கான முதலாவது முயற்சி சென்ற் பீற்றர்ஸ்பேர்க் நகரில் இடம்பெற்றது. 1866 ஏப்ரல் 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்த முயற்சி தோல்வியடைந்ததையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் தேவாலயங்கள் பலவற்றை அலெக்ஸான்டர் அமைத்தார். தன் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தமையைக் குறிக்கும் முகமாக அதற்குரிய வடிவங்களை அவர் தேவாலயங்களில் அமைத்தார்.

இதனைத் தொடர்ந்து 1879 ஏப்ரல் 20 ஆம் திகதி அவரைப் படுகொலை செய்வதற்கான மற்றொரு துணிகரமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தன்னுடைய மாளிகையிலிருந்து வெளியேவந்த அலெக்ஸான்டர், பாதுகாப்புப் பிரிவினரின் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது. 33 வயதான இளைஞன் ஒருவன் அவரைக் கொலை செய்வதற்குத் தயாராகக் காத்திருப்பதை அவதானித்த அலெக்ஸான்டர், பாதுகாப்புக்காக அந்த இடத்திலிருந்து தப்பி ஓடத் தொடங்கினார். அப்போது அவரை நோக்கி 5 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போதிலும், அவர் காயங்கள் எதுவும் இல்லாமல் தப்பித்துக்கொண்டார்.

துப்பாக்கி இளைஞன் வளைத்துப் பிடிக்கப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மே 28 ஆம் திகதி அவன் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டான். அலெக்ஸான்டருக்கு எதிரான புரட்சிக் குழு அவரைத் தீர்த்துக்கட்டுவதற்காகப் பல திட்டங்களுடன் காத்திருந்த போதிலும், குறிப்பிட்ட இளைஞன் தனிப்பட்ட முறையில் செயற்பட்டு இந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தன்னுடைய கோட்டைக்குள்ளேயே புகுந்து தன்னைப் படுகொலை செய்வதற்கான திட்டங்களுடன் ஒருவன் வந்திருந்தது அலெக்ஸான்டருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இச்சம்பவத்தையடுத்து தன்னுடைய பாதுகாப்பை அவர் பலப்படுத்திக்கொண்டார்.

இருந்த போதிலும் அலெக்ஸான்டருக்கு எதிரான புரட்சியில் ஈடுபட்டிருந்த மக்கள் சக்தி என்ற அமைப்பு அவரைத் தீர்த்துக்கட்டுவதற்கான திட்டங்களைக் கைவிடத் தயாராக இருக்கவில்லை. தோல்வியில் முடிவடைந்த ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய திட்டங்களை அந்தக் குழு வகுத்துக்கொண்டு மீண்டும் களம் இறங்கியது.

மற்றொரு முயற்சியாக அலெக்ஸான்டர் பயணம் செய்யும் விவெடியா ரயில் நிலையத்தில் அவருக்காக நேரம் குறித்த குண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த முயற்சியும் தோல்வியடைந்தது. அலெக்ஸ ான்டர் பயணம் செய்த ரயில், குறிப்பிட்ட ரயில் நிலையத்தைத் தாண்டிச் சென்ற பின்னரே குண்டு வெடித்தது. ரயில் நிலையம் சேதமடைந்த போதிலும் அலெக்ஸான்டர் தப்பித்துக்கொண்டது கிளர்ச்சிக் குழுவுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதேவே-ளையில், தன்மீது கிளர்ச்சியாளர்கள் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் தாக்குதலை நடத்தலாம் என்ற எச்சரிக்கை உணர்வை இது அவருக்கு ஏற்படுத்தியது.

இதற்கு அடுத்ததாக நன்கு துல்லியமாகத் திட்டமிடப்பட்ட மற்றொரு தாக்குதல் நடவடிக்கையை அலெக்ஸான்டரை இலக்கு வைத்து கிளர்சியாளர்கள் மேற்கொண்டார்கள். 1880 பெப்ரவரி 5 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அன்றைய தினம் அலெக்ஸ ான்டரின் மாளிகையில் இடம்பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் வைத்து அவரைப் படுகொலை செய்வதற்கே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது. அலெக்ஸான்டரின் மாளிகையின் கீழாகச் சுரங்கப் பாதை ஒன்றை அமைத்த கிளர்ச்சியாளர்கள், விருந்துபசாரம் நடைபெறும் அறையின் கீழாகக் குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் வகையில் டை-னமைட் குண்டுகளைப் பொருத்தினார்கள். பேரரசர் உணவருந்திக்கொண்டிருப்பார் எனக் கருதப்பட்ட நேரத்தில் குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. இருந்த போதிலும் அலெக்ஸான்டர் அப்போது உணவருந்தும் அறையில் இருக்கவில்லை. அலெக்ஸான்டரின் விருந்தினர்கள் பிந்தி வந்தமையால் அதிர்ஸ்டவசமாக அவர் தப்பித்துக்கொண்டார்.

இருந்தபோதிலும் இந்தப் பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 10 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட அதேவேளையில், 30 வரையிலானவர்கள் காயமடைந்திருந்தனர். அலெக்ஸான்டரின் மாளிகையும் பலத்த சேதமடைந்திருந்தது.

இந்தச் சம்பவம் அலெக்ஸான்டருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுப்பதாக அமைந்திருந்தது. கிளர்ச்சியாளர்கள் மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டுத் தாக்குதலை நடத்தக்கூடிய இயலு-மையைக் கொண்டவர்களாக இருப்பதையும், தன்னைத் தீர்த்துக்கட்டுவதற்காக எந்த விலை-யைக் கொடுப்பதற்கும் அவர்கள் தயங்காதவர்கள் என்பதையும் இது புலப்படுத்தியது. இச்சம்பவம் தன்னுடைய பாதுகாப்பில் அதிகளவு கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவை இருப்பதையும் அலெக்ஸான்டருக்கு உணர்த்தியது. புரட்சியாளர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் படைகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளையிட்டுக் கவனத்தைச் செலுத்துவதற்காகப் புதிய அதிகாரிகளையும் அவர் நியமித்துக்கொண்டார்.

அலெக்ஸான்டர் தன்னுடைய பாதுகாப்பில் ஏற்படுத்தியுள்ள புதிய மாற்றங்கள் உட்பட அனைத்து அம்சங்களையும் புரட்சியாளர்கள் மிகவும் நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருப்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். அதற்கேற்ற வகையில் தம்முடைய தாக்குதல் உத்திகளையும் அவர்கள் மாற்றியமைத்துக்கொண்டார்கள். அலெக்ஸ ான்டரைத் தீர்த்துக்கட்டுவது என்ற திட்டத்தை இந்தத் தோல்விகளால் கைவிட்டுவிட அவர்கள் தயாராக இருக்கவில்லை.

இருந்த போதிலும், ரஷ்ய அரசாங்கத்துடன் சமாதானத்துக்கான ஒரு சந்தர்ப்பத்தைக் கிளர்சிக்குழு கொடுத்தது. சுயாதீனமான தேர்தலையும், ஊடகங்கள் மீதான தணிக்கை நீக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டால் வன்முறைப் போராட்டத்தை தாம் கைவி-டத் தயாராக இருப்பதாகக் கிளர்சியாளர்கள் அறிவித்தார்கள். 1880 பெப்ரவரி 25 ஆம் திகதி புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதாக அலெக்ஸான்டர் அறிவித்தார். தன்னுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக அரசியல் கைதிகள் பலரையும் அவர் சிறைச்சாலைகளிலிருந்து விடுவித்தார்.

உட்துறை அமைச்சராக இருந்த லோ-றிஸ் மெலிக்கோப் என்பவரிடம் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மறுசீரமைப்பை விரும்புபவர்களைத் திருப்திப்படுத்தும் அதேவே-ளையில், மன்னராட்சியின் அதிகாரங்களைப் பாதுகாக்கும் வகையிலேயே புதிய அரசியலமைப்பைத் தயாரிக்குமாறு அவர் கட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். இதேவேளை-யில் ரஷ்யாவின் உள்ளூர் பாதுகாப்பைக் கயாள்வதற்காக ரஷ்யக் காவற்திணைக்களத்தில் விஷேட புதிய பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. இருந்த போதிலும் புதிய அரசியலமைப்புத் திட்டம் உருவாக்கப்படுவதில் தாமதமே காணப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் சக்தி அமைப்பின் உறுப்பினர்கள் அலெக்ஸான்டரைப் படுகொலை செய்வதற்கான மற்றொரு திட்டத்தை வகுத்துக்கொண்டார்கள். 1881 பெப்ரவரியில் ரஷ்யக் காவாற்படையின் புதிய பிரிவினர் இந்தக் கொலை முயற்சி தொடர்பான தகவல்களைக் கண்டுபிடித்ததுடன் அதில் சம்பந்தப்பட்ட சிலரையும் கைது செய்தனர். இருந்த போதிலும் கைதான எவரும் மேலதிக தகவல்களைக் கொடுக்கத் திட்டவட்டமாக மறுத்துவிட்டால், மேலதிகத் தகவல்களைக் காவலதிகாரிகளால் பெற முடியவில்லை.

இந்த நிலையில் 1881 மார்ச் 13 ஆம் திகதி மக்கள் சக்தி இயக்கத்தின் உச்சக் கட்டத் தாக்குதல் இடம்பெற்றது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இராணுவ வீரர்களின் நினைவு இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செய்வதை அலெக்ஸான்டர் வழமையாகக் கொண்டிருந்தார். அன்றும் வழமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவரது வாகனம் சென்றது. முற்றாக மூடப்பட்ட வாகனம் ஒன்றில் அலெக்ஸான்டர் செல்ல, வாகன ஓட்டிக்கு அருகே ஆயுதந்தாங்கிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் காவலுக்கு இருந்தார். இதற்குப் பின்னால் ஆறு பாதுகாவலர்கள் துப்பாக்கிகளுடன் குதிரைகளில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் பின்பாக காவலதிகாரிகள் அதிகாரிகள், விஷேட பாதுகாவலர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

இந்தளவு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் மத்தியில்தான் மக்கள் சக்தி இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் வெள்ளைநிறக் கைக்குட்டையால் சுற்றப்பட்ட பொருள் ஒன்றுடன் அந்தப் பகுதிக்குள் நுழைந்தார்.

சற்றுத் தயங்கிய அந்த இளைஞன் அலெக்ஸான்டர் பயணம் செய்த வண்டியை நோக்கி கைக்குட்டைக்குள் மறைத்துக்கொண்டுவந்த கைக்குண்டை வீசி எறிந்தார். குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியபோது பாதுகாவலர்களில் சிலர் கொல்லப்பட்ட அதேவேளையில் அலெக்ஸான்டரின் வண்டியோட்டியும் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவத்தில் அலெக்ஸான்டர் பயணம் செய்த வாகனம் சேதமடைந்த போதிலும் அலெக்ஸான்டர் காயமடையவில்லை. உண்மையில் அலெக்ஸான்டரின் வாகனம் தூக்கியெறியப்பட்டது. அலெக்ஸான்டர் பயணம் செய்தது குண்டு துளைக்காத பாதுகாப்பான வாகனம் என்பதுடன், பிரான்ஸின் மூன்றாம் நெப்போலியனால் அலெக்ஸான்டருக்கு அது பரிசாக வழங்கப்பட்டதாகும்.

அலெக்ஸான்டருக்குப் பாதுகாப்புக்காக வந்தவர்களால் குண்டுவீசியவர் உடனடியாகவே சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டபோது அருகேயிருந்த மக்களைப் பார்த்து அவர் ஏதோ சத்தமிட்டதை அவதானிக்க முடிந்திருந்தது. அதேவேளையில், மூடப்பட்ட வாகனத்துக்குள் இருந்த அலெக்ஸான்டர் நிலைமைகளைப் பார்ப்பதற்காகக் கதவுகளைத் திறந்துகொண்டு கீழே இறங்கினார். அதுதான் தனக்கு ஆபத்தாக வரப்போகின்றது என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. அவரை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு பாதுகாப்பு அதிகாரிகளும் காவல் அதிகாரிகளும் வலியுறுத்தினார்கள். அவரது பாதுகாப்புக்காக அவரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

இவ்வளவுக்கு மத்தியில் மறைவிடம் ஒன்றிலிருந்து அந்தப் பகுதிக்குள் திடீரெனப் புகுந்த மக்கள் சக்தியின் மற்றொரு உறுப்பினர் தன்னிடமிருந்த குண்டு ஒன்றை அலெக்ஸான்டரை நோக்கி வீசினார். பாரிய அதிர்வுடன் அந்தக் குண்டு வெடித்த போது அலெக்ஸான்டர் படுகாயமடைந்தவராக நிலத்தில் விழுந்தார். சிகிச்சைகள் பலனளிக்காமல் சிறிது நேரத்திலேயே அவர் மரணமடைந்தார். அவரது பாதுகாவலர்கள் பலர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். குண்டை வெடிக்க வைத்தவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இதனை ஒரு தற்கொலைத் தாக்குதல் என இராணுவ வல்லுனர்கள் பலரும் குறிப்பிடுகின்றார்கள். மக்கள் சக்தி குழுவுடன் வந்திருந்த மற்றொருவர் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தற்கொலை செய்துகொண்டார். காயங்களுடன் கைது செய்யப்பட்ட மற்றொருவர் சிறைச்சாலையில் மரணமடைந்தார். இச்சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதான மக்கள் சக்தி அமைப்பின் ஐந்து உறுப்பினர்கள் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.

இருந்த போதிலும் கடுமையான பல முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் இறுதியில் உயிராயுதத்தைப் பயன்படுத்தியே அலெக்ஸான்ரைக் கொல்ல முடிந்தது. அரசியல் தலைவர் ஒருவரைப் படுகொலை செய்வதற்காகத் தற்கொலைப் படையினர் பயன்படுத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுதான் என்பதை சரித்திரம் கூறுகின்றது.

அடுத்த மாத இதழிலும் உயிராயுதம் உலகை உலுக்கும்...


Orient Textiles and Jewellery
எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
2011 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
10% - 30%
SALE
1.10.11 - 31.12.11
மலிவுவிற்பனை
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958

# இல்லத்தரசிகளின் உள்ளங்கள் நாடும் மளிகை ஸ்தாபனம்

# VS CO CASH & CARRY



*197, rue du Fbg St· Denis*
*75010 Paris*
*France*

Tel: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04



we deliver a wide range of fruit, vegetable and grocery items, food items, non food items, dairy & frozen, soft drinks, see food items, fresh meat, sweet items, kitchen appliances, non kitchen items.




எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

தினமும் தள்ளுபடி விலையில் தரமான
பொருட்களைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

VS CO CASH & CARRY



5%*

50ஈரோவிற்கு மேல் பொருட்களை வாங்கும் அகரம் வாசகர்களுக்கு 5%* சிறப்புத் தள்ளுபடியும் உண்டு! இந்தக் கூப்பனை வெட்டிக் கொடுக்கவும்.

*அரிசி / மது வகைகளுக்கு இக் கூப்பன் செல்லுபடியாகாது.



# அன்னா ஹசாரே...! அடங்குமா இந்திய ஊழல்...?!

அறிவழகன்

உலகின் ஒவ்வொரு நாடும், தனது வளர்ச்சியின் அடிப்படையை மக்களின் வரிப்பணத்திலேயே உருவாக்கும். ஆனால் இந்தியா இவ்விடயத்தில் எதிர்மாறான ஒரு நாடு. மக்களின் வரிப்பணத்தை ஏய்ப்பதில் இந்திய அரசியல் வாதிகளுக்கு நிகர் யாரும் கிடையாது. அதேபோல இலஞ்ச ஊழலிலும் இந்தியாவிற்கு நிகர் இந்தியாவேதான். ஐம்பது ரூபா பெறும் போக்குவரத்துக்கண்காணிப்புக் காவல் அதிகாரி தொடக்கம், ஆயிரமாயிரம் கோடிவரை இலஞ்சமாகப் பெறும் அரசியல்வாதிகள் வரைக்கும், இலஞ்சமும், ஊழலும் இந்திய அரசின் அனைத்துப் பிரிவுகளிலும் நிறைந்துகிடக்கிறது. அடித்தட்டு ஏழைக்குடிமகன் பரம்பரை அதே நிலையிலேயே தமது வாழ்வைத் தொடர, அரசியல்வாதிகளின் பரம்பரை மட்டும் அடுக்கு மாடிகளில் வாழ்வதின் மர்மம் என்ன என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா...???

இராசீவ்காந்தி காலத்தில், இந்திய அரசை ஆட்டிப்படைத்த போபஸ் பீரங்கி ஊழல் தொடக்கம் இப்போதைய கருணாநிதி குடும்பத்தின் மகா ஊழல் வரைக்கும், இந்தியாவில் ஊழல் நுழையாத இடமே இல்லையெனலாம். ஆனால் ஊழலை ஒழிக்க உலகிலேயே அதிகமான அமைப்புக்கள் உள்ள நாடும் இந்தியாவேதான். ஆனால் வாய்ப்பேச்சிலே மட்டும்தான் ஊழல் ஒழிப்பு, செய்கையில் துளியும் கிடையாது,

இது இப்படியிருக்க, அண்மைக்காலமாகச் சாதாரண ஒரு காங்கிரஸ் கட்சித்தொண்டர், அகில இந்தியாவையே தன்பக்கம் ஈர்த்திருக்கிறார். காரணம், அவர் கையிலெடுத்திருக்கும் ஆயுதம் ஊழல் எதிர்ப்பு. அவர்தான் அன்னா ஹசாரே.

1937 ம் ஆண்டு மராட்டிய மாநிலம் பின்கார் கிராமத்தில் பாபுராவ் ஹசாரே- லட்சுமி பாய் தம்பதிகளுக்கு பிறந்தவர் தான் அன்னா ஹசாரே. அன்னா ஹசாரே தனது 6 வயதிலேயே தந்தையை இழந்தார். இதையடுத்து, அவருடைய சித்தி இவரை மும்பைக்கு அழைத்துச் சென்றார். அங்கு 7ம் வகுப்பு வரை படித்தார். பின்னர் மும்பை தாதரில் பூ வியாபாரத்தைத் தொடங்கினார். பின்னர் பூக்கடை ஒன்றைச் சொந்தமாகத் தொடங்கினார். அதில் ஓரளவு வருமானம் கிடைத்தது.

1962ல் இந்தியா சீனா இடையே ஏற்பட்ட போரில் இந்திய இராணுவத்துக்கு இளைஞர்களைத் தேடினார்கள். தாய்நாட்டைக் காக்கத் தன்னை அர்ப்பணிக்க முன்வந்தார். இராணுவத்தில் ஓட்டுனராகச் சேர்ந்த ஹசாரே 1965 ல் இந்தியா பாகிஸ்தான் போரில் எல்லைப் பகுதியில்

எதிரிகளுடன் சண்டையிட ஒரு குழுவுடன் அனுப்பப்பட்டார். பாகிஸ்தான் படையினர் தாக்குதலில் ஹசாரேயுடன் இருந்த அனைவரும் வீர மரணம் அடைந்தனர். ஹசாரே மட்டும் குண்டுக் காயத்துடன் உயிர் தப்பினார். 39 வயதில் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற ஹசாரே தனது சொந்த ஊரான ரலேகான் சிற்றிக்கு திரும்பினார். சொந்தக் கிராம மக்களின் வறுமையைத் துடைக்கக் களம் இறங்கினார். பின்னர் ஊழலுக்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். ஹசாரேயின் போராட்டத்தால் 1996 ல் சிவசேனா ஆட்சியில் ஊழல் செய்த 2 மந்திரிகளைத் தனது போராட்டத்தின் மூலம் வீட்டுக்கு அனுப்பினார். 2003 ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் செய்த 4 மந்திரிகள் மீது விசாரணைக் குழுவமைக்க வைத்தார்.

தற்போது ஊழலுக்கு எதிராகப் போராடி-வரும் அன்னா ஹசாரே ஊழலெதிர்ப்புக்கான லோக்பால் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட வேண்டும் என்று போராடி வருகிறார். இது தொடர்பாக, முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சந்தோஷ் ஹெக்டே, உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூசண் இவர்களுடன் ஊழலுக்கெதிரான இந்தியா என்ற அமைப்பின் உறுப்பினர்கள் ஜன்லோக் என்ற சட்டவரைவினைத் தயாரித்துள்ளனர். இது அரசு முன்வைத்துள்ள லோக்பால் சட்டவரைவினை விட வலுமிக்கதாகவும், அம்புட்ஸ்மன் எனப்படும் நீதிபதிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்க வகை செய்தும் இயற்றப்பட்டது. இந்த சட்டவரைவை இந்தியப் பிரதமர் ஏற்க மறுத்துள்ள நிலை-யில், ஊழல் புரிந்தவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் நடுவண் "லோக்பால்" மற்றும் மாநில "லோக் ஆயுக்த்" நீதிபதிகளுக்குக் கூடுதல் அதிகாரங்களும் வழங்கும் வகையில் வலுவான லோக்பால் சட்டவரைவினை இயற்ற அரசு பிரதிநி திகளும் குடிமக்கள் பிரதிநிதிகளும் இணைந்த கூட்டுக்குழு ஒன்றினை அமைக்கக் கோரி ஏப்ரல் 5 அன்று தில்லியிலுள்ள ஜந்தர்மந்தர் என்ற இடத்தில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். இறுதியில் வெற்றியும் கண்டார்.

அகில இந்தியாவின் முக்கிய பிரமுகர்களையும், தனது உண்ணாவிரதப்போராட்டத்தின் மூலம் தன்பக்கம் ஈர்த்த அன்னாவே இப்பொழுது இந்தியாவின் அனைத்து வயதினருக்குமான முன்மாதிரி நாயகன். புகழின் உச்சியில் இருக்கும் பல நடிகர்களே, அன்னா தான் உண்மையான நாயகன் எனப் புகழ்ந்திருப்பது சாதாரணமானதல்ல. இன மத வேறுபாடு இல்லாது அன்னா அவர்கள் ஊழலுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பது வரவேற்கத்தக்கது, ஆனால் பிரச்சனையும் இங்கேதான் ஆரம்பிக்கிறது.

இந்தியாவின் மந்திரிசபையின் பெரும்பான்மை, காங்கிரஸ் கட்சியிடம் உள்ள நிலையில் பதவியிலிருக்கும் பல மந்தி(ரி)களின், வங்கிக்கணக்குகள் உள்ளடங்கலான சொத்துமதிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. இறுதியாகக் குடியரசுத்தலைவர் பதவியை வகித்த அப்துல் கலாம் என்ற பரிசுத்தமான மனிதரிற்குப் பின், தனது சொத்துவிபரங்களை எந்தப் பிரமு-கரும் வெளியிட்டதாகத் தெரியவில்லை. விக்கிலீக்ஸ் வெளியிட்ட அறிக்கையின்படி, சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் இந்தியர்களில் பெரும்பான்மையினர் இந்திய அரசியல்வாதிகள் என்பது தெளிவாக்கப்பட்டது. அதில் தி.மு.க வின் பட்டாளமும் அடங்கும். குமுறும் மக்களின் வாயை அடைப்பதற்காகத் தி.மு.க மட்டுமே சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேற்குவங்கத்தில், மாயாவதி என்ற பெண் முதல்வர் எண்ணிக்கைக்கணக்கற்ற ஊழல் வழக்குகளில் சிக்கியநிலையிலும், தனக்கு ஒரு சோடி காலணி வாங்குவதற்காகப் பிரத்தியேக அரசு விமானம் ஒன்றை மும்பைக்கு அனுப்பியமை பற்றியதான விக்கிலீக்சின் அறிக்கையை உண்மை எனத்தெரிந்தும் இந்தியஅரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமை பற்றி

உறைந்துபோயிருக்கிறார்கள் அம்மாநிலத்தின் மக்கள்.

ஊழலுக்கெதிராகப் போர்க்கொடிதூக்கியிருக்கும் ஹசாரே, தனது உண்ணாவிரதத்தைக் கைவிடமுன், தனது நிபந்தனைகள் பற்றிப்பேசுவதாயின் இராகுல் காந்தியுடன் மட்டுமே பேசுவேன் என அறிவித்திருந்தார். அதன்படி இராகுல்காந்தியும் அதற்கு ஒத்துழைத்தார். அதன்பின் என்ன பேசினார்கள் என்று தெரிவிக்கப்படாமலே ஹசாரேயின் உண்ணாவிரதமும் முற்றுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது இந்தியப் புத்திசீவிகளின் கேள்வி என்னவெனின் ஊழலுக்கெதிரான அம்புட்ஸ்மன் சட்டங்களுக்கு இந்தியா ஒத்துழைக்குமாயின், அதிலே இராசீவ்காந்தியின் குடும்பம் விசாரிக்கப்படுமா என்பதே ...! காரணம் இராசீவ் குடும்பம் மீதான போர்பஸ் பீரங்கி ஊழல் வழக்கு இன்னமும் கிடப்பில் இருக்கிறது என்பதுவாகும்.

இதனைவிடவும், லல்லு பிரசாத் யாதவ் தொடங்கி, நடிகர் மோகன்லால் வரைக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிறைந்த ஒரு நாடாக இருக்கும் இந்தியாவில், ஒரு பெருமான்மைக்கட்சியின் ஆதரவின்றி, அன்னாவால் தனித்துச் செயற்பட முடியுமா என்பது கேள்விக்குறி. மேலாக, அடிக்கடி மாற்றம் பெறும் அரசியல் நிலையுடைய இந்தியாவில், எவ்வளவு காலப்பகுதிக்குள், வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யும் என்பதையும் குறிப்பிட்டுச்சொல்ல முடியாது. ஆகவே, அரசியற் கட்சிகளில் சார்ந்திருப்பதைவிடுத்து, ஒரு பாரியமக்கள் சக்தியைத் தன்னுடன் இணைத்துக்கொண்டால் மாத்திரமே அன்னாவின் சொல்லை, ஆட்சியில் இருக்கும் அரசு செவிமடுக்கும் என்பதை அன்னா புரிந்துகொள்ளவேண்டும். இல்லையேல் மாயாவதிகளையோ, மந்திரிகளையோ கட்டுப்படுத்துவது இயலாத காரியமாக அமையும்.

மேலாக, சரிந்துகொண்டிருக்கும் கட்சியின் செல்வாக்கை மீளப்பெற, அன்னாவின் உண்ணாவிரதத்தைப் பயன்படுத்திக்கொண்ட காங்கிரஸ் தன்மீதான விசாரணை ஆரம்பிக்குமிடத்து, அதற்கு முற்றுமுழுதாக ஒத்துழைக்குமா, அல்லது ஊருக்கு மட்டுமே அன்னாவின் உபதேசமா என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.





என். எஸ். ஜுவலரி
NS Jewellery & Textiles
BEST Collections!
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.
தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்.
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12 மாதம்
1200CHF. இணைய விரும்புவோர்
உங்களது பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
Neugasse 58, 8005 Zürich, Switzerland
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com

# என்ன கொடுமை சரவணா...!

கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ,
சுகமாய் இருக்கிறியளே...? பொங்குதமிழுக்குப் போனனியளே.....! எங்கட எழுச்சியை நிலைநாட்டுற இடங்களை நாங்கள் ஒருக்காலும் தவறவிடக்கூடாது பாருங்கோ, எனக்கும் போக ஆசையாத்தான் இருந்துது. ஆனால். இந்த வயசில உடம்புக்கு பெரிசா ஏலுதில்லைப் பாருங்கோ.

ஆ... எழுச்சி எண்டத்தான் ஞாபகம் வருகுது.என்னெண்டால், தமிழீழ மண்ணின்ர விடுதலைக்காக இதுவரைக்கும் எத்தனையோ மாவீரர்களும், நாட்டுப்பற்றாளர்களும் தங்கட இன்னுயிரைத் தியாகம் செய்திருக்கினம். தங்கட சுகங்களை மறந்து, நாட்டுக்காக வாழுறது ஒண்டும் இலேசுப்பட்ட காரியமில்லைப் பாருங்கோ. அப்படி வளர்த்த விடுதலை நெருப்பு ஒருநாளும் அணைஞ்சு போகாதுங்கோ. இன்றைய சூழ்நிலையில எங்கட மண் அடிமைப்பட்டுக்கிடந்தாலும், விடிவு ஒருநாளைக்கு வரத்தான் போகுது. அதுவரைக்கும் நாங்கள் மாவீரர்களை மறக்காமல், எங்கட விழுமியங்களைப் பாதுகாத்து வாழவேணும் பாருங்கோ. எங்கட சின்னங்களையும், மரியாதைக்குரிய அடையாளங்களையும், போற்றிப்பாதுகாக்க வேணும் பாருங்கோ. ஆனால் எங்கட ஆக்கள், போகப் போக எல்லாத்தையும் மறந்து, ஏதோ போனால் போகுது எண்டு, ஏதோ ஒரு அடையாளத்துக்காக வாழுற மாதிரிக் கிடக்குது.



விஷயம் என்னெண்டா பாருங்கோ கிட்டடியில ஐரோப்பிய நாடொன்றில நடந்த ஒரு நிகழ்வில, தேசியக்கொடியேத்தின நபர், அரைக்களுசானோட நிண்டு கொடியேத்தினாராம். பக்கத்தில நிண்டவையளும், ஊரில பட்டமேத்துறதைப் பராக்குப் பாக்குற கணக்குல ஆவெண்டு நிண்டிச்சினமாம். அட கண்றாவி, தேசியக்கொடி ஏத்தேக்க நாங்கள் எப்படி நிக்கவேணும் எண்டுறது கூடத் தெரியாட்டி, இதுகளையெல்லாம் என்னெண்டுசொல்லுறது...? தேசியக்கொடியை ஏத்தேக்க, அதுக்கு மரியாதையை செய்யுற மாதிரி உடை அணியவேணும் பாருங்கோ. நக்குற நாய்க்குச் செக்கென்ன, சிவலிங்கமென்ன எண்ட மாதிரி நிக்கப்படாது. சிங்களவன் ஒருபக்கத்தால கண்டது நிண்டதெல்லாத்தையும் அழிக்கிறான் எண்டு பாத்தால், எங்கடையள் அதுக்கு முதலே எல்லாத்தையும் இல்லாமப் பண்ணிப்போடுங்கள் போல கிடக்கு. மாவீரர்களின்ர குருதியில நனைஞ்சு சிவத்துப் போயிருக்கிற தேசியக்கொடிக்கு, நாங்கள் குடுக்கிற மரியாதையை சரியா இல்லாட்டிக்கு, புழுத்துத்தான் சாக வேண்டிவரும் கண்டியளோ . அவதானமாய் இருந்துகொள்ளுங்கோ. சொல்லிப்போட்டன்.

உதுகளைவிடவும் இன்னும் நிறையச் சொல்லலாம் பாருங்கோ. மண்ணுக்காக மடிஞ்ச உயிர்களை நினைச்சு, அகவணக்கம் செய்யேக்க, பொக்கேற்றுக்குள்ள இருக்கிற தொ(ல்)லைபேசியள கொஞ்சநேரம் நிறுத்தலாமல்லே. ஆனால் எங்கட ஆக்கள் செய்யாயினம். அவ்வளவுக்கு அலுவல் கூடின அலவாங்குகள் . அகவணக்கம் எண்டு சொன்னஉடன, எழும்பி நிண்டு ஒரு செக்கனில, "சிங்கு சா சிங்கு சா" எண்டு அது அடிக்கத்தொடங்கும். வாற ஆத்திரத்துக்குக் கோடாலியால கொத்தினா என்னெண்டு இருக்கும். முஸ்லிம் ஆக்கள் தொழுகை செய்யேக்க எப்பயாகிலும் பாத்தனியளே..! அல்லா"ஹ அக்பர் எண்டு அழைச்ச அடுத்த நொடியில, அடங்கி ஒடுங்கி அமைதியாகி நிப்பினம். அது சரி, நாங்கள் கோயிலுக்குபோனாலே கும்புடுறதில்லைத்தானே. பிறகெங்க...........!!!

இந்த முறையும் உங்களுக்கு ஒரு பாட்டுச் சொல்லித்தாறன். உரக்கப் பாடுங்கோ..!

கும்பிடப்போன தெய்வம் எட குறுக்க வந்ததல்லே,
குறுக்க வந்த தெய்வம் எனக்குக் குத்திப் போட்டுதல்லே....
திருந்த மாட்டமே நாங்கள் திருந்த மாட்டமே - நீங்கள்
என்ன சொல்லித் திட்டினாலும் திருந்தமாட்டமே
திருத்தமாட்டமே தவறைத் திருத்தமாட்டமே
பெரியமனுசர் நாங்களெல்லாம் வருந்த மாட்டமே...!
அப்ப வரட்டே...!

நீங்கள் காணும்
அல்லது அறியும்
சமுதாயச் சீர்கேடுகளை
கல்லெறி வேலுப்பிள்ளையருக்கு
எழுதியனுப்புங்கள்

kvpillai@akaram.eu




ஒரு தமிழ் இணையத் தளத்தில் வாசகர் ஒருவர் பதிவு செய்துள்ள விமர்சனத்தில் இருந்து சில வரிகள் பலரது மன உறுத்தலின் வெளிப்பாடு போல் உள்ளதால் எமது வாசகருக்குத் தருகி-றோம்.

இதோ அந்த வரிகள்-"ஈழத் தமிழர்கள் போராட வேண்டிய அவசியமில்லையா? இப்படிப் பட்ட செய்திகள் ஈழத் தமிழரை அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன். இதை ஒரு மாற்று இனம் சார்புச் செய்தித் தளம் வெளியிட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கு நிற்க! இன்னுமோர் இணையச் செய்தி நாடு கடந்த அரசாங்கத்தைத் தூற்ற வேண்டும் என்பதற்காகவே அமெரிக்காவில் போடப்பட்ட வழக்கை யாரு தொடுத்தார்கள் என்ற தலைப்பைப் பயன் படுத்துகின்றார்கள்...

மற்றச் செய்தியொன்று கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனின் புகைப்படத்தில் தெரியும் அவர் அங்கம் பற்றிய செய்தி..

எதிரிகளின் இணையத்தளம் எனத் தமிழர்களின் போராட்டத்தை மிக அற்பமாக மலினப்படுத்தும் செய்திகள்... நம்மிடையே கலந்துவிட்ட நச்சுக்கள்...

நாம் மீள மார்க்கமில்லாது ஆழ அமிழ்த்தும்.. என்ன செய்வது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்..

எதிரியின் தளத்தை இப்போது பாருங்கள் பச்சை அசிங்கங்களை நாகரிகமாக சமூக அக்கறையுடன் வெளியிடுவதாகக் கூறிக் கொண்டே விபச்சாரம் செய்யும் தளங்கள்.."

## கப்ஸா கயிறு திரிக்கும்

மகிந்த அரசு, ஒன்றே தேசம் ஒன்றே மக்கள் என்ற புதிய கொட்டொலியுடன் தனது சிங்களப் பேரினவாதத் தமிழ் இன அழிப்புக்குப் புதிய சாயம் பூசி சர்வதேச மௌனத்தைச் சம்பாதித்து வருகிறது. இந்த வகையில் அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் உதுல் பிரேமரட்ண வடக்கிலும் தமது அரசுக்கு எதிரான போராட்டங்களை நடத்தி தமிழ் மக்களின் நண்பனாக அடையாளப் படுத்தியவர். அதனால் அவரின் அனைத்து செயற்பாடுகளும் தமிழர் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாகத் தமிழ் இனம் உதுல் போன்ற பல சிங்கள நண்பர்களை நம்பி ஏமாந்த வரலாறு

# பழுதுப் பத்தும்-

உண்மை



## ஊடகங்கள்!

சேர்.பொன். இராமநாதன் காலத்தில் இருந்தே தமிழினம் கண்டுவிட்டது. இந்த நிலையில் அமெரிக்க நாரத மகாரிஷி றொபேட் ஓ பிளேக்குடன் இவர் அந்தரங்கப் பேச்சு நடத்தினார் என்ற செய்தி உண்மையாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் இருவரும் தமிழர் பற்றியும் தமிழ் மக்கள் பற்றியும் பேசினார்கள் என ஊடகங்கள் கயிறு திரிப்பதும் அதனைத் தமிழ் ஊடகங்களே தமிழர் மத்தியில் பரப்பித் தமிழ் மனங்களைச் சலவை செய்வதும் மகா மோசடியும் முட்டாள்தனமும் என அகரம் சொல்லிக் கொள்ள விளைகிறது.

## வாய் திறந்து பேசுகிறது

கனேடியப் பாராளுமன்றத்தில் புதிய அகதிகள் சட்டம் பற்றிப் பேசும் போது 2009லும் 2010லும் இலங்கைத் தமிழ் வம்சாவழியினர் ஒட்டாவாவில் ஆயிரக் கணக்கில் கூடித் தமது நாடும் தமது பிரதம மந்திரியும் தமது குடும்பங்களின் அழிவைத் தடுத்து நிறுத்த ஏதாவது செய்ய, ஏதாவது பேச வேண்டும் எனக் கெஞ்சினார்கள். ஆனால் பிரதம மந்திரி எதுவும் செய்யவில்லை. எனவே இன்று ஈழ அகதிகளை உருவாக்க உதவியதே கனேடிய அரசு என அண்மையில் புதிய ஜனநாயகக் கட்சி பா.உ. ஜறீன் மதீசன் பேசினார். அவருக்கும், எமது உண்மை நிலையை அவருக்கு எடுத்துரைத்த அனைவரையும் அகரம் மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறது.



## ஆற்றல் மிகு ஆபிரிக்கப் பெண்மணி வங்காரி மாத்தாய்.

2004 ஒக்டோபர் மாதம் 8ந் திகதி நோபல் பரிசு பெற நோர்வேயில் காட்சி அளிக்கத் தோன்றும் வரை வங்காரி மாத்தாய் என்ற இந்த ஆபிரிக்கப் பெண்மணியும் அவரது பணிகளும் அதிகம் வெளியே அறியப் படாமலே இருந்தது. இவரே நோபல் பரிசு பெற்ற ஆபிரிக்கப் பெண்மணியும் சுற்றுச் சூழலுக்கு விருது பெறும் முதல் நபராகவும் விளங்குகிறார்.

கென்யா தேசத்தில் நியேரி மாகாணத்தில் தெட்டு பகுதியில் இகிதெ கிராமத்தில் 1940 ஏப்ரல் மாதம் 1ந் திகதியில் பிறந்த இவர் செப்டெம்பர் மாதம் 25ந் திகதி தமது 71வது வயதில் கருப்பையில் புற்று நோய் காரணமாக இயற்கை எய்தினார்.

இயற்கை இவரால் பெருமைப்படும் அளவுக்கு வேறு மனிதர் எவரும் இல்லை எனும் அளவுக்கு இவரின் மர நடுகைத் திட்டம் அமைந்து விட்டது. காடுகளை அழிப்பவரின் கொடுமை கண்டு அதற்கு எதிராக 1970ல் மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பெண்களை அணி அணியாகத் திரட்டித் தாமும் இணைந்து மரக் கன்றுகளை நடுவதில் மிகப் பெரும் ஆர்வம் காட்டினார். இப்படி இவரால் நாட்டப்பட்ட மரக்கன்றுகளின் தொகை இலட்சங்களைக் கடந்து கோடிக் கணக்கை எட்டி விட்டது.

தாவரவியலில் இளமானி, முதுமானிப் பட்டமும் விலங்கு உடற்கூற்றியலில் கலாநிதிப் பட்டமும் பெற்ற இவர் சமூக சேவை அரசியல் என பல நிலைகளிலும் தமது ஆளுமையை நிலை நாட்டி உள்ளார். வாழ்வியலுக்கான நீடித்த உறுதிப்பாடும் மக்களாட்சியும் அமைதியும் வேண்டி அவர் அயராது உழைத்தார். பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி 2003 முதல் 2004 வரை சுற்றுச் சூழல் இயற்கை வளங்கள் துறைகளின் துணை அமைச்சராகப் பணி செய்தார்.

புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் யேர்மனியிலும் ஆபிரிக்க அமெரிக்க மையத்தின் ஆதரவில் அமெரிக்க பிட்ஸ்பேர்க் பல்கலைக் கழகங்களிலும் தமது பட்டப் படிப்பை முடித்துத் தமது மண்ணோடும் மக்களோடும் நின்று நீதிக்கும் நல்லாட்சிக்கும் போராடிப் பல முறை ஆட்சியாளரின் கோபத்துக்கும் கண்டனம் தண்டனை என அனைத்து வகை சவால்களையும் எதிர்கொண்டு வாழ்ந்து காட்டிய வீரப் பெண் மணியாக வங்காரி மாத்தாய். இலட்சியப் பெண்ணான இவரின் ஆத்மா சாந்தி பெற அகரம் பிரார்த்திக்கிறது.




# சிங்களத்தின் கணக்கும் வழக்கும்!...

நடந்து முடிந்த போரில் கொல்லப் பட்ட, காணாமல் போன, கைதான தமிழ் மக்களின் சரியான எண்ணிக்கை யாருக்குமே தெரியாத நிலையே உள்ளது. அவை பற்றிய விபரங்களை அரசு தெரிந்து கொள்ளும் வழிவகைகள் நிறையவே இருக்கின்றன. ஆனால் அரசு அதனைத் தவிர்த்து அனைத்தையுமே மூடி மறைக்க விரும்புகிறது. அதன் மூலமே, அது எதிர் நோக்கும் போர்க் குற்றச் சாட்டுகளில் இருந்து தப்பிக்க முடியும்.

அந்தப் பகுதிகளில் எவராவது போய் வர முடிந்தால் மட்டுமே யார் யாரைக் காணவில்லை என்ற தேடல் மூலம் போரினால் ஏற்பட்ட உண்மையான உயிர் இழப்புகளையும் தமிழ் மக்களின் அழிக்கப் பட்ட சொத்துக்களின் மதிப்பையும் அறிய முடியும். ஆனால் போரினால் தமது வாழ்வு இடங்களில் இருந்து விரட்டி அடிக்கப் பட்ட மக்களை மீளவும் குடியேற அனுமதிக்காது வைத்திருக்கும் வரை இந்த விபரங்களை அறியும் வாய்ப்புக் கிடைக்காது.

அந்த வாய்பைத் தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது. இதன் மூலம் அரசுக்கு இரட்டிப்பு இலாபம் உள்ளது. முதலாவது தமிழ் மக்களின் நிலங்களை முற்று முழுதாகச் சிங்கள மயமாக்கித் தமிழரின் தேசியம் இறையாண்மை என்ற உரிமைகளை வேரோடு பிடுங்கி விடுவது. இரண்டாவது தமிழரின் நிலத்தைப் பட்டா போட்டு விற்றுப் பணம் சேர்ப்பது. இவை இரண்டும் நிறைவேறிய பின்னர் இனப் பிரச்சினை என்ற நோய் அடியோடு அற்றுவிடும்.

இந்த உண்மை போரில் துணை நின்ற அத்தனை நாடுகளுக்கும் புரியும். எனவே அடிப்பது போல் அடித்து அலறவைத்த படியே சிங்களத்தின் தயவோடு தமது வர்த்தகப் பிராந்திய நலன்களைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளன. அதே வேளை சிங்களத்துக்குத் தேவையான கால அவகாசத்தைக் கொடுத்த படியே தமிழர் தரப்பை அழுத்தங்கள் மூலம் அமைதிப்படுத்தி நடந்தவை நடந்தவை ஆகட்டும் அடுத்த கருமத்தைப் பார்ப்போம் என கருமாதி என்ற ஈமக் கிரியைகளில் கவனம் செலுத்த வற்புறுத்துகின்றன.

ஆனால் போரின்போது வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் தொகை என்ன என்பதை அரசு குறைத்துக் கணக்குக் காட்டி வருகிறது. மன்னார் பேராயர் கருத்துப்படி 146000 மக்கள் கணக்கில் இல்லாது போய்விட்டனர் என்கிறார். மரத்தில் இருந்த குருவிகளின் எண்ணிக்கை போன்று தமிழரின் எண்ணிக்கையும் இருக்கிறது. இது பற்றித் தமிழரின் அரசியல் தலைவர்கள் யாருமே கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

18வது ஐ.நா. சபை மனித உரிமை அமர்வில் பார்ப்போம் என சென்ற வருடம் எம்மை அமைதிப் படுத்திய நாடுகளின் நிலை இந்த வருடமும் ஏமாற்றம் தருவதையே காணமுடிகிறது. ஆனால் தாயகத்தில் மக்கள் மீது அன்றாடம் ஏற்படுத்தப்பட்டு வரும் அழுத்தம் அசுர நிலைக்குப் போய் விட்டது. அதனை எதிர் கொள்ளும் அரசியல் உறுதிப்பாடு தமிழர் தரப்பில் அறவே இல்லாத நிலையே உள்ளது.

தமிழரின் அரசியல் அபிலாசை என்ற மந்திரச் சொல்லை உச்சாடனம் செய்த படியே தமிழ் மக்களை உரு ஏற்றி தமது தலைமையைத் தக்க வைத்து விடலாம் என்ற நம்பிக்கை தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு அளவுக்கு அதிகமான பலனையே அளித்து வருகிறது.

இதில் புலம் பெயர் நாடுகளில் இவர்கள் தந்துள்ள வருகையும் தமிழ் மக்கள் மத்தியில் தாம் இன்னும் பலமான தலைமை தாங்கும் சக்தி எனக் காட்டும் முயற்சியும் அவர்களுக்கு வெற்றி கொடுப்பதையே காணமுடிகிறது.

தமிழ் மக்களை சிங்களம் ஏமாற்றியதை விடவும் சர்வதேச சமூகம் ஏமாற்றியதை விடவும் தமிழ் மக்களின் தலைவர்கள் ஏமாற்றிய சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திய அழிவுகளும் மிக அதிகம் என வரலாற்றில் நிறையவே ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் தமிழர் வரலாறு என்ற பல அரசாங்க ஆவணப் படங்களுடன் அதன் ஆசிரியர், சிட்னி பல்கலைக் கழகத்தின் வரலாற்றுக் கலாநிதிப் பட்டம் பெற்ற முருகர் குணசிங்கம் எழுதிய நூலைப் படிப்பவருக்கு இந்த உண்மை புரியும்.

தமிழரின் தன்னலமற்ற ஒரு பல்துறைத் தலைவராக விளங்கிய ஆறுமுக நாவலர் பெரிய அளவில் நம்பிக்கை வைத்துப் பொன்னம்பலம் இராமநாதனைத் தமிழரின் தலைவராகத் தெரிவு செய்ய உழைத்தார். தம்மோடு பல சமூக தொண்டுகளில் இணைந்து யாழ்ப்பாணத்தில் பங்காற்றியவரும் இராமநாதனின் மைத்துனருமான பிறிட்டோ ஒரு கிறிஸ்தவர் என்ற காரணத்தால் அவரை எதிர்த்துக் கொழும்பு வாசியான இராமநாதனை சைவ சமயத்தவர் என்ற காரணத்தால் 1879 முதல் தமிழர் பிரதிநிதியாகச் சட்டசபையில் இடம் பெறச் செய்தார் (பக்கம் 465). அப்படிப் பதவிக்கு வந்த இராமநாதனைப் பற்றி இன்னொரு வரலாற்றுப் பேராசிரியரான ஏ.ஜே.வில்சன் இப்படிக் கூறி உள்ளார். "இலங்கையின் செல்வம் படைத்த சிங்கள, தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்திருப்பதாகவும் அவர் தமது சொந்த இனமான தமிழரின் அரசியல், பொருளாதார எதிர்காலத்தில் அவ்வளவு அக்கறை கொண்டிருக்கவில்லை."

இராமநாதன் பற்றிய இக்கூற்று எந்த அளவுக்கு உண்மை என்பதை இராமநாதனின் இலங்கைத் தேசியச் சங்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராக இருந்தும், அரசியல் செயற்பாடுகளில் தலையிடாமல் இருப்பதில் கவனமாக இருந்தமையும் 1915ல் இந்திய இஸ்லாமிய மக்களுக்கு எதிரான சிங்களத்தின் முதலாவது இனவெறித் தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் மக்களின் நலன்களைக் கவனத்தில் எடுக்காது விட்டது மிகப் பெரும் நம்பிக்கைத் துரோகம். கலவரத்தால் பிரித்தானிய அரசால் சிறையில் அடைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்கு ஆதரவாக இலண்டன் வரை சென்று வாதாடி விடுவித்த இவரின் செயல் சிங்களத்தை இன்று முள்ளி வாய்க்காலோடு நிற்காது தமிழர் தேசம் எங்கும் தமிழரைக் கொன்றொழிக்கும் அளவுக்கு வந்துள்ளதைக் காணலாம். அத்தோடு இராமநாதனின் இனமானம் மொழிமானம் மனிதாபிமானம் அற்ற செயலால் தமிழ் மக்கள் மீது இஸ்லாமிய மக்கள் துளி அளவும் நம்பிக்கை கொள்ளாத அளவுக்கு இரு பிரிவினரையும் அந்நியப்படுத்தி விட்டது.

ஒரே இலங்கையின் ஏக தலைவனாகும் ஆசையில் அவர் தமிழன் என்ற உணர்வே இல்லாது பிரித்தானிய அரசின் சேர் பட்டம் வாங்கும் கனவில் மிதந்தார் என்பதை இராமநாதனுக்கு சேர் ஆதர் கோடன் என்ற இலங்கையின் தேசாதிபதி எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டுள்ளமை காட்டுகிறது. "உமக்கான உயர் பதவியை (சேர் பட்டம்) நான் கேட்டுள்ளேன். அதற்கான சிபாரிசு அடுத்த ஆண்டளவில் என்னால் செய்யப்படும் இடத்து அது கவனிக்கப்படுமென நம்புவதற்குக் காரணம் உண்டு." தமிழர் வரலாற்றில் முதல் வெள்ளை வேட்டிக் கள்வன் இராமநாதன் என்பதற்கு வேறு ஆதாரம் தேவையா?

மட்டக்களப்பு மக்களின் துயரம் கேட்பார் இல்லையா?

மட்டகளப்பு கிழக்குப் பல்கலைக் கழக அகதிகள் முகாமில் இருந்து செப்.5, 1990ல் இலங்கை இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட 174 தமிழ் இளைஞரில் 158 பேரின் நிலை என்ன? திரும்பவும் செப் 13ல் பிடித்துச் செல்லப்பட்ட 16 இளைஞரின் கதி பற்றி 21 வருடங்களாகியும் இன்னது என்று அறிய முடியாது தவிக்கும் உற்றார் உறவினருக்கு என்ன பதில்?

செம்மணி முதல் கொக்கட்டிச் சோலை ஏறாவூர் மன்னார் மூதூர் எனப் பல பிரதேசங்களிலும் பிடிபட்டவர்கள் நிலை என்ன? யார் யாரோ எங்கெங்கோ சுற்றி எவர் எவரிடமோ பேசித் திரிகிறார்கள் இந்த மக்களுக்கு நீதி நியாயம் கேட்க யாருமே கிடையாதா?

வந்தாறு மூலை குடிசார் மக்கள் அமைப்பு இலங்கை அரசை போர் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றி விசாரிக்கக் கோரும் சர்வதேச சமூகம் தமது உறவினரின் மறைவு பற்றியும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களை இலங்கை இராணுவ கப்டன் மூனாஸ், கப்டன் பாலிதா, கப்டன் குணரட்னா, மேஜர் மஜீத் தலைமையிலான புளொட் மோகன் மற்றும் முஸ்லிம் ஜிகாத் மஜீத் ஆகியோர் அடங்கிய குழு 11 பேருந்துகளில் பிடித்துச் சென்றனர் எனக் கூறும் இவர்கள் இது பற்றிப் புலம் பெயர் தமிழ் ஆர்வலர்கள் ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசினால் புரியப்பட்ட இக்குற்றங்களுக்கும் சர்வதேச அரசுகளிடம் நீதி கோர வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

# வான் முகிலை வசப்படுத்த நினைக்கும் மனிதகுலம்!

வண்ண முகில் அழகை ஓவியங்களும் காவியங்களும் மனித குலத்துக்கு விருந்தாக்கிய காலம் போய்விட்டது. இப்போ விஞ்ஞான ஆய்வுகளின் பொருளாக வான் முகில் மாறிவிட்டது. மாறிவரும் சூழலின் மர்மங்களை அறிய முகில்கள் ஒரு ஊடு பொருளாக மாறிவிட்டது.

200 மீற்றர் உயரக் கோபுரம் அமைத்து அந்த உயரத்தில் நிலவும் வெப்பம், காற்றழுத்தம், நீர்த்தன்மை, கதிர் வீச்சு என்பவற்றை அளவிட்டுப் பூமிப் பந்தில் ஏற்படும் மாற்றங்களைப் படித்து எதிர்கால நிலைமைகளைக் கணித்தறிய மனித குலம் தொடங்கி விட்டது. இதன் மூலம் முகில் எப்படித் தோற்றம் பெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்கிறோம் என்கிறார் நெதர்லாந்தின் அரச வானியல் நிறுவனத்தின் தலைமை ஆய்வாளர்.

நெதர்லாந்தின் கிராமப் புறத்தில் உள்ள இந்நிறுவனத்தில் முகிலைக் கண்காணிக்கும் பல வகையான கருவிகள் நிறைந்து கிடக்கின்றன. அவை முகில்த் துணிக்கைகளை அளவிடும் ராடார் கருவிகள், சூரியக் கதிர் வீச்சுகளை அளவிடும் உணர்கருவிகள் மற்றும் முகிலின் உயரத்தைக் கணக்கிடப் பயன்படுத்தப்படும் சேர் கதிர் வீச்சுக் கருவிகள். இவை எல்லாம் காலமாற்றத்தைக் கணக்கிடத் தேவையான முக்கிய மாற்றங்களை முகிலில் கண்டறியத் தேவையான ஆய்வுகள் என்கிறார் இந்த ஆய்வாளர்.

பூமியின் குணாதிசயங்களைத் தீர்மானிப்பது முகிலின் தன்மையாகும். முகில் பூமியின் மூன்றில் இரண்டு பங்கு எமது பகுதியை மூடி உள்ளன. நாம் சூழலை மாசுபடுத்தும் போது இதில் மாற்றம் நிகழ்கிறது. எனவே முகில் பற்றிய ஆய்வுகள் அவசியம் என்கின்றனர் ஆய்வாளர்கள். எல்லாம் சரி மாசு படுத்தலால் கேடுகளும் ஆபத்துகளும் ஏற்படுகின்றன எனத் தெரிந்து கொண்ட பிறகும் மனிதன் மாறாது சூழலை மாசுபடுத்தும் போது இந்த ஆய்வுகளால் என்ன பயன்?





# தமிழ் சினிமாவும் தழுவல்களும்...

வி.சபேசன்

இம்முறை ஆஸ்கார் விருதுப் போட்டிக்கு இந்தியாவில் இருந்து "ஆதாமின்டே மகன் அபு" என்கின்ற மலையாளப் படம் தேர்வாகியிருக்கின்றது. ஐந்து தமிழ் படங்கள் இதற்கான பரிசீலனையில் இருந்தாலும், கடைசி-யில் அவை தேர்வாகவில்லை.

எந்திரன், தெய்வத் திருமகள், கோ, ஆடுகளம், முரண் என்கின்ற ஐந்து திரைப்படங்களும்தான் அவை. எந்திரன் பெரும் வசூலாலும், தொழில்நுட்பத்தாலும் பலரது கவனத்தை ஈர்த்திருந்தது. மற்றைய படங்கள் தரமான திரைப்படங்களாக விமர்சகர்களால் பாராட்டை பெற்றிருந்தன. ஆனால் எந்தப் படமும் ஆஸ்காருக்கு அனுப்புவதற்கான தகுதியைப் பெறவில்லை என்று தேர்வுக்குழு முடிவுசெய்து விட்டது.

ஆஸ்காருக்கு தமிழ் படங்கள் அனுப்பப்படாதது குறித்து யாரும் உண்மையில் கவலைப்படுவது இல்லை. இந்தியப் படங்கள் எதுவும் தேர்வா-காது என்று தெரிந்து கொண்டுதான் ஒரு சடங்கு போன்று படங்களை அனுப்பி வைக்கின்றார்கள். சில விதிவிலக்குகளை தவிர்த்து ஆஸ்கார் என்பது அமெரிக்கப் படங்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஒரு விருது. ஆஸ்கார் விருதைப் பெறுவதற்கு ஒரு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல், கலிபோ-ர்னியாவில் உள்ள திரையரங்கில் முதன் முறை-யாக வெளியாகி அந்தத் திரையிரங்கில் ஆகக் குறைந்தது 7 நாட்கள் ஓடியிருக்க வேண்டும். இதன்படி இந்தியப் படங்கள் ஆஸ்கார் விருதை வெல்லுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

ஆயினும் "சிறந்த வெளிநாட்டுப் படம்" என்று ஒரே ஒரு விருது மட்டும் வெளிநாட்டுப் படங்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்த ஒரு விருதுக்காக இந்தியா உட்பட பல நாடுகளின் படங்கள் போட்டியிடும்.

ஆகவே தமிழ்ப் படங்கள் ஆஸ்கார் விருதுப் போட்டிக்கு அனுப்புவதற்கு தேர்வாகவில்லை என்பது பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால் போட்டிக்கு தமிழ் படங்கள் தேர்வு செய்யப்படாமைக்கான காரணம் சற்று சிந்திக்க வேண்டிய ஒன்றாக இருக்கின்றது தேர்வுக் குழுவி-ல் தமிழ் சினிமாவைச் சேர்ந்த கங்கை அமரன் போன்றவர்களும் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் இந்தப் படங்கள் தேர்வு செய்யப்படாததற்கான காரணத்தை போட்டு உடைத்தார்கள். இந்த ஐந்து தமிழ் படங்களிலும் வெளிநாட்டுப் படங்களின் தழுவல், காட்சிகள், கதைக் களம் என்பவை இருந்ததாகவும் அதனாலே-யே அவை நிராகரிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ் சினிமாவிற்கு பல புதிய இளைஞர்கள் இயக்குனர்களாக வந்து தமிழ் சினிமாவை புதிய பாதையில் அழைத்துச் செல்வதாக பலர் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இப்படியான ஒரு கருத்தை அவர்கள் வெளிப்படையாக தெரிவித்திருப்பது பலருக்கு வருத்தத்தை கொடுத்திருக்கும்.

ஆனால் உண்மை அதுதான். வெளிநாட்டுப் படங்களின் கதையையும் காட்சிகளையும் தழுவி தமிழ் படங்களை எடுப்பது நீண்ட காலமா-கவே நடந்து வருகின்ற ஒன்றுதான் என்றாலும் கடந்த சில ஆண்டுகளாக அவை மிகவும் அதிகரித்து வருகின்றன.

ஒரு தமிழ்ப் படம் சற்று வித்தியாசமான கதையம்சத்துடனோ, புதிய காட்சிகளுடன் வந்தாலோ, அது ஏதாவது ஒரு வெளிநாட்டுப் படத்தில் இருந்து "சுட்டதாகத்தான்" இருக்கும் என்று கருதுகின்ற அளவிற்கு நிலைமை இருக்கின்றது.

மேலே குறிப்பிட்ட படங்களில்

"தெய்வத் திருமகள்" ஒரு ஆங்கிலப் படத்தின் அப்பட்டமான தழுவல். "ஐ ஆம் சாம்" என்கின்ற பெயரில் 2001 வெளிவந்த ஒரு ஆங்கிலத் திரைப்படத்தை அப்படியே தமிழில் வெளியிட்டிருந்தார்கள். அப் படத்தின் கதையும், பல காட்சிகளும் அப்படியே "தெய்வத் திருமகள்" படத்தில் இடம் பெற்றிருக்கும். விக்ரமின் நடிப்பில் கூட "ஐ ஆம் சாம்" படத்தின் நாயகனான சீன் பென்னின் பாதிப்புத் தெரியும்.

சேரன் மற்றும் பிரசன்னா நடிப்பில் மிக அண்மையில் வெளிவந்திருக்கின்ற "முரண்" திரைப்படம் கூட "ஸ்ரேஞ்சர் ஒன் ஏ ரெய்ன்" என்கின்ற படத்தின் தழுவலாக இருக்கின்றது. "முரண்" படத்தின் இயக்குனரும் இதை மறுக்காமல் "என்றைக்கோ பார்த்த ஒரு ஆங்கிலப் படத்தின் பாதிப்பில் இதை எடுத்திருக்கிறேன்" என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து விட்டார்.

ஆடுகளம் திரைப்படத்தில் பல வெளிநாட்டுப் படங்களின் பாதிப்புத் தெரியும். ஆடுகளத்தின் இயக்குனர் வெற்றிமாறனும் பல படங்களின் பாதிப்பு இருப்பதாக வெளிப்படையாகவே ஒரு பட்டியலையும் தந்திருந்தார். உண்மையில் ஆடுகளம் ஒரு தமிழ்ச் சினிமா. அதனுடைய கதையும், கதைக்களமும் மனிதர்களும் தமிழ் மண்ணுக்கு சொந்தமானவர்கள். மற்றைய படங்களோடு இதைச் சேர்க்க முடியாது.

ஆஸ்கார் தேர்வில் பரிசீலிக்கப்பட்ட மற்றைய படங்களான எந்திரன், கோ போன்ற படங்களைப் பற்றி சொல்லத் தேவையில்லை. ஆஸ்கார் விருதுக்கு எவ் வகையிலும் தகுதி அற்ற படங்கள் அவை.
ஏற்கனவே சொன்னது போன்று ஆஸகார் விருதுகளில் ஓரே ஒரு விருது மட்டும் சிறந்த வெளிநாட்டுப் படம் ஒன்றிற்கு கொடுக்கப்படுகிறது. மண்ணையும் மக்களையும் மனிதத்தையும் பேசுகின்ற படத்திற்குத்தான் அந்த விருது போய் சேரும்.

இதுவரை இந்தியப் படங்கள் மூன்று தடவைகள் மட்டுமே ஆஸ்காரின் கடைசித் தேர்வுப் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 1957இல் "மதர் இந்தியா" என்கின்ற திரைப்படமும் 1988இல் "சலாம் பாம்பே" என்கின்ற திரைப்படமும் 2001இல் "லகான்" திரைப்படமும் ஆஸ்கார் தேர்வுக் குழுவின் கடைசிப் பட்டியலில் இடம்பெற்று ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியருந்தன. ஆனால் இந்தப் படங்கள் ஆஸ்கார் விருதினைப் பெறவில்லை.

தமிழ் திரைப்படங்கள் ஆஸ்கார் விருதுத் தேர்வுக்காக அனுப்பப்படுவது வெகு குறைவு. முதன் முதலாக சிவாஜி கணேசன் மூன்று வேடங்களில் நடித்திருந்த "தெய்வ மகன்" அனுப்பப்பட்டது. அதிகமாக ஆஸ்காருக்கு அனுப்பப்பட்ட தமிழ் படங்கள் கமல்ஹாசன் நடித்த திரைப்படங்களாக இருந்தன.

நாயகன், தேவர்மகன், குருதிப்புனல், இந்தியன், ஹேராம் போன்ற திரைப்படங்கள் இந்தியாவின் சார்பில் ஆஸ்கார் விருதுக்கு அனுப்பட்டிருந்தன. இதனால் கமல்ஹாசனை "ஆஸ்கார் நாயகன்" என்றும் சிலர் அழைத்தார்கள்.

நாயகன் திரைப்படம் ஆஸ்கார் விருதுக்கு அனுப்பப்பட்டிருந்த பொழுது, அந்தத் திரைப்படத்தைப் பார்த்து ஆஸ்கார் விருதுக் குழவினர் தமக்குள் சிரித்துக் கொண்டதாக கூறப்படுகிறது. காரணம் நாயகன் திரைப்படம் 1973ம் ஆண்டில் 3 ஒஸ்கார் விருதுகைள வென்றிருந்த உலகப் புகழ்பெற்ற "காட்பாதர்" திரைப்படத்தின் தழுவலாக இருந்ததுதான்.

இவ்வாறு வெளிநாட்டுப் படங்களை தழுவி எடுக்கப்படுகின்ற திரைப்படங்களை வெளிநாடுக-ளில் நடைபெறும் விருதுப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கின்ற அவலமும் நடந்திருக்கின்றது.

இன்றைக்கு உலகம் மிகவும் சுருங்கி விட்டது. பல தரப்பட்ட மக்கள் வெளிநாட்டுப் படங்களை பார்க்கின்றார்கள். இன்றைக்கு யாராவது வெளிநாட்டுப் படங்களில் இருந்து கதையை-யோ, காட்சியையோ திருடினால் உடனடியாகக் கண்டுபிடித்து விடுகின்றார்கள்.

தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடிய இயக்குனார்களாக கருதப்படுபவர்கள் கூட இன்றைக்கு வெளிநாட்டுப் படங்களை "சுடுவது" வேதனையானது. பருத்திவீரன் என்கின்ற அற்புதமான படத்தை எடுத்த அமீர் "யோகி" என்கின்ற ஒரு படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியதோடு அதில் கதாநாயகனா-கவும் நடித்திருந்தார். படம் வந்த பிற்பாடு அது "ரோற்சி" என்னும் தென்னாபிரிக்கப் படத்தின் அப்பட்டமான தழுவல் என்று தெரிந்த பொழுது பலர் யோகி மீது வைத்திருந்த உயர்ந்த எண்ணத்தைக் குறைத்துக் கொண்டார்கள்.

இப்படித்தான் மிஸ்கினும் "சித்திரம் பேசுதடி", "அஞ்சாதே" என்று நல்ல திரைப்படங்களைத் தந்து எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தார். அப்படியே இதுதான் என்னுடைய சிறந்த படைப்பு என்று தம்பட்டம் அடித்துக் கொண்டே "நந்தலாலா" என்னும் படைத்தையும் தந்தார். கடைசியில் "நந்தலாலா" யப்பானிய படமான "கிகுஜீரொ" படத்தின் அப்பட்டமான தழுவல் என்பதும் வெளிப்பட்டது.

இதிலே மற்றைய இயக்குனர்களைப் போன்று இவர்களும் இந்தக் கதையை குறிப்பிட்ட படங்களில் இருந்துதான் கையாண்டோம் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை.

தமது படங்களை மக்கள் திருட்டு விசிடியில் பார்ப்பதாக புலம்புகின்ற இவர்கள் வேறொருவரின் உழைப்பை, படைப்பை மிகச் சுலபமாகத் திருடுகிறார்கள் என்பது வருத்தத்திற்கு உரியது. தமிழ் நாட்டில் மக்களினதும் மண்ணினதும் கதைகள் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றில் கவனம் செலுத்தினாலே மிகச் சிறந்த படைப்புக்களை தமிழ் இயக்குனர்களால் வழங்க முடியும்.


மளிகை பொருட்கள்,
கடல் உணவுவகைள்
மற்றும் இறைச்சிவகைகளுக்கும்
நாடுங்கள்

HMH
Asianshop & Trinkhalle

குறைந்த விலையில் தரமான
பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்

Heinrich Gustav Str. 82
Bochum Werne
Germany
Tel.: 0234 52 84 783



SAI TRADER

சுவிஸ் நாட்டில் மொத்த
விற்பனையாளரும்,
ஏக விநியோகஸ்தரும்.

SAI TRADER GmbH
FRISCH - EXOTISCH - AROMATISCH

Raaterstrasse 24
CH 8175 Windlach
Switzerland
Tel.+41 44 885 86 50
Fax.+41 44 885 86 51
Cell.+41 79 218 70 75
www.saitrader.com




உங்கள் ஸ்தாபனத்திற்கு மரக்கறி,
மீன்வகைகளை மொத்தமாக
இறக்குமதி செய்து தர நாட
வேண்டிய ஒரே இடம்

SAI TRADER GmbH




# சிங்கள புரட்சிக் கட்சிக்குள் வெடிப்பு பின்னணியிலுள்ள தமிழர் பிரேமகுமார

பவித்திரன்

இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரையில் மிகவும் கட்டுக்கோப்பான கட்சி எனப் புகழப்படும் ஜே.வி.பி.க்குள் உருவாகியிருக்கும் புதிய பிளவு கொழும்பு அரசியலில் கடந்த இரண்டு வாரகா-லமாக பரபரப்பான செய்திகளாக வெளிவந்துகொண்டுள்ளன. கட்சி இரண்டாக உடைந்துவிடக்கூடிய நிலைமை உருவாகியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.


ஜே.வி.பி.யின் நீண்ட கால உறுப்பினரும், கட்சித் தலைமையில் செல்வாக்கைச் செலுத்தக்கூடியவராகவுமுள்ள பிரேமகுமார குணரட்ணம் கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளையடுத்தே கட்சியில் புதிய நெருக்கடி உருவாகியிருக்கின்றது. கட்சித் தலைமையகத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை பிரேமகுமார குழுவினர் மேற்கொண்டதையடுத்து வன்முறைச் சம்பவங்களும் உருவாகியிருப்பதால் பிரச்சினையில் இப்போது காவற்துறை தலையிட்டிருக்கின்றது.

இந்த நிலையில் சோமன்ச தொடர்ந்தும் தலைமைப் பதவியைத் தக்கவைத்துக்கொள்வாரா அல்லது பிரேமகுமார தலைமைப் பதவியைக் கைப்பற்றுவாரா என்ற கேள்வி ஒரு பக்கம் எழுப்பப்படுகின்றது. மறுபுறத்தில் இந்தப் பிரச்சினை காரணமாக ஜே.வி.பி.யில் மீண்டும் ஒரு பிளவு உருவாகக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றது.

ஜே.வி.பி. தன்னை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்துகொண்டு தேசிய அரசியலில் ஈடுபட்டுவருகின்ற போதிலும், அடிப்படையில் அது இராணுவக் கட்டமைப்புக்களைக் கொண்ட ஒரு புரட்சிக் குழுவாகவே தோற்றம் பெற்றது. இலங்கையில் பெரும் இரத்தக்களரிகளை ஏற்படுத்திய இரண்டு கிளர்சிகளுக்கு ஜே.வி.பி. காரணமாக இருந்தாலும், இந்த இரண்டுமே தோல்வியில்தான் முடிவடைந்தன.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சியும், 1998-99 காலப்பகுதியில் இரண்டாவது கிளர்ச்சியும் இடம்பெற்றன. இந்த இரண்டு கிளர்சிகளும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்ததன் மூலமாக இலங்கை அரசுகளால் கொடூரமான முறையில் அடக்கப்பட்டது.

ஜே.வி.பி.யின் புரட்சிகள் தோல்வியடைந்த நிலையில் 1994 க்குப் பின்னர் தேசிய அரசியல் நீரோட்டத்தில் ஜே.வி.பி. இணைந்துகொண்டது. இருந்த போதிலும், ஒரு தலைமறைவு இராணுவம் என்ற வகையிலான அதன் செயற்பாடுகளும் தொடர்ந்துகொண்டுதான் உள்ளன. ஜே.வி.பி.க்குள் தற்போது உருவாகியிருக்கும் நெருக்கடிகள் தொடர்பாக வெளியாகியிருக்கும் செய்திகளும் இதனை உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.




இந்த நிலையில்தான் ஜே.வி.பி.க்குள் இடம்பெறும் பிரச்சினைகளை - குறிப்பாக கிளர்ச்சிக் குழுவின் செயற்பாடுகளையிட்டு நுணுக்கமாக அவதானிக்குமாறு அரசின் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

1988-89 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் புரட்சி தோல்வியில் முடிவடைந்த போது ஜே.வி.பி. பாரிய இழப்புக்களைச் சந்தித்தது. ஜே.வி.பி.யின் தலைவர் றோகண விஜயவீர உட்பட பல முக்கிய தலைவர்களும், ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. உறுப்பினர்களும் கொடூரமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ணவின் நேரடி வழிநடத்தலிலேயே அப்போது ஜே.வி.பி. அழித்தொழிக்கப்பட்டது.

இதற்குப் பின்னர் 1990 களின் ஆரம்பத்தில் ஜே.வி.பி.யை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் தலைமறைவாக இருந்த நிலையிலேயே ஈடுபட்டிருந்த மூவரில் ஒருவராக பிரேம-குமார இருந்துள்ள போதிலும் அவர் தன்னுடைய பெயரை ஒருபோதும் வெளிப்படுத்த விரும்பியவரல்ல. பிரேமதாச மற்றும் ரஞ்சன் விஜயரட்ண ஆகியோர் விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பின்னர் 1994 ஆம் ஆண்டு தேர்தலின் மூலம் மீண்டும் அரசியலில் ஜே.வி.பி. பிரவேசித்த போது, பிரேமகுமாரவின் செயற்பாடுகள் மர்மமானவையாகவே இருந்துள்ளன.





ஜே.வி.பி. என்னதான் அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்டுவிட்டது எனக் கூறிக்கொன்றாலும், மறுபக்கத்தில் அதன் தலைமறைவு பாணியிலான செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக கட்சியின் தலைமை பற்றிய தகவல்கள், அதன் நடமாட்டம் பற்றி செய்திகள் என்பன மர்மமானதாகவே வைக்கப்பட்டிருந்தது. கட்சியின் சாதாரண உறுப்பினர்கள் மட்டுமன்றி, இரண்டாம் நிலைத் தலைவர்களால் கூட இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைதான் இருந்துள்ளது.

சோமவன்ச அமரசேகர கட்சியின் தலைவராகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, அதன் உண்மையான தலைமைத்துவம் தலைமறைவானதாகவே இருந்துள்ளது. அந்தவகையில்தான் பிரேமகுமார குணரட்ணத்தின் பெயரும் பெரும் மர்மமானதாகவே இருந்துள்ளது. அவரது சமீபத்திய புகைப்படம் ஒன்றைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில்தான் ஊடகங்களும் உள்ளன. பிரேமகுமார தொடர்ந்தும் தலைமறைவான ஒருவராக இருப்பதையிட்டு மேலும் சில தகவல்கள் உள்ளன. ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்சி முறியடிக்கப்பட்ட போது பிடிபடாமல் தப்பித்துக்கொண்ட அவர் சில காலம் தலைமறைவாக இருந்து செயற்பட்ட பின்னர் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. அதன் பின்னர் அவர் நாடு திரும்பிய போதிலும், குடிவரவுத் திணைக்களத்தில் அது தொடர்பான பதிவுகள் எதுவும் இல்லை. இதனைவிட ஜே.வி.பி.கிளர்சிக் காலத்தில் பல்லேகலை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் இவர் சம்பந்தப்பட்டதாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே ஜே.வி.பி.யின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் பலருக்குக் கூடத் தெரியாமல் அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

ஒரு கடும் போக்கான சிங்களத் தேசியவாதக் கட்சி என அடையாளப்படுத்தப்படும் ஜே.வி.பி.யில் இன்று உருவாகியிருக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாகவுள்ள பிரேமகுமார உண்மையில் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. கேகாலையைச் சேர்ந்த இவரது பெற்றோர்கள் இருவருமே தமிழர்கள். 46 வயதான இவர் சிங்கள மொழியிலேயே கல்வியைத் தொடர்ந்தமையால் தமிழில் எழுத வாசிக்கத் தெரியாதவர். ஆனால், தமிழில் சரளமாக உரையாடக்கூடியவர் என இவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றார்கள்.

இவரது மூத்த சகோதரரான ரஞ்சிதம் குணரட்ணம் ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்சி இடம்பெற்ற காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தவர். ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்ட இவர், அரச படைகளால் கடத்திச் செல்லப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டார். பிரேமகுமாரவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்துறை மாணவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவரது தீவிர அரசியல் ஈடுபாடு காரணமாக அவரால் கல்வியைத் தொடர்வதற்கு முடியவில்லை. அவுஸ்திரேலியாவில் இருந்த காலத்தில் அவர் அங்கு
திருமணம் செய்துகொண்டார்.

ஜே.வி.பி.யின் இரண்டாவது ஆயுதப் புரட்சி இடம்பெற்ற காலத்தில் அதன் இராணுவப் பிரிவான தேசப்பிரேமி ஜனதா வியாபாரியவின் திருமலை மாவட்டத் தளபதியாகப் பணியாற்றிய பிரேமகுமார, வெடிகுண்டுகளைத் தயாரிப்பதிலும், கெரில்லா பாணியிலான தாக்குதல்களை நடத்துவதிலும் வல்லவர். பல்லேகலை இராணுவ முகாம் மீது ஜே.வி.பி. நடத்திய வெற்றிகரமான தாக்குதலுக்குத் திட்டத்தை வகுத்துக்கொடுத்ததுடன், அதற்குத் தலைமை தாங்கியவரும் இவர்தான். இந்தத் தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்கள் ஜே.வி.பி.யினரால் கைப்பற்றப்பட்டதுடன், பிரேமதாச அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலையும் கொடுத்தது.

இராணுவச் சுற்றிவளைப்பு ஒன்றின் போது இவர் கைது செய்யப்பட்ட போதிலும், பின்னர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றதுடன், நாட்டைவிட்டும் வெளியேறினார். விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பு இருந்தமையால் கடல்வழியாகவே இவர் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் 1990 களின் ஆரம்பத்தில் நாடு திரும்பி ஜே.வி.பி.யை மீளக்கட்டியெழுப்பும் பணியில் இவர் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது. தலைமறைவு செயற்பாடுகளிலிருந்து தேசிய அரசியல் நீரோட்டத்தில் ஜே.வி.பி.யை இணைத்துக்கொள்வதற்கான உபாயங்களை வகுப்பதில் பிரேமகுமாரவின் பங்களிப்பு பிரதானமாக இருந்துள்ளது.

ஜே.வி.பி. அரசியல் செயற்பாடுகளில் இறங்கிய பின்னரே அதன் தலைவராக சோமவன்ச அமரசிங்க பதவியேற்றுக்கொண்டார். 1989 இல் ஜே.வி.பி. அழிக்கப்பட்டபோது உயிர் தப்பிய ஒரேயொரு மத்திய குழு உறுப்பினராக சோமவன்ச இருந்தமையால்தான் கட்சிச் செயற்குழு அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டது. இதற்கான நடவடிக்கைகளின் பின்னணியிலும் பிரேமகுமார இருந்துள்ளார்.

ஜே.வி.பி. அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்டமையால் அதன் அரசியல் பிரிவுத் தலைவர்களும், எம்.பி.க்களும் பொதுமக்கள் முன்பாக பிரபலமாகிய போதிலும், கட்சியின் மத்திய குழு கடும்போக்காளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்துவருகின்றது. ஜே.வி.பி.யின் அரசியல் செயற்பாடுகள் பலவற்றில் இவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியும் வந்திருக்கின்றார்கள்.

குறிப்பாக ஜே.வி.பி.யின் கருத்தியல் போக்கில் தமது அதிருப்தியை மத்திய குழு வெளிப்படுத்தியிருந்தது. தேர்தல் கூட்டணிகளை அமைத்தமை தொடர்பில் மற்றும் இன நெருக்கடி தொடர்பிலான ஜே.வி.பி.யின் அணுகுமுறை என்பனவற்றையிட்டு பிரேமகுமார தரப்பினர் பெரும் அதிருப்தியடைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. கடந்த சனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற முடிவை ஜே.வி.பி. எடுத்தமையும் இவர்களுக்குப் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. இது ஜே.வி.பி.யின் கொள்கைக்கு முரணானது என்பது இவர்களுடைய வாதம்.

ஜே.வி.பி. முக்கியஸ்த்தர் ஒருவரது தகவலின்படி பிரேமகுமார குழுவினருக்கே ஜே.வி.பி.யின் பொதுச் சபையில் ஆதரவு அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. இருந்த போதிலும் இரு தரப்பினரும் தமது ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்காக கட்சி உறுப்பினர்கள் மத்தியில் தீவிரமான பிரச்சாரம் ஒன்றை முன்னெடுத்துவருகின்றார்கள். இதில் யார் வெற்றி பெற்றாலும் மக்கள் மத்தியிலான ஆதரவுத் தளத்தை ஜே.வி.பி. இழந்துவிட்டது என்பதே உண்மையாகும்!




# Lycamobile

# சுவீடன்

**தேசிய மற்றும் சர்வதேச நாடுகளுக்கான அழைப்புகள் 1öre யில் இருந்து**



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 0.01Kr /min | 1.89Kr /min |
| இலங்கை | 1.39Kr /min | 1.49Kr /min |
| இந்தியா | 0.39Kr/min | 0.39Kr/min |

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| கனடா | 0.39Kr /min | 0.39Kr/min |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 0.39Kr/min | 1.49Kr /min |
| சுவிட்ஸர்லாந்து | 0.39Kr/min | 2.49Kr /min |

**தங்களது தற்போதைய கைத்தொலைபேசி எண்ணை Lycamobile க்கு மாற்றி 100Kr பெறுமதியான நிமிடங்களை இலவசமாக பெற்றிடுங்கள்!**

லில் இருந்து

Lycamobile *0-. Lycamobile

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.se 0852 054977**

இணைப்புக்கட்டணமாக 99öre எல்லா சர்வதேச அழைப்புக்களுக்கும் அறவிடப்படும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.se

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

7-Eleven, Pressbyrån, Shell, Vi Butikerna, Hemköp (För oss som älskar mat), payzone, Coop Konsum, Coop Forum, Coop Nära, Coop Extra, Willy:s Hemma, Willy:s, ATG

# தமிழ்நாட்டில் நிலவும் ஈழத் தமிழர் ஆதரவு அலை காத்திரமான ஒரு தீர்வை நோக்கி இட்டுச் செல்லுமா?



சண் தவராஜா

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தற்போது தமிழ் நாட்டில் உருவாகியுள்ள உணர்வெழுச்சியை அவதானித்து மகிழ்ச்சி கொள்ளாத தமிழர்களே இல்லை. 1983 இல் தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட முறையில் அரசாங்க ஆதரவுடன் நடாத்தப்பட்ட இனப் படு-கொலையின் விளைவாக தமிழ்நாட்டில் உருவாகியிருந்த உணர்வுகளுக்கு ஒப்பாக தற்போது அங்கு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலை தென்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் மிகவும் தேவைப்படுகின்ற இத்தகைய ஆதரவு நிலைப்பாடு உருவாவதை-த் தடுத்துவிட பார்ப்பனியமும், அதன் ஏவலாளியான காங்கிரஸ் அரசாங்கமும், பார்ப்பனியத்தை எதிர்ப்பதாக வெளிப்படையாகத் தெரிவித்தவாறு மறைமுகமாக அதற்குச் சேவகம் புரியும் கருணாநி-தி குழுமமும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த முயற்சிகளைத் தமது தேர்தல் வாக்களிப்பு மூலம் முடிவிற்குக் கொண்டுவந்த தமிழக வாக்காளப் பெருமக்கள் பாராட்டுக்குரியவர்கள்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் வாடுதல் கண்டு நேசக்கரம் நீட்ட விழைந்த மக்களுக்கு அணைபோட்ட கருணாநிதி ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்து ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகின்றது. கடந்த காலங்களில் இரகசியமாக மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட பல காரியங்களை தற்போது பரகசியமாகவே மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

எத்தனை இடுக்கண்கள் வந்த போதிலும் ஈழ ஆதரவு நிலைப்பாட்டைக் கைவிடாது அதனை ஒரு வேள்வியாகவே நடாத்திவந்த உடன்பிறப்புக்களுக்கு இதில் மிகுந்த பங்கிருக்கின்றது. ஈழ ஆதரவுச் சுடர் ஒரேயடியாக அணைந்து விடாமல் மிகுந்த சிரமத்தின் மத்தியில் காத்தவர்கள் அவர்களே.

'ஒரு துன்பியல் சம்பவம்' என விடுதலைப் புலிகளால் வர்ணிக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் படுகொ-லைச் சம்பவத்திற்குப் பின்னான சூழ்நிலைகள், அதனை மையமாக வைத்துச் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமைகள் யாவும் இன்று அடியோடு மறைந்துபோய் விட்டன. 2011 மே மாதத்துக்குப் பின்னர் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும் ஒருவரால் கருணாநிதி ஆட்சிக் காலகட்டத்திற்கும் தற்போதைய ஜெயலலிதா ஆட்சிக் காலகட்டத்திற்கும் இடையே நிலவும் துல்லியமான வேறுபாட்டினை இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.




'தலைவன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி' என்பதற்கு ஒப்ப கருணாநிதியின் ஆட்சியில் நிலவிய சூழலுக்கு முற்றிலும் எதிர்மாறானதாக இன்றைய சூழல் உள்ளது. ஆட்சியில் அமர்ந்துள்ள அ.தி.மு.க. தலைமையிலான அரசாங்கமும், அதன் தோழமைக் கட்சிகளும் மட்டுமன்றி ஊடகங்களும் கூட இன்று ஈழத் தமிழர் சார்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளமையையும் உணர முடிகின்றது. ஊடகங்களின் தேவைக்குத் தீனியிடுவது போன்று சிங்கள அரசத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படும் கருத்துக்களும் அமைந்துள்ளமை நிலைமையை மேலும் உக்கிரமாக்கியுள்ளது.

ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் 'Headlines Today' தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து வழங்கிய வன்னி நிலைமை தொடர்பான செய்திப் படங்கள் இலங்கையின் பாதுகாப்புத் துறைச் செயலர் கோத்தாபய ராஜபக்சவுடனான செவ்வி, அவர் செவ்வியில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான எதிர்வினைகளின் பின்னணியில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் வழங்கிய பேட்டி ஆகியவை ஈழத் தமிழர் விவகாரத்தை மீண்டுமொருமுறை தலைப்புச் செய்திகளாக ஆக்கின.

மறுபுறத்தே, இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தோரை குற்றவாளிகளாக அறிவிக்கக் கோரி தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் தொடர்பாக கோத்தாபய ராஜபக்ச தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பலைகள் என ஆகஸ்ட் மாதம் முழுவதும் தமிழ்நாடு கொந்தளிப்பாகவே இருந்தது.

இத்தகைய சூழ்நிலைகள் மகிழ்ச்சி தருவதாக உள்ள போதிலும் 1983 இன் பின்னான காலகட்டத்தைப் போன்று தற்போதைய உணர்வெழுச்சிகளும் ஒரு குறிப்பிட்ட இலக்கை எட்டுவதற்கு முன்னதாக நீர்த்துப் போகுமோ என்ற சந்தேகம் எழுவதைத் தடுத்துவிட முடியவில்லை.

தமிழ் உணர்வாளர்கள் எனக் கருதப்படுவோர் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மை இதற்கான முதற் காரணமாகக் கொள்ளப்படலாம். பொது இலக்கை நோக்கிய பயணத்தில் ஒருங்கிணைந்த செயற்பாடு இன்றியமையாதது. தாய்த் தமிழகத்தில் செயற்படுவோர் மத்தியில் ஒற்றுமையின்மை நிலவுவது மாத்திரமன்றி, புலம்பெயர் சமூகத்தில் இருந்து அவர்களோடு தொடர்புகளைப் பேணுவோர் கூட ஒற்றுமை விடயத்தில் அக்கறையின்றிச் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி அவர்கள் பிரித்தாளும் தந்திரத்தையும் சில சமயங்களில் பின்பற்றி வருகின்றனர்.

இந்த ஒற்றுமையின்மை பொது இலக்கை நோக்கிய பயணத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் அதேநேரம், ஆதரவாளர்களின் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் குறைப்பதாகவும் அமைகின்றது. உணர்வின் விளைவால் உருவாகும் ஆதரவு நீடித்து நிலைக்கக் கூடியது. ஆனால், உணர்ச்சிகளின் விளைவால் உருவாகின்ற ஆதரவு தொடர்ச்சியான செயற்பாடுகள் இல்லாத போதில் மறைந்துபோகக் கூடிய அபாயம் உள்ளது.

அடுத்ததாக ஊடக ஆதரவைக் குறிப்பிடலாம். ஊடகங்களைப் பொறுத்தவரை அவை ஒவ்வொன்றும் ஊடக உரிமையாளரின் அரசியல் நிலைப்பாட்டையே பிரதிபலிப்பது வழக்கம். அவை தத்தம் தேவைகளுக்காக தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வல்லன. ஆனால், உணர்வு கொண்ட ஊடகவியலாளர்கள் ஊடகங்களையும் தாண்டி தமது கருத்துக்களை மேலோங்கச் செய்து வருகின்றனர். ஆனால், இப்பணியில் ஈடுபட்டு வருவோரிடையே கூட ஒரு ஒருங்கிணைந்த வேலைத்திட்டமோ அன்றி அடிப்படை ஒற்றுமையோ இருப்பதாகத் தெரியவில்லை. இது கவலைக்குரியது.

ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலையைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு துளி ஆதரவும் பெறுமதி மிக்கது. ஆதரவை மேலும் வளர்த்துக் கொள்வதிலும் பார்க்க ஏற்கனவே உள்ள ஆதரவைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டாலேயே அது சாதனைதான்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாடு எப்போதும் கேள்விக் குறியுடன் பார்க்கப்படும் ஒன்றே. 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஜெயலலிதா நண்பனாகக் கருதப்பட்டு வருகின்றார். கருத்தியல் அடிப்படையில் அவரது நிலைப்பாடு மாற்றம் பெற்றுள்ளதா என்பதைக் கணித்துவிட முடியாது உள்ளது. ஏனெனில், முன்னர் ஜெயலலிதாவைச் சூழ இருந்த அதே நபர்களே தற்போதும் அவரின் நண்பர்களாகவும் ஆலோசகர்களாகவும் இருக்கின்றார்கள். ஏற்கனவே அவரின் அணியில் இருந்த ஈழ ஆதரவாளரான வைகோ கழற்றி விடப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரது அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் திடமான தெளிவு இல்லை.

இத்தகைய பின்னணியிலேயே ஈழ ஆதரவு அலை காத்திரமான ஒரு தீர்வைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தரும் வரை நீடிக்குமா என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ் நாட்டிலே எமக்கு ஆதரவான நிலைப்பாடு உள்ளது எனக் கூறிப் பெருமை கொள்வதால் மாத்திரம் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. மாறாக அதனைத் தக்கவைப்பதிலும் அடுத்த கட்டத்தை நோக்கி அதனை நகர்த்திச் செல்வதிலுமேயே வெற்றி தங்கியுள்ளது. பூனைக்கு மணி கட்டுவது யார்?






பாரிஸ் மாநகரில்
நிஷான்
சுப்பர் மார்சே
தினம் தினம் புத்தம் புதிய
பொலிவுடன் உடன்
மரக்கறி வகைகள்.
இல்லை என்று சொல்லா
வண்ணம் அனைத்து
மளிகைப் பொருட்களுக்கள்.
வாரம் தோறும் உடன்
உப்புகடல் மீன்வகைகள்.
இவை இனைத்துக்கும்
நாடுங்கள்
நிஷான் சுப்பர் மார்சே
பண்டிகை
காலத்தில் விசேட
மளிகைப் பொருட்கள்
நாள் தோறும்
அதிரடி மலிவு
விற்பனை
அனைத்திற்கும்
நாடுங்கள்
நிஷான் சுப்பர் மார்சே
எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
உங்களை இன்முகத்துடன்
வரவேற்று உங்கள் தேவையை
உடனடியாக நிறைவேற்ற
காத்திருக்கின்றார்கள்
வாடிக்கையாளரின் சிகரமான
நிஷான் சுப்பர் மார்சே!
ADRES NISAN CASH AND CARRY
64 RUE LOUIS BLANC
75010 PARIS
TEL .0033(0)144720603
FAX .0033(0)142093084

# கூடன் குளம் அணுமின் நிலையம் தமிழீழத்துக்கும் ஆபத்து!



அணுசக்தி எத்தனை ஆபத்தானது என உலகம் தனது 70 வருட கால அனுபவத்தில் நன்கு தெரிந்து கொண்டு உள்ளது. ஆனால் இந்திய அரசு இன்னமும் அதுபற்றிய ஆபத்தை உணர்ந்து திருந்துவதாகத் தெரியவில்லை. 1000 கோடி ரூபா செலவு செய்தாயிற்று மதனை எப்படிக் கை விடுவது? என ஆளும் தரப்பு நியாயம் கேட்கிறது. மக்களோ ஒரு தனி நபரோ 176,000 கோடிக்கு ஊழல் செய்யும் நாட்டில் மக்கள் நலனுக்காக 1000 கோடியைத் தியாகம் செய்ய முடியாதா? என நெத்தி அடியாகக் கேட்கின்றனர். இன்று இந்த அனல் மின் நிலையத்தால்

ஏற்படும் கேடுகளைப் பல வருடங்களாக மக்கள் மத்தியில் பிரச்சாரப் படுத்தி வரும் திரு.எஸ்.வி.உதயகுமார் அணுசக்தி விடயமாக நன்கு விடயம் அறிந்தவர் மக்கள் நலனுக்காக அரும்பாடுபட்டுப் பல முறை தோல்வி கண்டு இம்முறை பெரும் மக்கள் போராட்டமாக உருவாக்கி உள்ளார்.

தமிழகத்தில் கூடன் குளம் இந்தியாவின் தென் கடலில் ஈழத்துக்கும் அருகில் உள்ள இடம். இங்கே ரஷியாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டு இப்போது இயங்கு நிலைக்கு வந்துள்ள நிலையில் ஆயிரக் கணக்கான மக்களின் பலமான எதிர்ப்பு உண்ணா விரதப் போராட்டமாக வெடித்துள்ளது.

மாநில அரசின் உதவியை மத்திய அரசு கோரியது. நிலைமையின் தன்மையை முழுவதுமாக உணர்ந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா மக்களின் நம்பிக்கையைப் பெறாத வரைக்கும் அணுமின் நிலையம் செயற் படக்கூடாது எனத் தெரிவித்து விட்டார். அந்த நம்பிக்கையை மத்திய அரசே மக்களிடம் நேரடியாகப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தரப்பில் பிரதம பிரதிநிதியாக திரு.வி.நாராயணசாமி மக்கள் எதிர்ப்புப் பிரதிநிதிகளிடம் சமரசம் பேசி வருகிறார்.

அணுவின் அழிவுச் சக்தியை நேரடியாக இரண்டாவது உலகப் போரின் முடிவில் 1945ல் யப்பானும் அதன் மக்களும் கண் முன்னால் கண்டு அனுபவித்து வருபவர்கள். அதனால் இன்றும் அங்கு பிறக்கும் குழந்தைகள் பல உடற் குறைபாடு மற்றும் புற்றுநோய்த் தாக்கம் போன்ற பாதிப்புகளைச் சந்திக்கின்றனர். அரசியல் மற்றும் அமெரிக்க அரசின் நட்புறவும் செல்வாக்கும் காரணமாக யப்பானிய அரசு பல ஆண்டுகளாக அதன் மக்களின் இக்குறைகளை அதிகார பூர்வமாக ஏற்க மறுத்ததோடு தனது மின் தேவைகளுக்காக அணுவைப் பயன் படுத்தியது. தனது திறமையான கட்டுமானங்கள் பாதுகாப்பானவை எனப் பிரச்சாரம் செய்து அணு உலைகள் அங்கு பல இடங்களிலும் நிறுவிப் பெருமைப் பட்டது.

ஆனால் இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் பு.்.க்குசீமா தீவுக்கு அருகில் கடலில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் காரணமாக அங்கு இருந்த அணுஉலைகளின் குளிர் ஊட்டிகளில் ஏற்பட்ட மின்தடைகளால் அணு உலைகள் வெப்பம் தாங்காது உருகி வெடித்துப் பாரிய அணுக்கதிர் வெளியேற்றத்தை ஏற்படுத்திக் கடலையும் சுற்றுச் சூழலையும் அணுக்கதிர் வீச்சுக்கு உள்ளாக்கியது. அணுக்கதிரின் பாதிப்பு நீரிலும் நிலத்திலும் 10 இலட்சம் வருடங்கள் வரை நீடிக்க வல்லது.

அமெரிக்கா, யேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளில் அணு உலைகளில் பாவித்து முடிந்த கழிவுப் புளுட்டோனியக் குச்சிகளை எப்படி? எங்கே ? பாதுகாப்பாக வைப்பது என்ற கேள்வி மிகப் பெரிதாக எழுந்துள்ளது. உலகில் இயக்கத்தில் உள்ள 436 அணுஉலைகள் வருடந்தோறும் 350,000 கன மீட்டர் (1 கன மீட்டர் என்றால் 1மீ.நீளம் 1 மீ.அகலம் 1மீ.உயரம்) கொண்ட அணுக் கழிவுகளை உருவாக்குகின்றன. இவற்றில் 12,000 தொன் கழிவுகள் அதி உயர் கதிர் வீச்சுக் கொண்டவை. புளுட்டோனியம் அகழ்ந்து எடுத்து செறிவூட்டி அணு உலைக்கு ஏற்ற குச்சிகளாகத் தயாரிக்கும் போதும் 80 சத வீதமான அணுக் கழிவுகள் ஏற்படுகின்றன.

அமெரிக்கா 2009ல் நெவாடா மாநிலத்தில் உள்ள யுக்கா மலை அடிவாரத்தில் பாதுகாப்பாக வைப்பதற்கு 9 பில்லியன் டொலர் செலவு செய்தது. யேர்மன் நாட்டில் பாவித்த அணுக் கழிவு 126 000 பெட்டகங்களை அஸ்ஸ என்ற மலைப் பகுதியில் தினமும் 126,000 லீட்டர் நீரைப் பாய்ச்சி காப்பாற்றி வருகின்றனர். இதற்கு மேலும் உண்டாகும் செலவு 3.7 பில்லியன் யூரோ எனத் தெரிகி-றது.

நிலத்தில் துளை போட்டு 300 முதல் 500 மீட்டர் ஆழத்தில் வலுவாக்கப் பட்ட சீமெந்து தார் சேர்ந்த கலவைக்கு மத்தியில் லோகப் பீப்பாய்களில் அடைத்து பாதுகாக்க வேண்டி உள்ளது. நிலத்துக்கும் கடலுக்கும் அடியில் இவ்வளவு பாதுகாப்புடன் வைத்தாலும் பூகம்பம் நில நடுக்கம் என்பன வரும் போது இவற்றின் நிலை என்னாகும்?

கூடன் குளம் அணுமின் நிலையத்தில் உருவாகும் அணுக்கழிவை எங்கே எப்படி யார் பாதுகாப்பாக வைக்க முன்வருவர்? அமெரிக்க, யேர்மன் நாடுகள் செலவு செய்யும் தொகையை இந்தியா ஏற்றுக் கொள்ள முன்வருமா? அதற்குத் தேவையான தொழில் நுட்ப முறையில் பாதுகாப்புக் கிடங்குகளை ஏற்படுத்தி இந்திய அரசு செய்யும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இத்தனை ஆபத்தான அரக்கன் இந்த அணு உலை என்பது விஞ்ஞானிகளுக்கும் பொது நல மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மட்டுமே பேசுகின்றனர். இப்படிப் பட்டவர்களே உலகெங்கும் பச்சைக் கட்சி என்ற பெயரில் அணுக் கழிவுக்கும் அணு உலைகளுக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். இதனைக் கையாளுவதில் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் உள்ளது எனலாம்.






பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
அனைத்தும் தங்கத்தின்
பெறுமதி!
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14



# உடைந்து சரிவடையும் உலகப் பொருளாதாரம்!

உலகம் இன்று பல வழிகளிலும் சுருங்கி இறுகி எல்லா நாடுகளும் ஒரு குடும்பம் போன்ற ஒரு கட்டமைப்பாக மாறி விட்டுள்ளது. இதற்கு விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகள் தொலைத் தொடர்புச் சாதனங்கள் விரைவான போக்கு வரத்து வசதிகள் உலக மயம் ஆக்கப்பட்ட வணிக முறைகள் என்பன முக்கிய காரணிகளாக உள்ளன. இன்று நாடுகள் ஒன்றோடு ஒன்று இணைவதும் ஒன்றை ஒன்று மறைமுகமாகச் சுரண்டுவதும் அல்லது தனது செல்வாக்கிற்குள் கொண்டு வர முயல்வதாலும் உலக நாடுகளில் அரசியல் பொருளாதார சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு நாட்டில் அரசியல் பொருளாதார மாற்றம் ஏற்பட்டால் அவை உடனடியாகவே வேறு நாட்டையோ நாடுகளையோ பாதித்து விடுகின்றன. இன்று உலகப் பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரமாக உள்ளதால் நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிக நிலை சமாந்தரமாக இருந்தால் பாதிப்பு இருக்காது. ஆனால் எல்லா நாடுகளும் தனக்கு மட்டுமே வாய்ப்பான வணிக நிலையிலே வர்த்தக நடவடிக்கைகளை வைத்திருக்க முயல்கின்றன. ஆனால் அமெரிக்க தேசம் பல தசாப்தங்களாக வாய்ப்பான வர்த்தக நிலையை அனுபவித்த காரணத்தால் அதன் இறக்குமதித் தேவைகள் கட்டுப்பாடு இல்லாது பெருகி வந்துள்ளது. அதே சமயம் அமெரிக்க ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேசப் போட்டியாக யப்பான், இந்தியா, சீனா, தென் கொரியா போன்ற நாடுகளால் சரிவடைந்து அமெரிக்காவின் பரஸ்பர வணிகச் சமநிலை குலைந்து அமெரிக்கா சீனாவுக்கு வர்த்தகத்தால் 13000 மில்லியன் டொலர் கடன் கொடுக்க வேண்டி உள்ளது.

அமெரிக்கா பல நாடுகளில் முன்னெடுத்து வரும் போர் நடவடிக்கைகளால் அதன் செலவீனம் கட்டு மீறி அதன் அன்றாடக் கொடுப்பனவுகளுக்கே திண்டாடும் நிலைக்கு வந்து அதன் டொலரின் பெறுமதியும் குறைந்து விட்டது.இதனால் அதன் பங்குச் சந்தை விலை வீழ்ச்சியடைய அதன் காரணமாக உலகப் பங்கு சந்தையிலும் வீழ்ச்சி கண்டு பல கோடி நட்டம் ஏற்பட்டது. அதன் காரணமாக வேலை நீக்கம் அதிகரித்து மக்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் தினமும் அதிகரித்து நாடுகள் குழப்ப நிலையில் தவிக்கின்றன.

இத்தகைய பொருளாதார முடக்க நிலை கிரேக்கம் போலந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் மோசமான பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தியதால் ஐரோப்பிய ஒன்றியமும் அதன் நாணயமும் பெறுமதி குறைந்து மக்களின் பணத்தின் கொள்வனவுத் திறனை மேலும் குறைத்து வாழ்க்கைச் செலவை உயர்த்தி விட்டுள்ளது. கிரேக்கத்தைப் பொறுத்த வரை அதன் கடன் சுமை காரணமாக மக்களிடம் மேலதிக வரி போடும் நிர்ப்பந்தம் உள்ளது. அதே வேளை மக்களோ வேலையில்லாத் திண்டாட்டம் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு என்பவற்றால் ஏற்கனவே இருந்த கொதி நிலை மாறிப் பெரும் பூகம்பமாக வெடிக்கும் அளவில் உள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பிரித்தானியாவும் பொருளாதாரச் சிக்கலால் பெரிதும் பீதி அடைந்த நிலையில் உள்ளன. 1920களில் ஏற்பட்ட உலகப் பொருளாதாரச் சரிவு போன்ற சரிவை உலக நாடுகள் எதிர்நோக்கிப் பீதியில் உள்ளன.

இலங்கையில் அதிகரித்த பிறப்புக் குறைபாடுகள்!

இலங்கையில் பிறக்கும் குழந்தைகளில் உறுப்புக் குறைபாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் 500 க்கும் அதிகமான பெண் குழந்தைகள் ஆண் உறுப்புக்களோடு பிறக்கின்றன என சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பிறப்புகளால் பிள்ளைகளும் பெற்றோரும் பெரும் மனநலக் குறைபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது எனவும் தெரிவித்தார். அறுவைச் சிகிச்சை மூலம் மேலதிகமாக உள்ள ஆணுறுப்பை அகற்றி அவர்களை முழுமையான பெண்களாக மாற்றிவிட முடியும் என்கிறார்.

அண்மையில் கொழும்பு றிட்ஜ்வே சீமாட்டி நினைவு மருத்துவ மனையில் இரண்டு வெளிநாட்டு மருத்துவர்களுடன் இலங்கை மருத்துவர் ஒருவரும் இணைந்து 8 வயதான பெண் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்து முழுமையான பெண்ணாக மாற்றி உள்ளனர். இந்த அறுவைச் சிகிச்சையைத் தொலைக்காட்சித் திரை-யில் ஏனைய சிறுவர் நல மருத்துவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இது மிகவும் செலவு நிறைந்த அறுவைச் சிகிர்சை எனவும் சிறு வயதில் செய்வது வளர்ந்த பின்னர் செய்வதை விடச் சிக்கல் குறைவு எனவும் மருத்துவர் கூறுகின்றனர். பலர் இதனைக் கவனிக்காது வளர்ந்த பின்னால் தமது பால் இன அடையாளம் பற்றிய மனவியல் சமூக முரண்பாட்டுச் சிக்கலில் தவிக்கின்றனர். எனவே இவை எல்லாவற்றையும் இந்த அறுவை மருத்துவம் தீர்த்துவிடும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த மூன்று மருத்துவரும் உணவுக் குழாய் இல்லாது பிறந்த ஒரு பிள்ளைக்கு அதன் குடலில் ஒரு துண்டை எடுத்து உணவுக் குழாயாகப் பொருத்தி வெற்றி கண்டுள்ளனர். இந்தக் குழந்தை பிறந்தது முதல் இரண்டு வருடங்களாக ஊசி மூலம் அதனது உணவைப் பெற்று உயிரோடு வாழ்ந்துள்ளது.

அதிகளவு பிறப்புக் கோளாறுகளுக்குப் போர்க்கால நெருக்கடிகளும் மன அழுத்தங்களும் காரணமாக இருக்கலாம் எனக் கருத வேண்டி உள்ளது. இலங்கை இன்று இருக்கும் நிலையில் இவை எல்லாவற்றையும் யார் கவனிக்கப் போகிறார்கள்?

# வடக்கிலே கொள்ளையருக்கும் வசந்தம்!

வடக்கில் இருந்து வரும் செய்திகள் தமிழினத்தைப் புல்லரிக்கச் செய்கின்றன. பல போராளிகளின் அயராத உயிர்க் கொடைகளின் பயனாகத் தமிழ் மக்களின் அடக்குமுறைச் சின்னமாக விளங்கிய யாழ் டச்சுக் கோட்டையை அழித்து விடுதலைத் தீயை ஏற்றினர். இன்று அதே கோட்டைக்குள் மகிந்தரின் வசந்த மாளிகை டச்சு அரசின் நிதியிலேயே கட்டப்படுவதானது தமிழினத்தை அடிமைத் தளை மேலும் இறுக்கம் காண்பதைக் காட்டுகிறது.

இன்னொரு அந்நிய ஆட்சியாளரின் அருட்கொடையாக விளங்கிய யாழ் அரச அதிபரின் வாழ்விடம் உள்ள பழைய பூங்கா பல நூறு வருட வயதுள்ள பெரும் மரங்கள் நிறைந்த சோலையாக விளங்கியது. இன்று சிங்கள இராணுவ அதிகாரியினதும் மாகாண ஆளுனரின் ஆணைக்குமிணங்க அது இடித்தும் அழித்தும் புதுவடிவம் பெற்றுப் பல கட்டிடங்களுக்கு இடமளிக்கும் செய்தி சிங்கள ஆதிக்கத்தின் கோட்டையாக யாழ்ப்பாணம் மாறுகிறது என்பதைக் காட்டுகிறது. இந்தப் பெறுமதி மிக்க மரம் ஒவ்வொன்றும் பல இலட்சம் பெறும் நிலையில் வடக்கின் வசந்தம் தெற்கில் தென்றலாக எவருக்கோ பண மழை கொட்டுகிறது.



# அளவெட்டி




நமது ஈழமணித் திருநாட்டின் ஒவ்வொரு ஊர்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பிரித்து அதன் வாசனைகளை முகர்ந்து பார்க்கும்போது ஒரு ஊரைவிட இன்னொரு ஊர் சிறப்பானதாகவே இருக்கின்றது! இந்தச் சிறப்புகளெல்லாம் காலம் காலமாக இருந்து வந்தாலும் ஒரு ஊரில் வசிப்பவர்கள் மற்ற ஊர்களின் சிறப்புக்களை அறிந்திருப்பதில் மிகக் குறைந்தவர்களாகவே இருக்கின்றார்கள். அந்த வகையில் அளவெட்டி என்னும் கிராமத்தின் சிறப்புக்களை நாம் தேடியபோது அது சிறிய கிராமமாக இருந்தாலும் ஒரு நகரத்திற்குரிய அனைத்து அம்சங்களும் அமையப் பெற்றிருந்தது. அந்தக் கிராமத்தில் கலைஞர்களைப் பற்றியதொரு பெரும் புதையலே நமக்குக் கிடைத்தது! கல்விமான்கள், இலக்கியவாதிகள், நாதஸ்வரக் கலைஞர்களோடு பிரபலமான கல்லூரிகளும் புகழ்பெற்ற ஆலயங்களும் நிறைந்த ஒரு அழகிய பூங்காவாகவே திகழ்கின்றது அளவெட்டி.

அளவெட்டி கிராமமானது யாழ்ப்பாணத்திலிருந்து நேர் வடக்கே அமைந்துள்ள பாரிய துறைமுக நகரமாகிய காங்கேசன்துறைக்குச் செல்லுகின்ற சாலையில் ஆறாம் கட்டையடியில் வரும் சுன்னாகம் சந்தியில் இருந்து மேற்கேயுள்ள ஸ்கந்தவரோதயா கல்லூரியைத் தாண்டியதும் அளவெட்டிக்குச் செல்லும் ஒரு பாதையும், ஏழாம் கட்டையடியில் வரும் மல்லாகம் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி சென்றால் இன்னொரு பாதையும், ஒன்பதாம் கட்டையடியில் வரும் தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி மற்றொரு பாதையுமாக அளவெட்டியைச் சென்றடைவதற்குப் பல வழிப்பாதைகள் இருக்கின்றன.

சுமார் ஒன்பது சதுரமைல் பரப்பளவு கொண்ட அளவெட்டியில் உள்ள சிற்றூர்களுக்கு அங்கு வாழ்கின்ற மக்கள் செய்கின்ற தொழில்களின் அடிப்படையைக் கொண்டு கொல்லர் தோட்டம், தச்சம்புரம், வண்ணாவளவு, தட்டாக்கடவை, அம்பட்டாவத்தை என ஊர்ப்பெயர்கள் இருப்பதும் ஆச்சரியமானதொன்றாகும்.!.

ஈழமணித் திருநாட்டைப் பொறுத்தவரையிலும் யாழ்ப்பாணம் ஆலயங்கள் பொலிந்த பகுதியாகவே விளங்குகின்றது. அதில் அளவெட்டியும் சைவ ஆலயங்கள் அதிகம் நிறைந்த ஒரு பகுதியாகும்.

மாருதப்புரவீகவல்லியால் வடபகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களில் மூன்றினைத் தன்னகத்தே கொண்டது அளவெட்டி. அவை மூன்றும் விநாயகர் ஆலயங்கள். அவை தெற்கில் அமைந்துள்ள பெருமாக்கடவை விநாயகர் ஆலயம், மத்தியிலே அளவெட்டியில் புகழ் பெற்ற கும்பழாவளை விநாயகர் ஆலயம், மற்றும் அழகொல்லை விநாயர் ஆலயமாகும்.

மேலும் அளவெட்டியில் உள்ள ஆலயங்களாவன குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம், தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலயம், கேல்வத்தை மாரியம்மன் ஆலயம், தம்மளையிற் சிவாலயம், பலாவடிப் பிள்ளையார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், ஐயனார் ஆலயம், இவை தவிர இராவத்தை வைரவர், கொட்டாஞ்சீமா வைரவர், இலந்தையிட்டி வைரவர், நரசிங்க வைரவர் எனப் பல வைரவர் ஆலயங்களும் இருக்கின்றன.

இதில் முத்துமாரி அம்மன், மற்றும் கேல்வத்தை மாரியம்மன் ஆலயத்திலும் வேறு சில சிறிய ஆலயங்களிலும் ஆடு, கோழிகளை வெட்டிப் பலியிடும் வழக்கம் முன்பு இருந்தது! பின்பு சமய, சமூக, சீர்திருத்தவாதிகளின் பெரு முயற்சியால் இவ்வழக்கம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறுத்தப்பட்டுவிட்டது.

அளவெட்டியில் இரண்டு கிறிஸ்தவ ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் புனித சூசையப்பர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். மற்றது மாசியப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயமாகும்.

அளவெட்டியை யாழ்ப்பாணம் முழுவதற்குமாகத் தெரியவைத்ததில் அருணோதயாக் கல்லூரிக்குப் பெரும் பங்கு உண்டு. கல்வித் தரத்தில் மட்டுமல்ல விளையாட்டுக்களிலும், குறிப்பாக ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் காற்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழ்ந்த கல்லூரிகளில் அருணோ-தயாக் கல்லூரியும் ஒன்றாகும். இது தவிர இன்னும் ஆறு சிறிய பாடசாலைகளும் இருக்கின்றன.

கல்விக்கூடங்களின் சிறப்புகளைக் கூறும்போது அளவெட்டியில் பிறந்த கல்விமான்களைப்பற்றியும் கூறாதிருந்துவிட முடியாது. இவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் வைத்தியநாத முனிவர். இவர் தமிழில் செய்யுள் ரூபமாக "வியாக்கிரபாத புராணம்" பாடியவர். இவர் பாடிய புராணம் மதுரைப் பேரகராதியில் பதியப்பட்டிருக்கின்றது.

மற்றொருவர் சுவாமி சிவசத்தா என்பவர்! இவர் தனது இருபத்தி ஏழாவது வயதில் "கைலைப் புராணம்" என்னும் நூலை இயற்றி தெற்காசிய நாடுகளில் தமிழைப் பரப்பியவர். இவர்போல மற்றுமொருவர் தவளக்கிரி முத்துமாரி அம்மாள் ஆலயக் குருக்களாக இருந்த வீரசைவப் பெரியார் சிவத்திரு சி.மாணிக்கத்தியாகராச பண்டிதர். சிலேடை வெண்பா உட்படப் பல இலக்கியங்களைப் படைத்த இவர் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் இலக்கியச் சகபாடி ஆவார்.

இன்னுமொருவர். திரு.பொ.கனகசபாபதி என்னும் கல்விமான். இவரை அளவெட்டி ஈன்ற சோக்கிரட்டீஸ் எனச் சொல்வார்கள்! இவர் அளவெட்டி சீனன் கலட்டி தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உப அதிபராக இருந்து. பின்னர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றி தற்பொழுது கனடாவில் உள்ள ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையின் பல்கலாச்சார ஆலோச-கராகக் கடமையாற்றுகின்றார். சமூகவியல், உளவியல், இலக்கியம், கல்வியியல் போன்ற துறைக-ளில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ள இவரது கட்டுரைகளின் தொகுதியொன்று "அதிபரின் கூரிய பார்வையில்" என்னும் பெயரில் 1998ல் நூலாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்த இதழில் தொடரும்....





கடந்த இதழின் தொடர்ச்சி...

# மனம் திறந்து பேசுகின்றார் மனோ தத்துவ நிபுணர் Dr.மார்க்!

கேள்வி:- இன்று அதிகமான குடும்பங்களில் கணவன் மனைவியிடையே குழப்பங்கள் ஏற்பட்டு பின்பு விவாகரத்து வரை செல்கிறது. இதுபற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்: குடும்பம் என்று சொல்லும் போது அதில் பல கட்டுக்கோப்புகள் உண்டு. இவை பரம்பரை பரம்பரையாக வந்தவையானாலும் கணவன் மனைவி தாங்களே ஏற்படுத்தியதானாலும் எப்படியாயினும் அவற்றை பின்பற்றி நடத்தல் வேண்டும். சில குடும்பங்கள் இதைக் கடின-மாகக் கருதி ஏனோ தானோ என்று வாழ்கின்ற நிலை இன்றுண்டு. சில குடம்பங்களில் ஒருவர் கட்டுக்கோப்புகளை ஏற்றுக்கொள்பராகவும், மற்றவர் நேரெதிர்மாறாகவும் வாழும் நிலையுள்ளது. இது குடும்ப சமநிலையைக் கெடுத்து விடும்.

கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் தகுந்த நேரத்தை ஒதுக்கி, குடும்ப விடயங்கள் எதுவா இருந்தாலும் அவற்றைப் பேசுவதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தாங்களே தீர்வு காணக் கூடியதாக இருக்கும்.

இன்று ஐரோப்பா போன்ற நாடுகளில் சமூக வசதிகள் அதிகமாக உள்ளன. தனிமை-யாக வாழும் யுவதிகட்கு அவர்களது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான சகல வசதிகளும் அளிக்கப்பட்டு அவர்களுக்கு சகல பாதுகாப்புகளையும் அரசு வழங்குகிறது. இதன் காரணமாக பலர் விவாகரத்து செய்துகொள்வதற்கு அஞ்சுவதில்லை.

தனது வாழ்க்கைக்காகக் கணவனில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் மனைவிக்கு இல்லை. அது மட்டுமல்லாமல் பிள்ளைகளை வளர்ப்பதற்கு விவாகரத்துச் செய்த பெண்களுக்கு அரசாங்கம் தேவையான உதவிகளையும் செய்வதால் பெணகளுக்கு விவாகரத்து ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

இவ்வாறாக இருந்தாலும், கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் நிலைக்கச் செய்வதுதான் ஒரு நல்ல குடும்பத்திற்கு அழகு.

"பருவம் வந்த அனைவருமே காதலிப்பதில்லை. காதலித்த அனைவருமே மணமுடிப்பதில்லை. மண முடித்த அநைவருமே சேர்ந்து வாழ்வதில்லை. சேர்ந்து வாழ்ந்த அனைவருமே சேர்ந்து போவதில்லை" என்று பாடினான் ஒரு கவிஞன்.

இந்த மாயை உலகில் எமக்குக் கிடைக்கின்ற நல்ல சந்தர்ப்பங்களை நாம் இழந்து விடக்கூடாது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையிலே பல நல்ல சந்தர்ப்பங்கள் நிச்சயமாக கிடைக்கும். அவற்றை அலட்சியப்படுத்தாது கணவன் மனைவி உறவில் அவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்தல் விவாகரத்து அளவிற்கு ஒரு குடும்பத்தைக் கொண்டு செல்லாமல் தடுக்கும்.

சில குடும்பங்களில் மூன்றாவது நபர் தலையிட்டு அதிக அழுத்தத்தைக் கொடுப்பதனாலும் விவாகரத்து ஏற்படக் காரணமாகிறது.

ஒட்டுமொத்த குடும்பத்துக்கு ஆனந்தமான, ஆரோக்கியமான, உயர்தரமான விருந்தளிக்கும் புதுப்பொலிவுடன் கூடிய ஜிரிவி க்கு நீங்கள் தொடர்ந்து அளிக்கப்போகும் ஆதரவு அர்த்தமுள்ள முதலீடாக இருக்கும்.

Germany contact: Business Consulting Network
Adler str.30 Tel: 0049 (0)231 10876360
44137 Dortmund Fax: 0049 (0)231 10876362
E-Mail: germany@gtv-network.com

GTV

ஜிரிவி எனும் இந்தக் கனிமரத்தின் கிளையும் பூவம் விண்ணைத் தொட்டு வளர்ந்துகொண்டே போனாலும், அது தன் வேர்களாகிய உங்களை ஒருபோதும் மறந்துவிடாது என்பதை அன்போடு வலியுறுத்துகின்றோம்.

## 1974ல் கலைஞருக்கு எது நடந்ததோ? அது 2009 லும் நன்றாகவே நடந்தது...

மலையகத் தமிழரின் குடியுரிமை பறிப்பின் மூலம் இலங்கையில் தமிழரின் பலம் பாதி ஆக்கப்பட்டது. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் அவர்களைக் கப்பலில் ஏற்றி முற்றாகக் கை-கழுவி விட்டதன் மூலம் சந்தைச் சரக்குப் போல் அவர்களின் சொந்த பந்தங்களோடு இருந்த உறவை இல்லாமல் செய்த வரலாற்றுக் கொடுமை மன்னிக்க முடியாதது. இதை விட மோசமான மனித குலத்துக்கு விரோதமான குற்றம் இருக்க முடியாது.

இலங்கை அரசின் அடாவடி அரசியலுக்கு அட்சதை போட்டு ஆசீர்வாதம் அளிப்பது போல் கச்சதீவையும் இலங்கைக்குக் கொடுத்த பெரு-மையில் ஆட்சியில் இருந்த தமிழ் நாட்டு அரசு-க்கும் உண்டு என்பதை பிரபல கல்விமான் பேரா-சிரியர் எஸ்.வி.சூரிய நாராயணன் 2010ல் இடம் பெற்ற கருத்தரங்கில் வெளிப் படுத்தி இருத்தார்.



எஸ்.வி.சூரியநாராயணன் ஸ்ரீமா சாஸ்திரி பேச்சுகளின் போது இந்தியத் தரப்பின் பிரதி-நிதிகள் குழுவில் தமிழ் நாட்டு அரசின் சார்பாக பங்கு பற்றிய அமைச்சர் இராமையா இலங்கையில் தொடர்ந்தும் வாழ விரும்பிய மலையக மக்கள் சார்பாக ஒரு சொல் கூடப் பேசவில்லை என்ற உண்மை தெரி-ய வந்துள்ளதாகக் கூறி உள்ளார்.

அன்று இருந்த அரசியல் கள நிலையில் தாம் பதவியில் இருப்பதற்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு தேவை என்ற கட்டாயத்தால் கருணா-நிதி சட்ட உதவியை நாடி இந்த ஒப்பந்தத்தை எதிர்க்காமல் விட்டார் என்றார் பேராசிரியர். 1974 ல் எது நடந்ததோ 2009லும் அதுவே நடந்தது. கருணாநிதிக்கு அதுவும் நன்றாகவே நடந்தது இதுவும் நன்றாகவே நடந்தது.

இதற்கு மூல காரணம் அன்றைய தமி-ழக முதல்வர் கருணாநிதியின் தனிப்பட்ட அதிகாரத்தைத் தக்கவைக்கும் வழமையான ஒத்துழைப்புக் கொள்கையே எனவும் பேராசி-ரியர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி தமிழர் சார்பாக முடிவு-களை விட்டுக் கொடுப்பதில் இத்தகைய காட்டிக் கொடுப்புகள் தமிழனத்தைச் சிங்களத்திடம் காவு கொடுப்பதில் பெரும் பங்கு ஆற்றி வந்துள்ளன.

அன்று மலையகத் தமிழரைக் கப்பலேற்றியதால் இன்று ஈழத் தமிழினம் பூண்டோடு அழிகிறது, அதற்கு இந்திய மத்திய அரசும் துணை போகி-றது. கச்சதீவைக் கை கழுவியதால் தமிழக மீனவர் ஆயிரக் கணக்கில் இலங்கை அரசி-ன் கடற் படைகளால் கொன்று ஒழிக்கப்பட்டு வருகின்றனர். தமிழனின் கடலில் சீனனுக்கும் சிங்களவனுக்கும் உள்ள சுதந்திரம் தமிழனின் உயிர் பறிக்கும் அளவுக்கு உள்ளது.

அன்று இருந்த அரசியல் கள நிலையில் தாம் பதவியில் இருப்பதற்குக் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு தேவை என்ற கட்டாயத்தால் கருணா-நிதி சட்ட உதவியை நாடி இந்த ஒப்பந்தத்தை எதிர்க்காமல் விட்டார் என்கிறார் பேராசிரியர். 1974 ல் எது நடந்ததோ 2009லும் அதுவே நடந்தது. கருணாநிதிக்கு அதுவும் நன்றாகவே நடந்தது இதுவும் நன்றாகவே நடந்தது.

தமிழர்களே! தமிழர்களே! என்னைக் கல்லோடு கட்டிக் கடலிலே போட்டாலும் தெப்பமாகி உங்களைக் காப்பாற்றுவேன் என்ற கலைஞர் தொலைக்காட்சி விளம்பரம் கண்முன்னே வருகி-றதா?






# கிணறு வெட்டப்போய் பூதம் வந்த கதை...

ஆர்.தயாபரன்.

இலங்கையின் வடக்கு நோக்கி சர்வதேசத்தின் பார்வை தற்போது மீண்டும் முனைப்புப் பெற்றிருக்கின்றது. மன்னார் வளைகுடாவின் படுகைகளில் எரிவாயு இருப்பதான அறிவிப்பே, இப்போது கூடிய கவனத்தை ஈர்த்திருக்கின்றது. ஏற்கனவே இலங்கையின் வடக்கு – கிழக்கு கடற்பரப்பினில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த நாடுகள் பலவும் போட்டி போட்டுக்கொண்டேயிருக்கின்றன. இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் முதல் அபிவிருத்தி வரையாகச் சர்வதேச முடிவுகள் இக்கடல் ஆதிக்கத்திலேயே தங்கியிருக்கின்றது.

கடந்து முடிந்துபோன உள்நாட்டு யுத்த காலப்பகுதியிலும் திருகோணமலை முதல் மன்னார் வரையான கடற்பரப்பே வெற்றி தோல்வியை தீர்மானித்திருந்தது. இக்கடற்பரப்பினில் யார் கூடிய ஆதிக்கத்தைச் செலுத்தக்கூடியவர்களாக இருந்தார்களோ அவர்களே யுத்த களத்தினில் பலம் வாய்ந்தவர்களாக இருந்திருந்தனர். யாழ்ப்பாணத்தின் இழப்பு, இறுதி யுத்தத்தில் மேற்குக் கடற்பரப்பு இழப்பு என்பவையே விடுதலைப் புலிகளது ஆயுதப் போராட்டத் தோல்வியின் காரணங்களுள் ஒன்றாகவிருந்தது.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலமே தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமென்பதை இந்தியா உணர்ந்திருந்தது. அவ்வகையிலேயே இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்த நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியா உதவிகளை வழங்கியிருந்தது. போர்க் கப்பல்கள், உலங்கு வானூர்திகள், விமானங்களென அவ்வுதவிகள் விரிந்திருந்தன.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப்புலிகள் மீதான உச்சக்கட்டத் தாக்குதலை, 2008 இன் இறுதிப்பகுதிகளில் இலங்கை அரசு முடுக்கிவிட்டிருந்தது. ஆனாலும் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதென்பது இலகுவானதொன்றாக அப்போது அரசிற்கு இருந்திருக்கவில்லை.

போரைக் கைவிட, கிளிநொச்சியை கைவிடுமாறு கோரும் பேரங்கள் சர்வதேச மட்டங்களிலிருந்து விடுதலைப்புலிகளை நோக்கி வந்த வண்ணமிருந்தன. இலங்கை விமானப்படையின் தாக்குதலை எதிர்கொள்வதற்கான விமான எதிர்ப்புப் பொறிமுறையை புலிகளது விமானப்படை துல்லியமாக அப்போது இயக்கிக்கொண்டிருந்தது. புலிகளது கடும் எதிர்ப்புக்களின் மத்தியில்

கிளிநொச்சி வீழ்வதற்கு முன்னரான ஓரிரு வார காலப்பகுதி கள நிலவரம் தலைகீழாக இருந்தது. விடுதலைப்புலிகளது இராடர்களில் சிக்காத இரண்டு விமானங்கள் நடாத்திய தாக்குதல்களால் புலிகள் திணறிப் போயினர். ஒரேவேளையில் 50-60 போராளிகளைக் காவு கொள்ளும் துல்லியமான குண்டு வீச்சுக்கள் நடந்தன. பெரும்பாலும் பின்னாலிருந்து பிடரியில் அடிப்பதுபோல அது இருந்தது.

அரசோ புதிதாகக் குண்டு வீச்சு விமானங்களைக் கொள்வனவு செய்தோ, தருவித்தோ இருக்கவில்லையெனப் புலனாய்வுத்துறை உறுதியாகக் கூறிக்கொண்டிருந்தது. அவ்வேளையிலே உண்மை வெளிவந்தது. உள்நாட்டு எதிர்ப்புக்களையும் தவிர்த்து ஆழ்கடலில் நிறுத்தப்பட்டிருந்த விமானந்தாங்கிக் கப்பலில் இருந்தே, இந்திய விமானப்படை அக்குண்டு வீச்சுக்களை நடாத்தி ஒத்துழைத்திருந்தது. புலிகள் தோற்கடிக்கப்படவேண்டுமென்பதே இந்தியாவின் அப்போதைய நோக்கமாக இருந்தது.

2006ஆம் ஆண்டின் நடுப்பகுதிகளிலாக இருக்கலாம். புலிகளது புலனாய்வுத் தலைமைக்கு அந்தத் தகவற் குறிப்பு வந்திருந்தது. சுமார் இருநூறுபேர் வரையிலான பாகிஸ்தானியர்கள், இலங்கை வந்திருப்பதாகவும் அவர்கள் மறைவிடங்களில் பதுக்கப்பட்டிருப்பதாகவும் அக்குறிப்புக் கூறியது. இப்பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய இராஜபக்ஷ இருந்ததும், அவர்கள் பாகிஸ்தானிய

உளவுக் கட்டமைப்பான டபிள்ஐ.எஸ். இன் ஏஜெண்டுகள் என்பதும் பின்னர் கண்டறியப்பட்டிருந்தது. இந்தியாவுடனான நட்பைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பிய புலிகள் இத்தகவல்களை பின் கதவு தொடர்பாளர்கள் ஊடாக சொல்லிவைத்துக்கொண்டனர்.

ஆனால், இந்தியா அலட்டிக் கொண்டிருக்கவில்லை.

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குள் ஊடுருவுவது என்பது எப்போதுமே சுலபமான தொன்றல்ல. அதனாலேயே கொழும்பை, அவ்வாறான ஊடுருவல்களுக்கு பாகிஸ்தான் பயன் படுத்திக்கொண்டது. இப்போது, கொழும்பினூடாகவே ஊடுருவல்கள் நடைபெறுவதாக இந்தியா குற்றஞ்சாட்டத்தொடங்கியிருக்கிறது. ஆனால் இப்போது புலிகள் இல்லை. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது ஆசீர்வாதத்துடனேயே எல்லாமும் நடக்கின்றதென்பதை இப்போதுதான் இந்தியாவின் உளவுப்பிரிவு றோ உறுதிப்படுதிக்கொண்டுமுள்ளது.

இப்போது இலங்கையில் இந்திய,பாகிஸ்தானிய, சீன உளவுப் பிரிவுகளுக்குள்ளே நடக்கும் நிழல் யுத்தம், வெளித்தெரியாதது. ஆனால், அது அகோரம் பெற்றிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது ஆசீர்வாதம், பாகிஸ்தானின் டபிள்ஐ.எஸ்.இற்கே இருந்து வருகின்றபோதும் இந்தியாவும் சளைக்காது படை அதிகாரிகள் குழுவொன்றை தமது கைகளுள் போட்டு வைத்துள்ளது. நினைத்ததைச் சாதித்தும் வருகின்றது. மறுபுறம் சீனா, நேரடியாகவோ மறைமுகமாகவோ, ஆனால் வேகமாக ஊடுருவல்களை முன்னெடுத்தே வருகின்றது. ஏற்கனவே பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கென தனது குடிமக்களைக் களம் இறக்கியிருக்கும் சீனா, புதிய உத்திகளையும் கைக்கொண்டே வருகின்றது. இதன் பிரகாரம் சீனாவின் பினாமியாக உள்ள இரண்டு நாடுகள், வடக்கில் காற்றாலை மூலமான மின் உற்பத்திக்கென கடற்பரப்புக்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. மாதகல் முதல் புத்தளம் வரை இத்திட்டத்திற்கெனக் கடற்கரைகளை சுவீகரிக்கும் பணி விரைவில் இடம்பெறவுள்ளது. ஏற்கனவே வீதிஅமைப்பு, புகையிரதப் பாதை அமைப்பு, மின் உற்பத்தி, துறைமுகமென பல தளங்களில் செயற்படும் சீனா, இலங்கைக் கடற்படையுடன் தமது கடற்படையையும் இணைத்துச் செயற்படுத்தி வருவதாக இந்திய ஊடகங்கள் குற்றஞ்சாட்டியே வருகின்றன.

இந்தியா இலங்கை பறிபோவது பற்றி நன்கு அறிந்தே வைத்திருக்கின்றது. தனது புலனாய்வுப் பிரிவான றோவினை முடுக்கி விடுத்துள்ள போதும் வெற்றி முழுமையாகக் கிட்டியிருக்கவில்லை. விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு விட்ட சூழலில் அதற்காகக் கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது.

ரெலோ அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான கனகரத்தினம் விந்தன் மீது கொலை அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்தது. எனினும் அவரோடு முரண்பட்டுக்கொண்டிருந்த ஈ.பி.டி.பி. மாநகர முதல்வரது பின்னணியாக இது இருக்கலாமென சந்தேகிக்கப்பட்டது. விந்தனும் யாழ். மாவட்ட இராணுவ தளபதி முதல் ஜனாதிபதி ஈறாக மனுக்களை அனுப்பி வைத்திருந்தார். இச் சம்பவங்களின் பின்னணியில் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் மீதே சந்தேகம் எழுப்பப்பட்டபோதும் உண்மை அவ்வாறு இருந்திருக்கவில்லை.

இடம்பெயர்ந்த நிலையில் புலம்பெயர் நாடொன்றினில் வாழும் தொழிலதிபரான உள்ளூர் வாசியொருவர் அல்லைப்பிட்டி பகுதியினில் நட்சத்திர விடுதியொன்றை அமைத்து வருகின்றார். சுமார் 300 கோடி செலவில் 100 அறைகளைக் கொண்டதாக இவ்விடுதி அமைந்து வருகின்றது. எனினும் இவ்விடுதி அமைப்பு எனும் பேரில் முதலீடுகளை மேற்கொள்ளவும், தமது நாட்டை வேவு பார்க்கவும் பாகிஸ்தான் உளவுப் பிரிவே செயற்படுவதாக இந்தியா சந்தேகிக்கின்றது. அதனைத் தடுத்து நிறுத்த முற்பட்டுமுள்ளது.

இக்கட்டிட நிர்மாணப் பணிகளில் கனகரத்தினம் விந்தனின் உறவினரான புலம்பெயர் தொழிலதிபரே செயற்பட்டு வருகின்றார். அத்தொழிலதிபரின் முகவராக விந்தனே செயற்பட்டு வரும் நிலையில் விந்தனை முடக்க, ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளார். பின்னர் சமரசங்களுடன் விடயம் முடிவுக்கு வந்திருக்கிறது.

இவ்விடயம், சாதாரணமானதொரு உதாரணமே. இலங்கையில் அதுவும் வட- கிழக்குப் பகுதிகளில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடுகள் எவ்வாறு இருக்கின்றதென்பது புரிந்து கொள்ளமுடியாதவகையில் பரகசியமாகவே முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக வட- கிழக்குக் கடற்பரப்பு மற்றும் துறைமுகங்களிலான அக்கறை எதிர்வருங்காலங்களில் உள்ளூர் மக்களுக்கு எதுவுமே எஞ்சி விடப்போவதில்லையென்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

## நாம் இப்போது கேட்க வேண்டியது பிச்சை அல்ல இருப்பதைக் கடிச்சுக் குதறி எடுக்கும் நாயிடம் இருந்து தப்புவதே!

03.10.2011ல் யேர்மனி வூப்பற்றாலில் நடை பெற்ற உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் ஆண்டு விழாவில் உரையாற்றிய த.தே.கூ. வன்னிப் பா.உ. திரு.சிறிதரன் மிக நேர்மையாக நியாயமாக நிதானமாக புலம் பெயர் தமிழ் மக்களின் அரசியல் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் விளக்கமும் விடையும் மிகத் தெளிவான மொழி நடையில் தந்திருந்தார். அவருடைய தனிப்பட்ட நேர்மையும் ஆளுமையும் ஆற்றலும் இன்று உலகறிந்த பெருமைகள். அவை பற்றி எதுவித சந்தேகமும் எமக்கு இல்லை. ஆயினும் நடக்கும் அரசியல் சதுரங்கத்தில் ஆட்டக்காரரின் நேர்மையும் வியூகங்களும் சரியான முறையில் கணிப்பிடப் படுவது அவசியமாகும்.

உதை பந்தாட்டம் துடுப்புப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் கூட நாம் காசுக்கு விலைபோகும் ஆட்டக்காரர்களை காண்கிறோம். தமிழர் இன்று ஆடும் ஆட்டம் இறுதிச் சுற்றாக இருக்கிறது. பஞ்ச பாண்டவர் அனைத்தையும் இழந்து வனவாசம் முடிந்து மறைந்து வாழும் அஞ்ஞான வாசம் போன்ற நிலையில் ஈழத் தமிழர்களின் நிலை களத்திலும் புலத்திலும் உள்ளது.

பஞ்ச பாண்டவர்சார்பில் துரியோதனனிடம் போன கண்ணன் போர்தான் முடிவு என்ற திட்டத்தோடு போனான்.




கண்ணன் போனது சமாதானத் தூது அல்ல இழந்த உரிமையை வெல்வதற்கான வியூகமாக அது அமைந்தது. 5 நாடோ 5 ஊரோ 5 வீடோ பெறுவதாயின் அதற்கேற்ற வகையில் அவன் தூது அமைந்திருக்கும்.

இன்று த.தே.கூ. அந்தக் கண்ணன் போன்று செயற்பட வேண்டும். உலக நாடுகள் எமக்கு இழைத்து விட்ட அநீதியின் குற்ற உணர்வில் இருக்கின்றன. அதனை நாம் எமக்குச் சார்பாக இலகுவில் திருப்ப முடியும். எமக்கு வாய்ப்பாக மகிந்த தலைமையில் உள்ள சிங்கள அரசு தப்பு மேல் தப்பாகத் தனது இன அழிப்பைச் செய்து வருகிறது.

சிங்களம் நடத்தும் அடாவடித் தனத்தால் எமது நாடும் வீடும் ஊரும் உறவும் சீரழிக்கப் படுகிறது. நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் மீளமுடியாத வரலாற்றின் அழிவில் தமிழரின் கனவை இழுத்துப் போகின்றது. எமக்கு இப்போது அவசரமும் அவசியமும் பிச்சை அல்ல. எம்மிடம் உள்ளதை எல்லாம் கடிச்சுக் குதறி எடுக்கும் சிங்களப் பேரினவாதம் என்ற நாயிடம் இருந்து தப்பித்துக் கொள்வதே.

றொபேர்ட் ஓ பிளேக்குக்கோ இவருக்குப் பின்னால் உள்ள நாடுகளுக்கோ எமது நலனில் துளியும் அக்கறை இல்லை என்பதைத் தமிழினம் புரிந்து கொள்ள வேண்டும். புலிகளைப் பேச்சில் இருந்து ஒழித்துக் கட்டி நடந்து முடிந்த போரைத் தொடக்கி நடத்தி முடித்ததில் பிளேக்கின் பங்கு பாரியது என்பதை அவரது கடந்த காலச் செயற்பாடுகளை அவதானிப்பவர் அறிவர்.

இன்று மகிந்தவுடன் பேச வற்புறுத்தும் அனைவரும் எப்படியாயினும் எமது நாட்டில் காலூன்றிப் பத்தோடு பதினொன்றாக வளங்களைச் சுரண்டிப் போவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். எனவே நாம் இவர்களின் சொற்படி நடந்து எதுவும் பெற முடியாது. அப்படி நாம் ஏதாவது பெற வேண்டும் என்ற நல்ல நோக்கமும் அவர்களுக்குக் கிடையாது. எனவே எதற்காக நாம் பேசப் போய்க் காலத்தைக் கடத்தி உள்ளதையும் பறி கொடுக்க வேண்டும்?

இப்போதும் சொல்கிறோம் சர்வதேச கண்காணிப்பும் உறுதிப் படுத்தலும் இல்லாத எந்தப் பேச்சிலும் தமிழர் சார்பாக த.தே.கூ. உட்பட எவருமே பங்கு பெறுவது தமிழரின் தேசத்துக்கும் மக்களுக்கும் செய்யும் மிகப் பெரும் துரோகம். அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின் வருங்காலச் சந்ததி கூட தனது அரசியல் உரிமை பற்றிப் பேசக்கூட முடியாத அடிமைத் தனத்தில் தமிழ் மக்களை தள்ளி விடுவதாய் அது அமையும். நாம் இப்போது கேட்க வேண்டியது பிச்சை அல்ல இருப்பதைக் கடிச்சுக் குதறி எடுக்கும் நாயிடம் தப்புவதே!

Swiss, Zürich மாநகரில்

APIRAA TEXTILES

Apira Textiles
Stauffacher Str. 149
8004 Zürich, Switzerland

Tel: 043 233 54 54
Fax: 043 243 99 57

அனைத்து விதமான நிகழ்வுகளுக்கும்
உங்களை இசையால் மகிழவைக்க
நாடுங்கள்

வசீகரஸ்வரங்கள்
Switzerland
தொடர்புகளுக்கு: வசீ
0041 78 300 03 73

சகல வசதிகளுடன் ஓர் தமிழ்
உணவகம்

அண்ணாச்சி
உணவகம்

209, rue du fdg. St. Denis
75010 Paris
Tel: 01 46 07 38 12

CAFE BHARATH

Specialitées Indienne & Srilankaise

இலங்கை,
இந்திய உணவுவகைள்,
புரியாணி, தோசை வகைகள்.

67, rue Louis Blanc, 75010 Paris
Tel: 01 58 20 06 20
M°: La Chapelle / Gare du Nord

CITY CAR CENTER

தங்களது வாகனங்களை விற்பதற்கோ
அல்லது மிகக் குறைந்த
விலையில் வாகனங்களைப்
பெற்றுக்கொள்வதற்கோ
எம்மை நாடுங்கள்.

Münster Str. 61, 59065 Hamm, Germany

Tel: 02381 6 04 83 Fax: 02381 48 89 05

Catering Coordinator:
R.P. Paramesh

GGS
Food Service

Providing quality catering in Germany

Tel: 02305 967375
Mobile: 01779391607

ஜேர்மனியில் தரம், உத்தரவாதத்துடன்
நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் ஸ்தாபனம்

SUN TVயின்
நீண்ட கால
விநியோகிஸ்தர்

TJB
BROTHERS
ASIAN SUPERMARKET

R. Ragunathan
Parkhofstr. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

Deutsche Bank
Konto Nr: 474 11 53
BLZ: 390 700 24

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

# Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

**Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de**

## எமது நிறுவனம் 20 வருட நிறைவைமுன்னிட்டு...

**01.10.11** முதல் 31.12.2011 வரை மொத்த
கொள்வனவாளர்களுக்கு சிறப்பு மலிவு
விற்பனையும் அத்துடன் சில்லறை
வாடிக்கையாளருக்கு நீங்கள் செய்யும்
ஒவ்வொரு கொள்வனவுக்கும் மலிவுவிலை
மட்டுமல்ல அன்பளிப்பாக புத்தம்புதிய திரைப்பட
DVD யும் வழங்கப்படும் இவைமட்டுமல்ல
வாழ்நாள் முழுவதும் 5 வீதமான கழிவில்
பொருட்களை பெற்றுக் கொள்ளும்
வாடிக்கையாளர் அட்டையும் வழங்கப்படும்.

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869


Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

வர்த்தகர்களே நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்
அட்டையை 4 வீதக்கழிவாக மாற்றிக்கொள்ளலாம்!

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

இச்சலுகை
31.12.11
வரை மட்டுமே





Super Shopping Deepavali Super Sale Super Shopping Deepavali Super Sale
பிரமாண்டமான... மூன்று காட்சி அறைகள்
தங்க நகைகளின் சமுத்திரம்
உயர்தர பட்டு ஆடைகளின் ஆலயம்
ரெடிமேட் ஆடைகளின் சிகரம்
P.S.
உங்கள் முல்லைகம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
142
P.S.பவான் அண்ணாச்சி
P.S. 50 Parkplätze
P.S. 50 தரிப்பிடம்
Parking
50 Parkplätze vor dem Laden
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.30
உங்கள் முல்லைகம்
P.S. பவான்
அண்ணாச்சி கடையின்
Deepavali
Super Sale
Super Shopping
மக்கள் மனம் குளிர வேறெங்கும்
இல்லா விலை குறைப்பு !
Berlin மாநகரில்
2011 Oct. 12 புதன், 13 வியாழன், 14 வெள்ளி
இடம் : Bundesalle 160,
10715 Berlin
[உபான் மூலம் வருபவர்கள் U9 U Bahnhof Bundesplatz-ல் இறங்கி வரவும்]
H.P : 01722607388, 01724406514
Mülheim மாநகரில்
2011 Oct. 15 சனி முதல் 25 செவ்வாய் வரை
இடம் : Eppinghoferstr. 142,
45468 Mülheim an der Ruhr
(முக்கிய குறிப்பு "MH Hauptbahnhof" இல்
இருந்து 200 மீட்டர் தூரத்தில்
P.S. பவான் அண்ணாச்சி கடை அமைந்துள்ளது)
மலிவு விற்பனை நடைபெறும் காலங்களில் வரும் விடுமுறை நாட்களிலும் மற்றும் மலிவு விற்பனை
நடைபெறும் காலங்களில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது ஸ்தாபனம் திறந்திருக்கும்.
மேலதிக விபரங்களுக்கு
www.lankasri.com
www.ps-import-export.com
நேரம் : காலை 10.00 மணி முதல்
இரவு 8.30 மணி வரை
Tel : 0208 4448958 Fax : 0208 4447943 H.P : 01722607388

மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்

# Lycamobile

Appelez le monde pour moins cher

# 60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!

இணைப்புக் கட்டணம் இல்லை.!

0 ct/நிமிடம்*

- இந்தியா
- இலங்கை
- மலேசியா
- ஐரோப்பா
- கனடா
- அமெரிக்கா
- சிங்கப்பூர்
- குவைத்
- சவூதி அரேபியா

*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்

## பிரான்ஸ்

| வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி | உள்நாட்டு குறுந்தகவல் |
|---|---|---|
| 0 Ct/நிமிடம்* | 12 Ct/நிமிடம்** | 9 Ct/(SMS) |

லில் இருந்து

Lycamobile 0 Ct* Lycamobile

*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்ஜீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், பங்களாதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோட் டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹாங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொரக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, ரொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள கைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். **சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris.

**ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.

Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்

SPF phoneo extenso RELAY PRESSE dape PANINI

01 77 72 23 22

www.lycamobile.fr